பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 05 செவ்வாய்க்கிழமை (21-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:301

## வடிவேல் சுரேஷுக்கு கொலைப் பயமுறுத்தல் என பொலீஸில் முறைப்பாடு

பதுளை,செப்.21

இ.தொ.காவைச் சேர்ந்த பதுளை நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்"க்கு கடந்த இரு தினங்களாகக் கொலைப் பயமுறுத்தல் - அச்சுறுத்தல்கள் - தொலைபேசி ஊடாக விடுக்கப்பட்டு வருவதாக, பதுளைப் பொலீஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து இ.தொ.கா. தலைவரும் எம்.பியுமான ஆறுமுகன் தொண்டமானுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (க-3)

## யாழ்.பல்கலை பதிவாளர் மீதான விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.பல்கலைக்கழகத்தின் பதிவாளர் திருமதி என்.தங்கராசா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை நேற்று ஆரம்பமாகியது.

இதுதொடர்பாக, விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள குழு, அதன் தலைவர் மேலதிக அரச அதிபர் வி.சிவசுவாமி தலைமையில் யாழ். செயலகத்தில் நேற்றுக் கூடியது. இக்குழுவில் ஓய்வுபெற்ற தபாலதிபர் எஸ்.மார்க்கண்டு, ஓய்வுபெற்ற திட்டப்பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பதிவாளர் மீது சுமத்தப்பட்டுள்ள நான்கு குற்றச்சாட்டுகள் தொடர்பாகப் பல ஆட்சேபங்களை அவர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்காக

# அரசையும் புலிகளையும் திடமான முடிவு எடுக்க வேண்டுகிறது கனடா!

கொழும்பு,செப்ரெம்பர்21

**சமாதான முயற்சிகளில் உள்ள தேக்க நிலையை அகற்றி, அதை முன்நகர்த்துவதற்கு வசதியாகத் திடமான முடிவுகளை எடுக்க முன்வருமாறு இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் கனடா கேட்டுள்ளது.**

கொழும்புக்கான கனேடியத் தூதுவர் வலேரி ரேமண்ட் அம்மையார் நேற்றுக் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்ததையொட்டி கனேடியத் தூதரகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நோர்வே அனுசரணையில் நடைபெறும் அமைதி முயற்சிகளுக்குக் கனடாவின் வலுவான ஆதரவை மீண்டும் இச்சந்திப்பின்போது உறுதிப்படுத்திக் கருத்து வெளியிட்ட கனேடியத் தூதுவர், சமாதானப் பேச்சுக்கள் மீளத் தொடங்காமல் தடைப்பட்டிருப்பது குறித்துத் தனது கவலையையும் வெளியிட்டார்.

சமாதானப் பேச்சுக்களுக்குத் திரும்பும்படியும் சமாதான முயற்சிகளில் விட்டுக்கொடுப்புகளை வெளிப்படுத்தும்படியும் விடுதலைப் புலிகளை அவர் கோரினார்.

யுத்த நிறுத்தத்தை முற்றாக மதிக்கும்படி

(16 ஆம் பக்கம் பார்க்க)

# கனடா 'பொங்கு தமிழ்' நிகழ்வு திட்டமிட்டபடியே சனியன்று!

### எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பெரும் எடுப்பில் ஏற்பாடு

றொறன்ரோ,செப்.21

கடும் சிங்களப் போக்குப் பேரினவாத அமைப்புக்களினதும், சில தமிழ் விரோதக் குழுக்களினதும் எதிர்ப்புக்கும் மத்தியிலும் கனடாவில் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு திட்டமிட்டபடி எதிர்வரும் சனிக்கிழமை றொறன்ரோ நகரில் நடைபெறவிருக்கின்றது.

இந்தப் 'பொங்குதமிழ்' நிகழ்வைத் தடுப்பதற்கான - விஷமத்தனமான - பிரசாரங்களில் கனடாவில் உள்ள சில கடும் போக்குச் சிங்கள அமைப்புக்களைச் சேர்ந்தோரும் தற்போது கனடாவில் தங்கியுள்ள யாழ். மாவட்ட முன்னாள் எம்.பியான வீ.ஆனந்தசங்கரியும் ஈடுபட்டிருக்கின்றார்கள் எனக் கூறப்படுகின்றது.

'பொங்கு தமிழ்' நிகழ்ச்சி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான - அவர்களுக்காகப் பிரசாரம் செய்கின்ற - ஒரு நடவடிக்கை என்றே இவர்கள் கூறிவருகின்றனராம்.

அதனால், இந்த நிகழ்வை நடத்துவதற்கு றொறன்ரோ மாநகர அதிகாரிகள் வழங்கிய அனுமதி ரத்துச்செய்யப்படவேண்டும் என்று இவர்கள் கோரியுள்ளனர். இதுதொடர்பான, உத்தியோகபூர்வ கடிதங்களையும் அவர்கள் அதிகாரிகளுக்கு அனுப்பி வருகின்றார்கள்.

'பொங்கு தமிழ்' புலிகளுக்கு ஆதரவான நிகழ்ச்சி என்றும் -

கனடாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருப்பதால் அந்த இயக்கத்துக்கு ஆதரவான நிகழ்வைக் கனடாவில் நடத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும்-

கடந்த இரு வாரங்களாகக் கனடாவில் தங்கியிருக்கும் வீ.ஆனந்தசங்கரி கனடா எம்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பரப்புக்கண்டானில் புலி உறுப்பினர் கைது!

கொழும்பு,செப்.21

மன்னார் பரப்புக்கண்டான் பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பிரவேசித்தார் என்று கூறப்படும் விடுதலைப் புலிகளின உறுப்பினர் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சைக்கிளொன்றில் பிரவேசித்த நாராயணன் புலேந்திரன் (வயது 28) என்ற இளைஞரே கைது செய்யப்பட்டவராவார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞரிடம் 12 ஆயிரம் ரூபா பணமும் விடுதலைப் புலிகளின் அடையாளத்தைக் குறிக்கும் அட்டையும் இருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# 'பொங்கு தமிழ்' நிகழ்வைக் குழப்ப கனடா இடமளியாது

### தமிழ்ச்செல்வன் நம்பிக்கை தெரிவிப்பு

கிளிநொச்சி,செப்.21

இலங்கை அரசுத் தரப்பு மற்றும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கும் நியாயப்பாட்டுக்கும் எதிரானவர் 'பொங்கு தமிழ்' நிகழ்வைக் குழப்பும் நோக்குடன் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்குக் கனடா அரசு பணிந்துபோகும் என்று நாம் கருதவில்லை.

- இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கிளிநொச்சியில் நேற்று முற்பகல் கனேடியத் தூதர் வலேரி ரேமண்டைச் சந்தித்த பின் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சியில உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பின் பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

கருத்துச் சுதந்திரத்தை மதிக்கும் நாடு கனடா. மக்கள் தமது கருத்தைச் சுதந்திரமாக

(16 ஆம் பக்கம் பார்க்க)

# போக்குவரத்து நேர நீடிப்பு: இதுவரை முடிவு ஏதுமில்லை

### செஞ்சிலுவையின் யாழ்.அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

ஏ-9 பாதையில் முகமாலை மற்றும் ஓமந்தை ஊடான போக்குவரத்து நேரத்தை நீடிப்பது தொடர்பாக எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.வதிவிடப் பிரதிநிதி பிரட்டிக் றெபேட்டிஸ் தெரிவித்தார்.

நேர நீடிப்புத் தொடர்பாக அவரிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த மாதம் முதலாம் திகதி முகமாலை மற்றும் ஓமந்தை ஊடான போக்குவரத்தை இரவு 7 மணி வரை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதியின் ஆலோசகரும் புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் தெரி

(16 ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணியில் இருந்திருந்தால் மக்களை வீதிக்கு இறக்கியிருப்பாராம் பிரதமர் மஹிந்த

கொழும்பு,செப்.21

"நான் இன்று எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் அன்றாடம் அதிகரித்துவரும் விலைவாசி உயர்வை எதிர்த்து வீதியில் இறங்கி பாரிய மக்கள் போராட்டம் ஒன்றை நடத்தியிருப்பேன். ஆனால், பிரதமர் என்ற பதவி என் கைகளைக் கட்டிப் போட்டுள்ளது" - என்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

நேற்றுமுன்தினம் கண்டியில் நடைபெற்ற பொதுவைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இப்படிக் கூறினார்.

அரிசி உட்பட அன்றாட உணவுப்பொருள்களினதும் அத்தியாவசியப் பொருள்களினதும் விலை அதிகரித்த வண்ணமே உள்ளது. அவற்றைக் கட்டுப்படுத்த முடியாதநிலை அரசிற்கு ஏற்பட்டுள்ளது.

இப்படியான நிலையில் நான் எதிர்க்கட்சி வரிசையில் இருந்திருந்தால் விலைவாசி உயர்வைக் கண்டித்து வீதிப்போராட்டத்தில் குதித்திருப்பேன்.

ஆனால், நான் பிரதமராக இருப்பதால் சற்றுப்பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டிய

(16 ஆம் பக்கம் பார்க்க)

# ரத்னசிறிக்கு எதிரான வழக்கை விசாரிக்க இடைக்காலத் தடை!

### மேன்முறையீட்டு மன்றுக்கு விதிப்பு

அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை அந்த நீதிமன்றம் விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

அடுத்த மாதம் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதிவரை இந்த இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.ம.சு. கூட்டமைப்பு தேர்தலுக்கு முன்னர் தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பித்த தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் வரிசையில் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை.

எனினும், தேர்தலின் பின்னர் ஐ.ம.சு. கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியாக அவர் நியமிக்கப்பட்டார். இதற்கு ஆட்சேபம் தெரிவித்து, மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தைச் சேர்ந்த ரொஹான் எதிரிசிங்க தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரிக்கும் அதிகாரம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சொந்த வளங்களைக் கொண்டே நாட்டை முன்னேற்றலாம்

# எடுத்ததற்கெல்லாம் வெளிநாடுகளிடம் கையேந்தும் பழக்கத்தைக் கைவிடுங்கள்!

## அபிவிருத்திப் பாதைக்கு இதுவே வழி என்கிறார் ஜப்பான் அதிகாரி

யாழ்ப்பாணம்,செப்.21

இந்த நாட்டிலேயுள்ள வளங்களைக் கொண்டு புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடிப்பதற்கு, முயற்சித்தால் நிச்சயமாக இந்த நாட்டை முன்னேற்றலாம்.

இதனைவிடுத்து, எடுத்ததற்கெல்லாம் வெளிநாடுகளின் உதவிக்காகக் கையேந்துவது இந்த நாட்டின் வளங்களை அழிக்க முற்படுவது போலாகும்.

யாழ்ப்பாணத்தில் வைத்து இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார் ஜப்பான் நாட்டின் தொழில்நுட்ப உதவி வழங்கும் தூதரகங்களின் முதுநிலை ஆலோசகர் தனக்குரே.

இலங்கையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளின் நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கென வருகைதந்த அவர், நேற்று யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் செய்திருந்தார்.

அங்கு நடைபெற்ற நிகழ்வில் அவர் கருத்துரை வழங்கினார்.

ஜப்பான் நாடு அபிவிருத்தியடைந்த - தொழில்நுட்பத்தில் உயர்ந்த - நாடாக மிளிர்வதற்கு அங்குள்ள மக்கள் தமது சொந்த வளங்களைக் கொண்டு கடும் முயற்சியுடன் உழைத்தமையே காரணம் என்று கூறிய அவர், அதேபோல இலங்கையர்களும் சொந்த வளங்களைப் பயன்படுத்தி கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டு மேலும் முன்னேறலாம் என்று சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

ஒரு நாட்டின் வளர்ச்சியானது அந்த நாட்டில் உருவாகும் மாணவர்களின் திறனிலேயே தங்கியுள்ளது. அந்த இரண்டில் ஒன்றை வைத்து அந்த நாட்டின் வளர்ச்சி தொடர்பாகத் தெரிந்துகொள்ள முடியும்.

அந்தவகையில், எந்த ஒரு நாட்டிலும் ஏதோ ஒரு வகையான திறன்கள் காணப்படும். அவற்றைக் கொண்டு புதிய செய்திறன்களை உருவாக்க முயற்சிக்கவேண்டும்.

எமது நாடான ஜப்பானின் வளர்ச்சிக்கும் இதுவே காரணமாக அமைகின்றது.

எமது நாட்டின் வளர்ச்சிக்காக நமது மூதாதையர்கள் எவ்வளவோ பாடுபட்டார்கள். அந்த முயற்சிகளில் வெற்றியடைவதற்காக அவர்கள் வாரத்தின் 7 நாள்களும் தமது முயற்சியினை மேற்கொண்டு புதிய புதிய சாதனைகளையும் புதிய புதிய கண்டுபிடிப்புக்களையும் உருவாக்கினர்.

அவர்களின் அந்த முயற்சி காரணமாகவே நாங்கள் இந்த நிலையை எட்டியுள்ளோம்.

நான் இன்றுடன் இலங்கைக்கு மூன்று தடவைகள் வந்துள்ளேன். இலங்கை மாணவர்களிடம் குறிப்பாக, யாழ்ப்பாண மாணவர்களிடம் புதிய தொழில்நுட்ப திறமைகளை வெளிக்காட்டும் ஆர்வம் உண்டு என நான் அறிந்தும் கண்டும் உள்ளேன்.

இம்மாணவர்களின் முயற்சிகள் மழுங்கடிக்கப்படுவதற்கு ஒரு காரணம் என்னவெனில் எமது நாட்டில், எமது பிரதேசத்தில் என்ன வளம் இருக்கின்றது. இதனைக்கொண்டு நாம் எதுவுமே செய்யமுடியாது என எண்ணுவதே அவர்களின் முயற்சிக்கு முக்கிய தடங்கலாக அமைந்து விடுகிறது.

இயன்றவரை புதிய தொழில் வழிகாட்டல்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும். அதனை தொடர்முயற்சிக்கு வேண்டிய உதவிகளை ஏனைய நாடுகளிடம் இருந்து பெறலாம்.

அவ்வாறு மாணவர்கள் தம்மால் இயன்றவரை எடுக்கும் முயற்சிகளில் கிடைக்கும் பலன்களை எதுவித தாமதங்களும் ஏற்படுத்தாது நூல்களாக்கி வெளியிடப் பழகிக்கொள்ள வேண்டும்.

இவ்வாறான நடைமுறையினை மாணவர்கள் மேற்கொள்ளும்போது அவர்களிடம் உள்ள திறன்கள் வெளிக்கொண்டு வரப்படுவதுடன் மேலும் மேலும் அவர்களுக்கு ஊக்கங்கள் ஏற்படும்.

இதைவிட்டு, எடுத்ததற்கெல்லாம் பிறநாடுகளை நம்பி இருப்பது இந்த நாட்டின் வளங்களை இந்த நாட்டவரே அழிப்பது போன்றதாகும்.

யாழ்ப்பாணத்தில் தொழில் வழிகாட்டல் நடைமுறைகளை மாணவர்கள் பின்பற்றவேண்டும். அதன்படி யாழ்ப்பாணத்தில் கடந்த கால யுத்தத்தினால் அழிக்கப்பட்ட கட்டடங்கள் உட்பட அனைத்து வளங்களையும் கட்டியெழுப்ப மாணவர்கள் முயற்சிகள் மேற்கொண்டு தொழில் வழிகாட்டல்களை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு இப்போதுமுதல் மாணவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்களானால் இன்னும் குறுகியகாலப் பகுதியில் இந்த நாடும் அபிவிருத்தியடைந்து விடும் என்பதில் ஐயம் இல்லை - என்றார் அவர்.

(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

(4-6)




நேற்று யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகைதந்த ஜப்பானிய அதிகாரி தனக்குரே மங்கள வாத்தியங்கள் சகிதம் அழைத்துவரப்படுவதையும் அங்கு நடைபெற்ற நிகழ்வில் அவர் உரையாற்றுவதையும் அருகில் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ஆர்.யோகராஜன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: புஷ்பா)*

## நகர வீதிகள் புனரமைப்புக்கு 'நிகொட்' நிதி

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.மாநகரசபைப் பகுதிக்குள் ஏழு வீதிகளைப் புனரமைப்பதற்கு என 'நிகொட்' நிறுவனம் 28 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இராமநாதன் வீதி, மலர்மகள் வீதி, செல்லாத்தை வீதி, இராஜேஸ்வரி வீதி, புருடி வீதி, பெரியதம்பிரான் வீதி, நாவலர் வீதி (மனோகராச் சந்தியிலிருந்து நாவாந்துறை வீதி வரை) ஆகிய ஏழு வீதிகளையும் திருத்தியமைப்பதற்கே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரியாலை மத்தி, தெற்கிலுள்ள திருந்தவெளி அரங்கினைப் புனரமைப்பதற்கு என ஏழு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது என மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா அறிவித்துள்ளார். (எ-9)

## நிந்தவூரில் நேற்று டாக்டர்கள், தாதியர் பணிப் பகிஷ்கரிப்பு

நிந்தவூர்,செப்.21

நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற டாக்டர்கள் தாதிமார்கள் மற்றும் ஊழியர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அத்துடன், ஆர்ப்பாட்டம் ஒன்றையும் அவர்கள் நடத்தினர்.

இந்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியான டாக்டர் எம்.எம்.றிஸாவின் கார் மீது கடந்த சனிக்கிழமையன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுமே அவர்கள் பணிப் பகிஷ்கரிப்பிலும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினர். வைத்திய அதிகாரியின் கார் மீது தாக்குதல் நடத்தியோரை உடனடியாகக் கைது செய்யவேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த வேலைப் பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக நேற்று நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்தன.

இதேவேளை, அந்த வேலைப் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவாக நிந்தவூர் பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலை நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி மீது நடத்தப்பட்ட இத்தாக்குதல் தொடர்பாக எழுந்துள்ள நிலைமையையும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அரசவைத்திய அதிகாரிகள் சங்க கல்முனைக் கிளை நேற்று அவசரமாகக் கூடி ஆராய்ந்தது. (க-3)

## தேர்தல் திருத்தச் சட்டவரைவு இன்று விவாதத்துக்கு வருகிறது

கொழும்பு,செப்.21

நாடாளுமன்றத்தில் இன்று தேர்தல்கள் திருத்தச் சட்டவரைவு மீதான விவாதம் நடைபெறும்.

ஜனாதிபதி, நாடாளுமன்றம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களின் போதும் சர்வசன வாக்கெடுப்புகளின்போதும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தே வாக்களிக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதே இந்தத் திருத்தச் சட்டவரைவின் நோக்கமாகும்.

இத்திருத்தச் சட்டத்தை நீதி அமைச்சர் டபிள்யூ.டி.ஜோன் செனவிரட்ன கடந்த அமர்வின்போது சபையில் சமர்ப்பித்திருந்தார்.

நாட்டில் 35 வீதமானவர்கள் தேசிய அடையாள அட்டைகள் இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். எனவே, வாக்களிக்கும் தகுதி உடையவர்கள் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டைகள் கிடைக்கும்வரை இச்சட்டததை நடைமுறைப்படுத்துவதை பிற்போடவேண்டும் எனக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது தெரிந்ததே.

எனினும், இன்று இவ்விவகாரம் விவாதிக்கப்படவுள்ளது. விவாதத்தின்போது இந்த விவகாரம் ஏற்கப்படுமா? எதிர்க்கட்சிகள் இதனை ஆதரிக்குமா? - இன்று தெரியும். (க-3)

# தோட்டத் தொழிலாளருக்கு உரிய சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்க முடியாதவர்கள் ஒதுங்கட்டும்!

## தொழிற்சங்கங்களுக்கு ஜே.வி.பியின் தமிழ் எம்.பி.சாட்டை

கொழும்பு,செப்.21

"தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாத தொழிற்சங்கத் தலைவர்கள் பகிரங்கமாகத் தமது தோல்வியை ஒப்புக்கொண்டு தமது தொழிற்சங்கங்களைக் கலைத்துவிட வேண்டும். அமைச்சர்கள் மீது வீணாகப் பழிபோட்டு தமது கையாலாகாத்தனத்தை மூடிமறைக்க முயற்சிக்கக் கூடாது."

- இப்படிச் சீறுகிறார் ஜே.வி.பியின் மலையக அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன். அவர் மேலும் கூறியதாவது:-

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாகக் கூட்டு ஒப்பந்தம் செய்கின்றோம். தோட்டக் கம்பனிகளுடன் பேச்சு நடத்துகின்றோம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி ஆகியன இதுவரை காலமும் பம்மாத்துக் காட்டிக் கொண்டிருந்தன.

ஏற்கனவே, தொழிலாளர்களை அடகு வைத்து இவர்களால் செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதியுடன் காலாவதியாகிவிட்டது.

ஆனால், இந்த மூன்று பங்காளித் தொழிற்சங்கங்களும் இவ்விடயம் தொடர்பாகத் தங்களைத் தவிர்ந்த மலையகத்தில் உள்ள ஏனைய தொழிற்சங்கங்களுடனும் பேசக்கூடாது எனத் துரைமார் சம்மேளனத்திற்கு நிபந்தனை விதித்திருந்தன.

கடைசியில் என்ன நடந்தது? இவர்களும் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்கவில்லை. பெற்றுக்கொடுக்க முன்வந்தவர்களையும் அதனைச் செய்யவிடவில்லை. இது வைக்கோல் பட்டறையில்கட்டிய நாயின் கதைபோலுள்ளது.

வழமையாகவே துரைமார் சம்மேளனத்திடம் 'சந்தோஷம்' வாங்கிக் கொண்டு ஒப்பம்போட்டு வந்தவர்களின பேரம் இம்முறை சரியாகப் படியவில்லை. தொழிலாளர்கள் விழித்துக்கொண்டனர்.

தோல்வியை ஒப்புக்கொள்ளும் துணிச்சல் இல்லாதவர்கள் இவர்கள்.

அந்த அமைச்சர் 400 ரூபா வழங்கலாம் என்றார். இந்த அமைச்சர் 500 ரூபா பெற்றுக் கொடுக்கமுடியும் என்கிறார். இதனால், நாங்கள் பேச்சில் இருந்து விலகிக்கொள்கிறோம். ஜனாதிபதி இவ்விடயத்தில் தலையிட்டு தொழிற்சங்கங்களுடனும் துரைமார் சம்மேளனத்துடனும் பேசி நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்று இவர்கள் இப்போது புதுக்கதை விடுகிறார்கள்.

இப்போதாவது இவர்கள் தமது தோல்வியை ஒப்புக்கொண்டு தமது தொழிற்சங்கங்களைக் கலைத்துவிட வேண்டும். ஜனாதிபதியிடமே எல்லாப் பொறுப்புக்களையும் ஒப்படைத்துவிடவேண்டும். ஜே.வி.பியினராகிய நாம் நாடாளுமன்றத்தின் மூலம் இதனைப் பெற்றுக்கொடுக்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் - எனவும் ஜே.வி.பியின் சந்திரசேகரன் எம்.பி. கூறினார். (க-3)

## கல்விப்பேரவை நடத்தும் எழுத்தாக்கத்திறன் தேர்வு

கிளிநொச்சி,செப்.21

உலக ஆசிரியர் நாளையொட்டி தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டிலான தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் தேர்வு எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அந்தந்த வலயங்களில் நடைபெறவிருக்கின்றது.

வலயக்கல்விப்பணிப்பாளர்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள நிலையங்களில் தேர்வு இடம்பெறும் என்று பேரவையின் செயலாளர் தெரிவித்தார்.

(எ-3)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

**பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் திங்கட்கிழமை, செப்-20-2004**

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1443.26 | 1441.70 | 1.56 | 0.11 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2139.40 | 2134.87 | 4.53 | 0.21 |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | 1493.58 | 1,491.96 | 1.62 | 0.11 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2222.40 | 2217.69 | 4.71 | 0.21 |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 273.0 | 357.5 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 13.5 | 12.6 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 3344 | 3520 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 354.8 | 354.4 | | |

**கம்பனி உரிமைப் பங்கு வழங்கல் தொடர்பான அறிவித்தல்கள்**

| கம்பனி பெயர் | விகிதம் | XR திகதி | உரிமம் கைமாறல் திகதி |
|---|---|---|---|
| செலிங்கோ செக்கியூரிட்டிஸ் + பினான்ஸியல்/சேர்விஸ் | 7.5 | 07-10-2004 | 19-10-2004 |

உதயன்

## ஈழத் தமிழர்களின் சமாதான தின ஏக்கம்!

இன்று நாட்டில் யுத்தம் இல்லை. அமைதி நிலவுகின்றது. சுடுகலன்கள் ஓய்ந்துவிட்டன. ஷெல் முழக்கமோ, பீரங்கி அதிர்வுகளோ, வேட்டுச் சத்தமோ இல்லை. உயிரிழப்புகளும் உடற்சேதங்களும் குறைந்துவிட்டன. தென்பகுதியின் படுகொலைகளுடன் ஒப்பிடுகையில் வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் மனித இழப்புகளும் குறைந்துவிட்டன. வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையும் வீழ்ந்துவிட்டது. உடைமை இழப்புகள், சேதங்களும் கணிசமான அளவுக்கு அற்றுப்போய்விட்டன.

- இவை எல்லாம் மகிழ்ச்சிக்குரிய அம்சங்கள் தான். ஆனால், அவற்றுக்குப்பின்னால் பேராபத்தும், போராபத்தும் மறைந்திருப்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

நாட்டில் அமைதி நிலவுவதால் சமாதானம் ஏற்பட்டு விட்டது என்று கொள்ளமுடியுமா?

யுத்தம் இல்லாத - குண்டுச் சத்தம் இல்லாத - நிலைமை சமாதான நிலை ஆகிவிடுமா?

இல்லை என்பதுதான் மனவருத்தத்துக்குரிய பதிலாகும்.

யுத்தம் இல்லாத இந்த நிலைமையைப் பரிபூரண சமாதானச் சூழ்நிலையாக மாற்றாவிட்டால் நாமும் நாடும் பேராபத்துக்களையும், பேரழிவுகளையும் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதுதான் யதார்த்தம்.

சர்வதேச சமாதான தினமான இன்று அதை நாம் கருத்தில் எடுப்பது முக்கியமானதாகும்.

யுத்தம் ஓய்ந்த இந்த அமைதி வேளையிலே நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்கான முயற்சிகள் முழுமூச்சில் மேற்கொள்ளப்படவேண்டும். தீர்வை நோக்கிய சமாதானப் பாதையிலே முன்நகர்வு அமைய வேண்டும்.

ஆனால், இன்று யதார்த்தத்தில் நடப்பது என்ன?

நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான சமாதான முயற்சிகள் நிரந்தரமாகத் தேங்கிவிட்டன; தடைப்பட்டுப் போய்விட்டன.

அமைதி வழியில் தீர்வைக் காணும் முயற்சிகளில் ஈடுபடவேண்டிய இருதரப்பினருக்கும் இடையில் பரஸ்பர நம்பகத்தன்மை தேய்ந்து, அவநம்பிக்கை பெருகியதால் ஒரு தரப்பை மற்றைய தரப்பு சந்தேகக் கண்கொண்டு நோக்கும் மோசமான சூழல் நிலவுகின்றது.

எனவே, யுத்தநிறுத்தம் இப்போதைக்குத் தாக்குப் பிடித்தாலும் - வெளியில் அமைதி நிலை நிலவினாலும் - உள்ளே வெறுப்பும், குரோதமும், அவநம்பிக்கையும், எரிச்சலும், கோபமும் கனன்று கொண்டிருக்கின்றன.

அவநம்பிக்கையின் எல்லையில் நிற்கும் இரு தரப்புமே பரஸ்பர யுத்த ஆயத்தங்களில் முழு மூச்சில் ஈடுபட்டிருப்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

ஆக, இந்த அமைதி நிலை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்தப்படாவிட்டால் அதன் பின்விளைவுகள் நினைத்துப்பார்க்க முடியாத விபரீதங்களை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

எனவே, இன்றைய யுத்தமற்ற சூழ்நிலை ஒரு வகையில் வரவேற்கப்பட்டாலும் மறுபுறத்தில் - அது பிழைத்தால் - மோசமான நிலைமையை எற்படுத்தும் என்பதால் அச்சம் தருவதாகவும் உள்ளது.

இந்த யுத்த நிறுத்தமும் அமைதி நிலையும் ஆக்கபூர்வமான பணிக்கு - நிரந்தரத் தீர்வை எட்டும் முயற்சிகளுக்கு - பயன்படும்போது அது வரவேற்கத்தக்கதாகவும் -

மாறாக, அழிவுக்கும் யுத்தத்துக்குமான தயாரிப்புப் பணிகளுக்கு - முன் ஆயத்த வேலைகளுக்கு - பயன்பட்டால் வெறுக்கப்படுவதாகவும் -

அமையும் என்பதை நாம் குறிப்பிட்டுக் காட்டத் தேவையில்லை.

ஆனால், நிஜத்தில் பின்னையதுதான் நடந்து கொண்டிருக்கின்றது.

இந்த யுத்தநிறுத்த காலம் அடுத்த அழிவு வேலைகளுக்கே ஆயத்த காலமாகின்றது - நிரந்தர அமைதிக்கான தயாரிப்புப் பணி முடங்கிவிட்டதால், இந்த அமைதிக் காலம் ஆக்கபூர்வமான பயன்களைத் தரப்போகின்றதா அல்லது அழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றதா என்பதைத் தீர்மானிக்கப்போகின்றவர்களாக தென்னிலங்கை அரசியல் தலைவர்களே இருக்கின்றார்கள் என்பதையும் முழு நாடும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இந்த இலங்கைத் தீவில் ஏனைய இனங்களுக்கு உள்ள அதே உரிமைகளுடனும், கௌரவத்துடனும், தமது தாயகப் பிரதேசம், பாரம்பரியம், வாழ்வியல் ஆகியவற்றைப் பேணும் வகையிலுமான அரசியல் முறைமையுடன் கூடிய தீர்வே அவர்களது எதிர்பார்ப்பு; அபிலாஷை; வேணவா.

அதைத் தருவதுதான் சமாதானம், அமைதி. இல்லையேல் அழிவும் யுத்தமும் தவிர்க்க முடியாதவையாகிவிடும்.

அந்தத் தீவு கிட்டுமா? நிரந்தரச் சமாதானம் சாத்தியமாகுமா? இதுதான் உரிமைக்காகப் போராடும் ஈழத்தமிழினத்தின் சமாதான தின ஏக்கமாகும்.

உலக சமாதான தினத்தையொட்டி

## மதுபான நிலையங்கள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை மூடுமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,செப்.21

உலக சமாதான தினத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டிலுள்ள மதுபான விற்பனை நிலையங்கள் மற்றும் இறைச்சிக் கடைகள் அனைத்தையும் இன்று முழு நாளும் மூடுமாறு யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சாந்த வனகுரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலக சமாதான தினம் இன்றாகும்.

இத்தினத்தில் அனைவரும் அமைதியாகவும் சாந்தமாகவும் வாழவேண்டும். அதற்கமைய குடாநாட்டிலுள்ள மதுபான விற்பனை நிலையங்கள் மற்றும் இறைச்சிக் கடைகள் யாவற்றையும் மூடி உதவுமாறு அவற்றின் உரிமையாளர்களை பொலீஸ் அத்தியட்சகர் கேட்டுள்ளார்.

இதேவேளை, இத்தினத்தை முன்னிட்டு யாழ்.பொலீஸ் நிலையத்தினரால் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

சமாதானத்தை வலியுறுத்தும் துண்டுப்பிரசுரங்களை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்குதல், பதாகைகளைக் கட்டுதல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கிடையே சமாதான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான போட்டிகளை நடத்துதல் போன்ற நடவடிக்கைகள் யாழ்.பொலீஸ் நிலையத்தினரால் முன்னெடுக்கப்படவுள்ளன. (10-5)

## நாகர்கோவில் படுகொலை நினைவுநாள்

யாழ்ப்பாணம்,செப்.21

1995ஆம் ஆண்டு நாகர்கோவில் மத்திய மகாவித்தியாலயத்தில் புக்காரா விமானம் தாக்கி 20 மாணவர் பலியான 9ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நாளை புதன்கிழமை நண்பகல் 12மணிக்கு பாடசாலை தற்காலிகமாக இயங்கிவரும் புலோலி றோ.க.பாடசாலையில் இடம்பெறும்.

நாகர்கோவில் மத்திய மகாவித்தியாலய அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுகளை பாடசாலைச் சமூகம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த விமானத் தாக்குதலில் 20 மாணவர்கள் கொல்லப்பட்டதுடன் 48 மாணவர்கள் வரை காயமடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (10-202)

## போக்குவரத்து வீதியில் வெடிக்காத நிலையில் மிதிவெடிகள்

கைதடி,செப்.21

மக்கள் பாவனையில் உள்ள வீதி ஒன்றைச் சிரமதான முறையில் துப்பரவு செய்த வேளை வெடிக்காத நிலையில் இருந்த இரண்டு மிதிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் கைதடி நவபுரத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

இப்பகுதியைச் சேர்ந்த சனசமூக நிலையம் ஒன்றின் அங்கத்தவர்கள் சிலர் அன்றைய தினம் அவ்வீதியைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தபோதே இம்மிதிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக அப்பகுதி கிராமசேவையாளருக்கு அறிவிக்கப்பட்டதோடு மேலும் அங்கு மிதிவெடி இருக்கலாம் என்ற அச்சத்தில் உடனடியாக அப்பாதையூடான போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மிதிவெடி அகற்றும் தொண்டு நிறுவனத்துக்கும் இதுபற்றி அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை அங்குள்ள சனசமூக நிலைய நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர். (10-75)

## கடற்கரையோரத்தில் கல் அகழ்வு: குடியிருப்புகளுக்குள் நீர்புகும் அபாயம்

கைதடியைச் சுற்றியுள்ள கடற்கரைப் பிரதேசங்களில் அண்மைக்காலமாகக் கற்கள் அகழும்பணி மிகத் தீவிரமாக இடம்பெற்று வருவதாகப் பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கைதடி கிழக்கு, கைதடி வடக்கு ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கல் அகழப்பட்டு வருகின்றது. இதனால் மழைகாலங்களில் கடல் நீர் மக்கள் குடியிருப்புகளுக்குள் உட்புகுவதோடு நன்னீரும் உவர் நீராக மாற வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்தக் கற்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் கட்டடப்பணிகள் தரமற்றதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்டோர் இவ்விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுத்து இக்கல் அகழ்வுப் பணியை முற்றாகத் தடுத்து நிறுத்துவதோடு சூழல்நலனையும் பேண வேண்டும் என இப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (10-75)

## பள்ளிமுனை கடற்கரையில் வலம்புரிச் சங்குகள்

மன்னார்,செப்.21

மன்னார், பள்ளிமுனைக் கடற்கரையில் அங்குள்ள மக்களால் வலம்புரிச் சங்குகள் இரண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சங்குகளின் பெறுமதி சுமார் 3 லட்சம் ரூபாவாக இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சங்குகள் கிடைத்த விடயத்தை அறிந்த அப்பகுதி மக்கள் மேலும் சில வலம்புரிச் சங்குகளைக் கண்டெடுத்ததாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, வெளியிடங்களிலிருந்தும ஏராளமான மக்கள் பள்ளிமுனைக் கடறகரைக்கு வருகைதந்து சங்குகளைத் தேடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (10)

## ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர்

வலி.வடக்கு,செப்.21

பெண்களுடன் சேஷ்டை புரிந்தவர்களைப் படம் பிடிக்க முனைந்த ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். கடந்த சனிக்கிழமை மாலை 5மணியளவில் காரைநகர் கசூரினா கடற்கரையில் இச்சம்பவம் இடம்பெற்றது. கசூரினா கடற்கரையில் குளித்துக்கொண்டு நின்ற பெண்களுடன் மதுபோதையில் நின்ற இளைஞர் குழுவொன்று வேண்டத்தகாத செயல்களில் ஈடுபட்ட வேளையிலேயே ஊடகவியலாளர்கள் படம்பிடிக்க முற்பட்டனர். ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதுடன் இதனைத் தட்டிக்கேட்கச் சென்ற பொதுமக்களும் இளைஞர்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொலீஸாருககு தகவல் அறிவிக்கப்பட்டதை அடுத்து உரிய இடத்துக்கு விரைந்த பொலீஸார் மது போதையில் நின்று கலாட்டா செய்துகொண்டிருந்த மூன்று இளைஞர்களைக் கைது செய்தனர். (10-86)

## நல்லொழுக்க தினத்தையொட்டி பாடசாலை மாணவரிடையே போட்டிகள்

வலிகாமம் தெற்கு,செப்.21

சர்வதேச நல்லொழுக்க தினததை முன்னிட்டு போரூட் நிறுவனத்தின் சக்தி அமைப்பினரால் உடுவில், தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, சித்திரம், மரபு - புதுக் கவிதை, ஆக்கம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாலர் பிரிவு (தரம் 5,6), கீழ்ப் பிரிவு (தரம்7,8), இடைநிலைப்பிரிவு (தரம் 9,10), மேற்பிரிவு (தரம் 11,12,13) ஆகிய நிலைகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

சித்திரங்கள் மது, புகைத்தல், போதைப் பொருள் என்பவற்றின் பாவனையால் ஏற்படும் தீயவிளைவுகளைச் சித்திரிப்பவையாக அமையவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கும், கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் சான்றிதழ்களுடன் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

பரிசு பெற்ற ஆக்கங்கள் சக்தி அமைப்பினால் வெளியிடப்படும் 'சக்தி' மலரில் பிரசுரிக்கப்படும்.

கோட்ட மட்டத்திலான போட்டிகள் இம்மாதம் 28ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8-152)

## குடாநாட்டுக்கு இன்று வருகை

குருநாகல் தேவசரண அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த 60 பேர் கொண்ட குழுவொன்று இருநாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்.குடாநாட்டுக்கு வருகைதரவுள்ளது.

கீர்த்தி குணதிலக தலைமையில் வருகை தரும் இக்குழுவினர் இன்று பிற்பகல் 3.30மணிக்கு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அதன் பிரதிநிதிகளைச் சந்தித்து யாழ். குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர். (10-5)

## கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பவளவிழா நடைபவனி இன்று

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின்(ஸ்ரான்லிக் கல்லூரி) பவளவிழா நடைபவனி இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பவனியானது கல்லூரி முன்றிலிலிருந்து ஆரம்பமாகி கல்லூரி வீதி, யாழ். கண்டி வீதி, கச்சேரி - நல்லூர் வீதி, ஆசீர்வாதப்பர் வீதி, கனகரத்தினம் வீதி, மாம்பழம் சந்தி, சின்னக்கிணற்றடி வீதி மற்றும் நாவலர் வீதியூடாக மீண்டும் கல்லூரியை வந்தடையும்.

பாடசாலையின் பெருமையை எடுத்துக்காட்டும் வகையில் இடம்பெறும் இப்பவனியில் வித்தியாலய ஸ்தாபகர் அமரர் கனகரத்தினத்தின் உருவச்சிலை எடுத்துவரப்படுவதோடு, கல்லூரி மன்றங்களின் காட்சி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக வித்தியாலயத்தின் பழைய மாணவரும், யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தருமான பேராசிரியர் சு.மோகனதாஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (10-202)

### உதயவாக்கு

உலக நலனில் உன்நலன் அடங்குவது நன்று.

### நாளை

புரட்டாதி 6
புதன்கிழமை
(22.09.2004)
திதி : அட்டமி
முற்பகல் 8.13
நட்சத்திரம் : மூலம்
முற்பகல் 11.58
சுபநேரம்: 4.32 - 6.320
ராகுகாலம்: 12.02 - 1.32
(பழைய நேரப்படி)

### திலீபனின் கனவுகள்

பல்கலைப் பட்டப்படிப்பை பக்குவமாய் ஒதுக்கினான்
பதறிய மக்களின் விடிவிற்காய் எழுந்தான்
கரிகாலன் படையில் புலியென நின்றான்
கயவரை அழித்து வெற்றிகள் கண்டான்
தேனமுதத் தமிழ்மொழியின் உரிமை காத்தான்
தித்திக்கும் இளமையினைத் தியாகம் செய்தான்
தங்கத் தலைவனின் ஆணை ஏற்றான்
தமிழர் நிலத்தில் வேள்வி தொடக்கினான்
அகிலம் அதிர்ந்திட அகிம்சையில் பூண்டான்
அண்ணல் காந்தியை அகிம்சையில் வென்றான்
அண்ணன் திலீபனின் கனவுகள் நனவாகிடும்
ஆண்டதோர் தேசம் மீண்டும் உருவாகிடும்.

- ஆழியூர் சீ.ஏ.யசீகரன்.



# தகவல் தொழில்நுட்ப மையம் அமைப்பதற்கு ஜப்பான் உதவும்

## யாழ். விஜயத்தின்போது அந்த நாட்டு அதிகாரி உறுதிமொழி

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்குத் தகவல் தொழில்நுட்ப மையம் ஒன்றை அமைத்துத் தருவதாக நேற்று யாழ். வந்த ஜப்பானியத் தொழில் நுட்ப உதவி வழங்கும் தூதரகத்தின் முதுநிலை ஆலோசகர் தனக்குரே உறுதிய ளித்துள்ளார்.

தொழில்நுட்பக் கல்லூரிகளின் நிலைமை கள் குறித்து ஆராய்வதற்கு கொழும்பு வந்த தனக்குரே நேற்று யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு வந்த தனக்குரே, யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் வாயிலில் இருந்து மங்கள வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டார்.

மங்கள விளக்கினை தனக்குரே, ஜப்பான் அரசின் கொழும்பு அலு வலகத்தின் உதவியாளர் ரட்ணசிறி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அவர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் பயிற்சி நெறிகளைப் பார்வையிட்டதுடன், கருத்துரையும் வழங்கினார்.

முன்னதாக தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் தொழில்நுட்பக் கல்லூரியின் வளர்ச்சிகள் பற்றியும் அதற்கான உதவி கள் பற்றியும் கூறியதுடன், கோப்பாய், சங்கானை, நெல்லியடி ஆகிய பகுதிகளில் மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவுவதற்கான உதவிகளை வழங்குமாறு கோரி மகஜர் ஒன்றையும் கையளித்தார்.

இது தொடர்பாகக் கருத்துக்கூறிய அவர், யாழ். தொழில்நுட்பக் கல் லூரியின் வளர்ச்சிக்குத் தன்னாலான உதவிகளைத் தான் வழங்கு வதாகவும் -

மாணவர்களுக்கு முக்கிய தேவையாகக் காணப்படும் தகவல்தொழில் நுட்ப மையம் ஒன்றை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் கீழ் அமைக்கத் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் -

அதற்கான அனைத்துத் தொழில்நுட்பச் சாதனங்கள் மற்றும் அவற்றைப் பயிற்றுவிப்பதற்கான ஆசிரிய ஒழுங்குகளையும் ஜப்பானில் இருந்து ஒழுங்கு செய்துதருவதாகவும் கூறினார்.

இதேவேளை - தனக்குரே, அரசியல் நிலைமைகள் தொடர்பாக யாழ. மாவட்ட தொழிற்சங்கங்களின் பொறுப்பாளர் இனியவனை யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.(4-6)


### விற்பனைக்குண்டு.

நல்ல நிலையில் உள்ள போட்டோக் கொப்பி மெஸினும், ஜெனரேட்டரும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- Newtone Electrical,
440, 442 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/37732)(35) T.P.- 021 222 2037

### ஸ்கூட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஸ்கூட்டர் SEL - ECT-II எம்மிடம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: ரவி (மெக்கானிக்)
புது வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (36707)

### வர்ணந் தீட்ட ஆள் தேவை

யாழ்.கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர்சுவாமி தேவஸ்தான கட்டடங்களுக்கு வர்ணந்தீட்ட (பெயின்ற்) ஆள்கள் தேவைப்படுகின்றனர். ஒப்பந்த அடிப்படையில் திறமையான வேலையாள் கள் விண்ணப்பிக்கவும். நேரில் வரலாம்.

~ தேவஸ்தானத்தினர்.

(36711)(32-16-18)


யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தால் நடத்தப்படும்

### சமாதானத்திற்காக பிரார்த்திக்கும் சர்வதேச தின வழிபாடு

செப்டெம்பர் - 21

இடம் : பரிபேதுரு மெதடிஸ்த ஆலயம்
காலம் : இன்று (21.09.2004) செவ்வாய்க்கிழமை
நேரம் : 5.00 மணி (பி.ப.)

உலக சமாதானத்திற்காகவும்,
நம் நாட்டின் சமாதானத்திற்காகவும், குடும்ப
சமாதானத்திற்காகவும் தனி மனித
சமாதானத்திற்காகவும் அனைவரும் ஒன்றிணைந்து
இறைவனை வழிபட அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

'கிறிஸ்துவே அமைதி அருள்பவர்
அவரே பிரிந்து நின்றவர்களின்
பகைமை என்னும் சுவரை தகர்த்தெறிந்து
பகையுள்ளோரை ஒன்றிணைத்தவர்'' எ-பே.2:14

திரு. Dr.அருமைநாயகம், தலைவர், யா.கி. ஒன்றியம்.
அருட்திரு. க.கருணசேகர, செயலர், யா.கி.ஒன்றியம்.
(36695)(32-16-18)


## VACANCIES

SDC - Swiss Development Cooperation

**Applications are invited from Candidates who possess the following qualification (and experience) to fill up the following vacancies.**

POST OF ENGINEER **(02 Positions)**
**(Male/Female)**

- **Should possess B.Sc degree in Civil Engineering**
- **Good communication and interpretational skill & Knowledge in excel, word & database**
- **High level proficiency in written and spoken English**
- **Ability to function effectively in a team environment**

Terms of employment
**This engagement will be on contracts basis for the period of 12 months and could be extended based on performance**

General conditions
**Employees will be attached to the School Works Branch of the Education Department, Jaffna to work with the database survey team.**

DATA ENTRY OPERATOR **(01 Position)**
**(Male/Female)**

- **G.C.E. A/L with 3 passes**
- **Computer literacy and high level proficiency in written & spoken English and work independently**
- **A minimum of 6 months experience in data entry**

**Terms of employment and general conditions are same as above**

**Please send the letter of application with a complete CV to** SDC Office, 521/11, Point Pedro Road, Nallur, Jaffna **on or before the 2nd of October 2004.**

**(36705)**


## ஜி.சீ.ஈ.சாதாரண மாணவருக்கு கணிதபாட விசேட செயற்திட்டம்

வட்டக்கச்சி,செப்.21

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்ற வுள்ள மாணவர்களுக்கான கணித பாட விசேட செயற்றிட்டம் வலய மட்டங்களில் மேற்கொள் ளப்பட்டுவருகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 21 வலயங்களிலும் இச்செயற்றிட்டம் செயற்படுத தப்படுவதாக மாகாணக்கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்செயற்றிட்டத்தின் மதிப்பீடு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படு கின்றது. இதன் முதலாவது மதிப்பீடு கடந்த 11ஆம் திகதி சகல பாடசாலைகளிலும் நடை பெற்றதாகவும், இரண்டாவது மதிப்பீடு ஒக்ரோ பர் 16ஆம் திகதியும் மூன்றாவதும் இறுதியு மான மதிப்பீடு நவம்பர் 6ஆம் திகதியும் நடை பெறவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (4-405)

## உச்சியோடைக் கிராமத்துக்கு வலுக்குறைந்த மின்சாரம்

வலி.தெற்கு,செப்.21

மானிப்பாய் வடக்கு உச்சியோடை கிராம மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதி லும் வலுக்குறைவான மின்சாரமே தினமும் கிடைப்பதாக அக்கிராம மக்கள் விசனம் தெரி வித்துள்ளனர்.

வலுக்குறைந்த மின்சாரத்தினால் எந்த ஒரு வேலையையும் செய்ய முடிவதில்லை எனவும் பாடசாலை மாணவர்கள் படிப்பதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

பல முறை இலங்கை மின்சார சபையின ருக்கு இக்குறைபாட்டை நிவர்த்தி செய்து தரும் படி கோரியிருந்தும் அவர்கள் எதுவித நட வடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என வும் அக்கிராமமக்கள் குறைப்பட்டுக்கொள் கிறார்கள். இது தொடர்பாக இலங்கை மின்சார சபையினரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, அக்கிராமத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாகவும் அதனால் தான் மின் சார உபகரணங்கள் பழுதடைந்து குறைந்த வலுக்கொண்ட மின் சாரம் கிடைப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

பொது மக்களும், பொது அமைப்புக்க ளும் முன்வந்து சட்ட விரோத மின்பாவனை யைக்கட்டுப்படுத்த முயலாதவிடத்து மின் சார சபையால் எதுவும் செய்ய முடியாதிருபப தாகவும் மின்சார சபை யினர் தெரிவித்தனர். (4-152)


### படிவம்

இலங்கை வங்கி, இலங்கை வர்த்தக வங்கி பயிற்சி அலுவ லர் பதவிகளுக்கு விண் ணப்பிப்பதற்கான படி வங்கள் தொகையாகப் பெற்றுக்கொள்ளலாம்.

முடிவு திகதி: 04.10.2004

BHARATHI PATHIPPAKAM,
430, K.K.S. ROAD,
JAFFNA.
(c-37731)


## வெவ்வேறு விபத்துகளில் காயமடைந்த இருவர் சிகிச்சை பலனின்றி மரணம்!

யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த இருபெண்கள் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர்.

கடந்த 13ஆம் திகதி அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி செல்லம்மா (வயது-70) என்ற பெண்மணியும் - கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த திருமகள் வீதி, அரியாலையைச் சேர்ந்த வேலாயுத பிள்ளை கனகம்மா (வயது-65) என்ற பெண்மணியுமே யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனளிக்காது உயிரிந்தனர்.

இதேவேளை, உயிரிழந்தவர்களில் ஒருவரான வேலாயுதபிள்ளை கனகம்மாவின் விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தே கத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட முத்துராசா லெஸ்லிபாலன் என்பவரை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ. நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா நேற்று உத்தரவிட்டார். (4-5)

## விண்ணப்பப் படிவங்கள் இல்லை; வாக்காளர் பதிவுகள் தாமதம் !

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு வாக்காளர் பதிவுக்குப் போதிய விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால், கிராம அலுவலர்கள் தமது கடமைகளை நேரத்திற்கு நிறைவேற்ற முடியாமல் இருப்பதுடன் புதிதாக பதிவோர் வீண் அலைச் சலுக்குள்ளாகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-170-207)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா சண்முகநாதன்

**(ஓய்வுபெற்ற கடற்படை, பொலீஸ் பாதுகாப்பு உத்தியோகத்தர் - பன்குளம்)**

ஆனைக்கோட்டை, உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும் உரும் பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சண்முக நாதன் அவர்கள் நேற்று (20.09.2004) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - கண்ணம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற பவளரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (உரி மையாளர் - காட்டுவைரவர் கோயில், உரும்பிராய்), பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நிர்மலாதேவி, மனோகரன், ஜெயந் தினி (நோர்வே), பவானி (ஆசிரியை, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை), சுதாகரன் (ஆசிரியர், திருகோணமலை புனித சூசை யப்பர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கார்த்திகேசு, சற்குணஈஸ்வரி, கமலானந்தன் (நோர்வே), தியாகலிங்கம், திருச் செல்வி (ஆசிரியை, திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வ அபிராமி, டேவநாயகி, டுஷிகரன், சங்கர்நாத் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2004) செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் எருளன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்துக் கல்லூரி ஒழுங்கை,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*
(36706)(30-11-16)

தகவல்:
பிள்ளைகள்,
ச.மனோகரன்.

### கார்த்திகேசு தில்லைநாதன்

**(ஓய்வு பெற்ற கிராம சேவகர்)**



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் •உருத்திரா மாவத்தை, வெள்ள வத்தையை தற்போதைய வசிப்பிடமாகக் கொண்ட வருமான கார்த்திகேசு தில்லைநாதன் அவர்கள் 18.09.2004 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் பரஞானவதியின் அன்புக் கணவரும் முகுந்தன் (பிரான்ஸ்), அருளானந்தன் (சுவிஸ்), இராகவன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான கோபாலப்பிள்ளை (ஆசிரியர்), யோகம்மா ஆகியோரின் மருமகனும் கனகாம்பிகை, காலஞ்சென்றவரான துரைசிங்கம் மற்றும் சொர்ண லட்சுமி ஆகியோரின் சகோதரனும் சிவஞானவதி, சிவானந்தபாலன் ஆகியோரின் மைத்துனரும் கிரிஜா, குமுதினி ஆகியோரின் மாமனாரும் மதுஷன், அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2004) செவ்வாயக் கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலை, கொழுமபு - 08 இல் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*9,1/3A, உருத்திராமாவத்தை,*
*வெள்ளவத்தை.*
*T.P: 0777 068673*

தகவல்:
திருமதி பரஞானவதி
(மனைவி).

### திருமதி கோவிந்தசாமி செல்லம்மா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோவிந்தசாமி செல்லம்மா 19.09.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - விசாலாட்சி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற தம்பிஐயா - பார்வதி தம் பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கோவிந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் நாகம்மா, செலலத்து ரையின் அன்புச் சகோதரியும் திலகாவின் (U.K.) அன்புத்தாயா ரும் சிவத்தின் (U.K.) அன்பு மாமியாரும் ஜெய்சன் (U.K.), டெப்ரா (U.K.), டானியல் (U.K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ் சென்றவர்களான குமாரசாமி, கனகம்மா மற்றும் இராசம்மா ஆகி யோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2004) செவ்வாய்க் கிழமை மாலை 4.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/1, சாஸ்திரியார் வீதி,*
*அரியாலை.*
(36710)(38-16-18-30)

தகவல்
குடும்பத்தினர்.

# ஹெய்ட்டியில் பெருவெள்ளம்
# 90 இற்கும் மேற்பட்டோர் பலி!
## பலரைக் காணவில்லை எனத் தகவல்

கொனவயிஸ்,செப்.21

ஹெய்ட்டி நாட்டில் இவ்வாரம் கடும் காற்றோடு பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் 90இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இப்புயறகாற்று கரீபியன் பகுதியின் ஊடாகவே வீசியது.

நாட்டின் வடமேற்குப் பகுதியில் பெய்த மழையினை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தினால் அநேகமானோரைக் காணவில்லை எனச் செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள பகுதிகளில் மீட்புப் பணிகளில் பணியாளர்கள் ஈடுபட்டுளளனர். ஹெய்ட்டிக்கு பெப்ரவரியில் அனுப்பப்பட்ட ஐ.நாவின் அமைதிகாப்புப் பணியாளர்கள் அவர்களுக்கு உதவியாக நிறுத்தப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர், இந்தப் புயற்காற்று டொமினிக் குடியரசிலும் வீசியது. இதனால், ஏற்பட்ட அனர்த்தத்தினால் பலர் உயிரிழந்துள்ளனர். பலத்த சேதங்களும் ஏற்பட்டிருந்தன.

ஹெய்ட்டியின் வடக்குப் பகுதியிலுள்ள மலைப் பிரதேசங்களில் இரண்டு நாள் தொடராகப் பெய்த மழையினால் இங்குள்ள நதியொன்று அணைக்கட்டுக்களை உடைத்துள்ளது.

இதனால், அப்பகுதியில் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ள அனர்த்தத்தினால் கொனவயிஸ் கரையோர நகரும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் பயிர்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

ஹெய்ட்டியில் ஏற்பட்டுள்ள புயலினாலும், வெள்ளத்தினாலும் 50 பேர் இறந்தனர் என்றும், இத்தொகை அதிகரிக்கலாம் என்றும் ஐ.நா. அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்தத்தில் எத்தனை பேர் இறந்தனர் என்று தனக்குத் தெரியாது என ஹெய்ட்டியின் பிரதமர் ஜெராட் லட்டக்ட்டு கூறினார்.

இந்த வருடம் ஒரு பயங்கரமான வருடமாகும் என்றும் அவர் சொன்னார்.

ஹெய்ட்டி - டொமினிக் குடியரசு எல்லைப் பகுதியில் கடந்த நான்கு மாதத்திற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் மூவாயிரம் பேர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து, ஏற்பட்ட மற்றொரு இயற்கை அனர்த்தமே இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்புயற்காற்று, இவான் சூறாவளியை அடுத்து இடம்பெற்ற மற்றொரு அனர்த்தமாகும். இவான் சூறாவளியினால் 100 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

## தேர்தலில் போட்டியிட சவூதி அரேபியாவில் பெண்களுக்குத் தடை!

ரியாத்,செப்.21

சவூதி அரேபியாவில் முதல் முறையாகத் தேசிய அளவிலான தேர்தல்கள் நடக்கவிருக்கும்நிலையில் அதில் பெண்கள் போட்டியிடுவதற்கு இடமில்லை என்று அரச அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

நாடு தழுவிய நகராட்சித் தேர்தல்களின் முதற்கட்ட வாக்குப் பதிவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடத்த சவூதி தயாராகிவரும் நிலையில் இத்தேர்தலுக்கான பொதுக்குழு இம்முடிவை எடுத்துள்ளதாக சவூதி செய்தித்தாள் ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இத்தேர்தல் குறித்த சட்டத்தில் வேட்பாளர்கள் சவூதி பிரஜைகளாக இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் பிரஜை என்கின்ற பதம் ஆண்களை மட்டுமே குறிக்கின்றது. இதைத் தவறாகப் புரிந்துகொண்டு பெண்கள் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டுவிட்டார்கள் என்று அச்செய்தித்தாள் கூறுகின்றது.

ஆனாலும், சவூதியின் சட்ட வல்லுநர்கள் சிலர் இதை மறுக்கின்றார்கள். தேர்தலில் வாக்களிப்பதும் போட்டியிடுவதும் இஸ்லாத்தில் எல்லாப் பெண்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமை என மனித உரிமைகளுக்கான சவூதி தேசியக் குழுவின் உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். (க-8)

## 17 மாணவர்களின் காதுகளை வெட்டி எறிந்தார் ஆசிரியர்!

டாக்கா,செப்.21

சத்தம் போட்டு பாடம் படிக்காததால் கோபம் அடைந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் கத்திரிக்கோலால் 17 மாணவர்களின் காதுகளை வெட்டி எறிந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பங்களாதேஷின் டோக்ரா மாவட்டத்தில் நடந்தேறியுள்ளது.

அங்குள்ள அரபு பாடசாலை ஒன்றில் 5 முதல் 9 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் படித்து வந்தனர். அவர்கள் சத்தம் போட்டு படிக்காமல் முணுமுணுத்ததால் கோபம் கொண்ட ஆசிரியர் கத்திரிக்கோலால் 17 மாணவர்களின் காதுகளை வெட்டியுள்ளார்.

மாணவர்கள் வலி தாங்காமல் கதறி அழுத சத்தம் கேட்டு, கிராம மக்கள் பாடசாலைக்குள் ஓடினர். அங்கு இரத்தம் சொட்டச் சொட்ட நின்ற மாணவர்களை உள்ளூர் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

ஆசிரியரை கிராமவாசிகள் பாடசாலையை விட்டு வெளியே இழுத்து வந்து சரமாரியாகத் தாக்கினர். இதனால், காயமடைந்த ஆசிரியரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பாடசாலையில் மாணவர்களின் குறும்பு பொறுக்க முடியாமல் தான் அப்படிச் செய்தேன ஒரு வேளை சாத்தான் எனக்குள் புகுந்து கொண்டு என்னை ஆட்டிவைத்திருக்கலாம் என்று ஆசிரியர் விசாரணையின் போது தெரிவித்திருக்கிறார்.

## நேபாளத்தில் 100 மாணவர்கள் மாவோயிஸ்ட்டுக்களால் கடத்தல்!

காத்மண்டு,செப்.21

நேபாள நாட்டின் மூன்று பாடசாலைகளில் இருந்து நூற்றுக்கும் அதிகமான மாணவர்களையும் ஆசிரியர்களையும் மாவோயிஸ்ட்டுத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

போஜ்பூர் மாவட்டத்தின் பஞ்சகன்யா, நவதுர்கா நகரிலுள்ள இரண்டாம் தரப் பாடசாலைகளிலிருந்து 49 மாணவர்களும், 3 உள்ளூர் வாசிகளும் ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்டனர். பைதடி என்ற ஊரில் 45 மாணவர்களும் 7 ஆசிரியர்களும் வெள்ளிக்கிழமை கடத்தப்பட்டனர் என்று உள்ளூர் அதிகாரியொருவர் தெரிவித்தார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இச்சம்பவத்தால் நாட்டில் பெரும்பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கடத்தப்பட்டவர்களைத் தேடி நேபாளப் பொலீஸார் வலைவிரித்துள்ளனர்.

கடத்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் அதிகாரிகளிடம் முறையிடுவதாகவும் பெரும் அங்கலாய்ப்புடன் அவர்கள் காணப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

## மூன்று குர்திஸ்கள் தீவிரவாதிகளால் தலை துண்டித்துக் கொலை!

ஈராக்கில் தற்போதுள்ள இயத் அல்லாவியின் தலைமையிலான இடைக்கால அரசுக்கு ஆதரவு அளித்து வரும் குர்திஸ் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த மூன்று வாலிபர்களை 'ஈராக் இஸ்லாமியத் தீவரவாதப் பிரிவினர்' தலைகளைத் துண்டித்து மிகக் கோரமாகக் கொலை செய்துள்ளனர்.

இவர்கள் கொலை செய்யப்பட்ட காட்சி தீவிரவாதிகளின் இஸ்லாமிய இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தாம் எதிர்க்கும் அரசுக்கு ஆதரவு தெரிவித்தார்கள் என்பதனாலேயே இவர்களை நாங்கள் சிரச்சேதம் செய்தோம் என்று அவ் இணையத்தளத்தில் தீவிரவாதிகள் குறிப்பிட்டுள்ளனர். ஈராக்கில் சிரச்சேதம் என்ற கோரச் செயல் ஒரு வழமையான நடவடிக்கையாக மாறியுள்ளது. இவர்கள் கொலை செய்யப்பட்டமையை குர்திஸ் ஜனநாயகக் கட்சியின் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். (க-8)

## மூன்று லெபனானியர்கள் உட்பட 13 பேர் ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தல்!
### அமெ.- துருக்கி நிறுவனத்தை வெளியேறுமாறும் நிபந்தனை

ஈராக்கில் லெபனான் நாட்டைச் சேர்ந்த மூன்று பேரையும் அவர்கள் சென்ற காரின் சாரதியையும் தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துச்சென்றுள்ளனர். அத்தோடு, ஈராக்கில் இயங்கும் அமெரிக்க - துருக்கிக் கூட்டு நிறுவனத்தில் பணியாற்றும் 10 ஊழியர்களையும் அவர்கள் கடத்திச்சென்றுள்ளனர்.

லெபனான் நாட்டவர்கள் கடத்தப்பட்ட விடயத்தை அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சு உறுதிப்படுத்தியது.

பக்தாத் - பலூஜா நெடுஞ்சாலையில் வைத்துக் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இவர்கள் நான்கு பேரும் துப்பாக்கி ஏந்திய தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களினால் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட லெபனான் நாட்டவர்கள் பக்தாத்தில் உள்ள சுற்றுலா நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தவர்கள். கடத்தப்பட்டவர்களை மீட்கும் பொருட்டு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஈராக்கில் உள்ள தனது தூதரகத்தை லெபனான் அரசு கேட்டுள்ளது.


இதேவேளை -

ஈராக்கில் செயற்பட்டுவரும் அமெரிக்க - துருக்கிக் கூட்டு நிறுவனத்தில் பணியாற்றும் பத்துப் பேரை 'அபூபக்கர் அல்-சித்திக்கின் கலா பிஸ்ட் பிரிகேட்ஸ்' என்று தங்களை அழைத்துக்கொள்ளும் தீவிரவாத அமைப்பு பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளது.

அமெரிக்க, துருக்கிக் கூட்டுறவு நிறுவனம் ஈராக்கை விட்டு மூன்று நாள்களுக்குள் வெளியேறவேண்டும். இல்லையெனில், கடத்தப்பட்ட 10 பேரையும் கோரமாகக் கொலை செய்வோம என்று தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பணயக் கைதிகளை வீடியோப் படமாக எடுத்து அல்-ஜெஸீரா அரபுத் தொலைக்காட்சிக்குத் தீவிரவாதிகள் அனுப்பிவைத்துள்ளனர். அந்த வீடியோ நாடாவில் பதிவாகியிருந்த காட்சிகளை அல்-ஜெஸீரா ஒளிபரப்பியது.

கடத்தப்பட்ட பத்துப் பேரும் எந்த நாட்டைச்சேர்ந்தவர்கள் என்பது தெரியவில்லை. அது விடயமாக அல்-ஜெஸீராத் தொலைக்காட்சியிலும் தெரிவிக்கப்படவில்லை. (க-8)

உலக அரங்கில்


இந்தியாவின் ஸ்ரீ ஹரிகோட்டாவிலிருந்து நேற்று விண்ணில் அனுப்பப்பட்ட 'ஈடியூசேட்' என்ற செயற்கைக் கோள ஜி.எஸ்.எல்.வி-எவ் 01 என்ற ஏவுவாகனத்தில் பொருத்தப்பட்டிருக்கும் காட்சி இது.

## ஐ.நாவின் வேண்டுகோளை ஈரான் அரசு நிராகரித்தது!

தெஹ்ரான்,செப்.21

ஈரான் உடனடியாக தனது யுரோனியம் செறிவூட்டல் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் என்றது. ஐ.நா. சபையின் அணு ஆற்றல் கண்காணிப்பு அமைப்பான ஐ.ஏ.ஈ.ஏவின் கோரிக்கைகளை அந்நாட்டு அரசு நிராகரித்துள்ளது.

பேச்சுக்கள் மூலம் முயலும்பட்சத்தில் வேண்டுமானால் அந்நாடு, ஈரான் இச்செயற்பாடுகளைச் சுயமாக இடைநிறுத்த உடன்படலாம். ஆனால், இதைச் செய்யச் சொல்லி ஐ.ஏ.ஈ.ஏ. ஈரானைக் கட்டாயப்படுத்தமுடியாது என்று ஈரானின் அணுசக்தி விவகார தலைமைப் பேச்சாளர் ஹசன்ரொஹானி கூறினார்.

அமெரிக்காவின் கோரிக்கைக்கு ஏற்ப ஈரான் மீது தண்டனைத் தடைகளை ஐ.நா. பாதுகாப்புச் சபை விதிக்குமானால் சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஈரானில் வேண்டிய இடத்தில் சோதனையிடுவதை தடுப்பதோடு அணுகுண்டு பரவல் தடை ஒப்பந்தத்திலிருந்தும் ஈரான் விலகலாம் என ரொஹானி எச்சரித்தார்.

அமைதி வழியிலான பயன்பாடுகளுக்கு மட்டுமானதே தனது அணுசக்தித் திட்டம் என்று ஈரான் வலியுறுத்தி வருகின்றது. தொடர்ந்து ஒத்துழைத்தால் அது ஈரானுக்கே நன்மை பயக்கும் என ஐ.ஏ.ஈ.ஏ. சார்பாக பேசவல்ல பெண் அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

யுரோனியம் செறிவூட்டல் நடவடிக்கைகளை நிறுத்தச் சொல்லி தன்னை எந்தச் சர்வதேச அமைப்பும் வற்புறுத்திவிடமுடியாது என ஈரான கூறியுள்ளது.

அமைதி வழியிலான பயன்பாடுகளுக்காக யுரோனியம் செறிவூட்டல் உள்ளிட்ட முழு அளவிலான அணுசக்தி எரிபொருளை உருவாக்கும் உரிமை அணுகுண்டு பரவல் தடை ஒப்பந்தத்தின் கீழ் ஈரானுக்கு வழங்கப்பட்டுள்ளதென அணுசக்தி விவகாரங்கள் குறித்த ஈரான் தலைமைப் பேச்சாளர் ஹசன் ரூஹானி கூறினார்.

ஈரான் யுரோனியம் செறிவூட்டல் நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று நேற்றுமுன்தினம் ஐ.நா. அணு ஆற்றல் கண்காணிப்பு நிறுவனம் வெளியிட்ட தீர்மானத்திற்கு பதில் தரும் விதமாக அவர் இக்கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஈரான் மறுபடியும் தனது அணுசக்திச் செயற்பாடுகளை ஆரம்பிக்கப்போகின்றது என்று ரூஹானியின் கருத்துக்களுக்கு பொருள் கொளளத் தேவையில்லை என்றும் மற்றொரு செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

HI 6 XXX தொடர் இலக்கமுடைய குவாட்டா லான்மாஸ்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.பத்மநாதன், டச்சுறோட், மானிப்பாய் (மருதடி விநாயகர் சனசமூக நிலையத்திற்கு அருகில்). (35387)

நல்ல நிலையிலுள்ள பேப்பர் வெட்டும் சைனா கட்டர் (36") விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 - 6072291. (36681)

45 நாள் வளர்ந்த பொமேரியன் நாய்க் குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 37, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (36665)

## காணி விற்பனைக்கு

பொலிகண்டி கிழக்கு, பாலாவிக் குடியேற்றத்திற்கு அருகிலுள்ள தடுவன் வீடு ஒன்று, மேற்படி நிலப்பரப்பு 9¾ அளவு கொண்ட காணி விற் பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ச.தங்கவேலு, மணல்வளவு, பொலிகண்டி மேற்கு. (36647)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தஞ்செய்யப்பட்டது 1Kg 230/=. தொடர்பு: விஜயகுமார், குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை. (36678)

## தவறிவிட்டது

18-09-2004 சனிக்கிழமை 742520560V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, A007226560 இலக்கமுடைய சாரதி அனுமதிப் பத்திரம், வங்கி அட்டை அடங்கிய மணிப் பேர்ஸ் சுண்டுக்குளிப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஜீ.பிரதீபன், 40/2, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் அல்லது 0777 - 733396 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (36679)

பாலாவி வடக்கு, கொடிகாமத்தைச் சோந்த க.ஜெயலட்சுமி என்பவருடைய தே.அ.அட்டை (இல.856113213V) யாழ்.நகரில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 49/4, மணலதறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம், T.P.: 0777 - 111339 எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (36672)


**SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு**

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.

**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna.
Phone: 077 3068968
(சி-37511)


## வாடகைக்கு வீடு தேவை

யாழ்.நகர் அல்லது அதற்கு அண்மையில் ஐந்து பேர்கள் தங்கக்கூடிய குடும்பத்திற்கு வீடு அல்லது அனெக்ஸ் தேவை. தொடர்பு: 0777112103 அல்லது 62/6,முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (36668)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 5பேர் வசிக்கக்கூடிய, கார் நிறுத்தக்கூடிய இட வசதி கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: யோ.யோகேந்திரா, அறை இல. 21, இல.67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 - 222 - 5987. (36689)

## மணமகன் தேவை

யாழ். கௌரவ R.C. 5'4", 1973இல் பிறந்த, புனர்பூசம், செவ்வாய்க்குற்றமற்ற, தாதித்தொழில் செய்யும் பெண்ணிற்கு மணமகன் தேவை. உள் / வெளிநாட்டில் உள்ளோரும் ஏனைய சமயத்தினரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விள. இல. 2380, மே/பா உதயன். (36489)

ஆஸ்திரேலியாவுக்கும், லண்டனுக்கும் 30 வயதுக்கு மேற்பட்ட, தகுதியான, உயர்தர மணமகன் தேவை. இலங்கையில் விவாகம் செய்து பொன்சரில் அழைக்கப்படும். சாதகம், தராதரம் அனுப்பவும். பொருத்தமானது நேரில் தொடர்பு கொள்ளப்படும். தொடர்பு: சு.சிவஷண்முகானந்தக்குருக்கள், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. (36466)

## கைமாறிவிட்டது

இரு வாரங்களுக்கு முன்பு லுமாலா - ஆண்கள் சைக்கிளொன்று கல்வியங்காட்டுச் சந்தியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு முன் பாகக் கைமாறிவிட்டது. எடுத்தவர்கள் எனது சைக்கிளைத் தந்து தனது சைக்கிளைப் பெற்றுக்கொள்ளவும். தொடர்புகளுக்கு: T.பாலச்சந்திரன், 01, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு. தொ.பே.021 - 222 - 2923. (36626)


**இணைய, இணையத்தள சேவை**

.com .net .org .info
Domian Registration Rs.400/= per Year
Hosting upto Rs.2000/= per year
Limited time offer
**SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.**
T.P.: 0773 068968 (சி-37510)



**இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் வளர்க்கப்பட்ட, சுத்தம் செய்யப்பட்ட பிறீமா, புறொயிலர் இறைச்சிக் கோழிகள் (ஐஸ்) விற்பனைக்குண்டு. தினமும் காலை 6மணி முதல் இரவு 10 மணிவரை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: **T.கரன்**
முட்டை விற்பனை நிலையம்
(36560) 150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம்

வலி.தெற்கு செப்.21

சுன்னாகம் லயன்ஸ் கழகம், "லயன்ஸ் நோக்கு தெளிவான பார்வை - 1000" என்ற செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுன்னாகம் பகுதியில் உள்ள வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மக்களுக்கு ஆயிரம் மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கத்திட்டமிட்டுள்ளது.

இதற்காக கந்தரோடை, கோண்டாவில், உடுவில் மத்தி, சுன்னாகம், ஏழாலை ஆகிய பகுதிகளில் கண் பரிசோதனை முகாம்கள் நடைபெறவுள்ளன.

இதேவேளை - புகைத்தலால் ஏற்படும் அழிவுகள், பாதிப்புக்கள் என்பவற்றை விளக்கிப் பிரசார விளம்பரங்களையும் சுன்னாகம் லயனஸ் கழகம் மேற்கொண்டுவருகிறது. (8-152)

## 35 லட்சம் ரூபா ஒதுக்கீடு

செம்பியன்பற்று,செப்21

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கில் கட்டைக்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான 16கிலோமீற்றர் நீளமுடைய வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் சுமார் 35 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதேவேளை, உலக உணவுத் திட்டத்தின்கீழ் மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையுள்ள 19.2 கிலோமீற்றர் நீளமுடைய கடற்கரை வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (10-36-201)


**அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

**புனித லிகோரியார் ஆலயம்**
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

19.09.04ஞாயிறு காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற அதிர்ஷ்ட லாபச் சீட்டுக் குலுக்கலில் வெற்றி பெற்றவர்கள் விவரம் வருமாறு:

முதலாம் பரிசு: லுமாலா சைக்கிள் - சீட்டு இல.1318
ராயு உதயா. 2ஆம் வட்டாரம். புதுக்குடியிருப்பு

இரண்டாம் பரிசு: வானொலிப்பெட்டி - சீட்டு இல.1076
N.டினூஜன். செல்வபுரம். முல்லைத்தீவு

மூன்றாம் பரிசு: மின்விசிறி - சீட்டு இல. A 451
பா.மதனகுமார். மீசாலை கிழக்கு. மீசாலை.

(36687)(42-18-19-26) **அருட்பணிச் சபையினர்.**


## மணல் விநியோகம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,செப்.21

வடமராட்சி, வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் மகோற்சவத்தை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை முதல் நாளை புதன்கிழமை வரை மணல் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது எனவும் 23ஆம், 24ஆம் திகதிகளில் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் விநியோகம் நடைபெறும் எனவும் வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் அறிவித்தல் விடுத்துள்ளது.

மீண்டும் 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் மேற்படி மணல்விநியோகம் நிறுத்தப்பட்டுப் பின் 30ஆம் திகதி வழமைபோல் விநியோகம் ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (10-201)


**IDM PVT. LIMITED**




**WALK-IN INTERVIEW**

A Vacancy exists in our Computer establishment for female candidates Possessing the following qualifications.

1) Qualified in Diploma in Computer Studies
2) Two years experince in the Computer field
3) Studied computer Accounting Packages
4) Thorough knowledge in English
5) Age limit 22-30 years

Those who Possess the necessary qualifications please be present in our Computer establishment for an interview with the certificates to prove efficiency on 21-09-2004 at 3.00p.m.

Contact:
**451, K.K.S. Road, Jaffna. T.P.: 021-4591398.**



**யா/அத்தியார் இந்துக் கல்லூரி,**
நீர்வேலி

**பவளவிழா அழைப்பு - 2004**

நிறுவுநர் சிலை திறப்புவிழாவும்
பரிசில் நாளும் நாளை (22.09.2004)
புதன்கிழமை காலை 9.30 மணிக்கு
கல்லூரியில் நடைபெறும்.

**சிலையினை வடிவமைத்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிற்பி உமாபதிசிவம் பாரதி அவர்கள் அன்றைய தினம் பாராட்டிக் கௌரவிக்கப்படுவார்.**

**மேற்படி நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அதபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், கல்லூரி அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

யா/அத்தியார் இந்துக் கல்லூரி.
நீர்வேலி.
(36688)(42-18-19-26)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பா.அ.சங்கம், ப.மா.சங்கம்,
பவளவிழாச்சபை.


## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத் தலைவரும்
யாழ்.மாவட்ட கூ.கிராமிய வங்கியின்
சமாசத் தலைவருமான திரு.குமரவேல்
அவர்களின் அன்புத் துணைவியார்

**திருமதி திலகவதி குமரவேல்**



அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் துயரத்தையும் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டிநிற்கின்றோம்.

**நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்.**
(சி-37724) (26-18-19)

**தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி தவமணி



காரைநகர், அல்லின் வீதியைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி தவமணி அவர்கள் 19.09.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பையா (பரியாரி மூத்ததம்பி) - வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான அன்னமுத்து, நல்லம்மா, செல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் வைரவநாதன், காலஞ்சென்ற பூமணி மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் தங்கராசா (கணக்காளர், கமலேஸ்வரி புடைவையகம், யாழ்ப்பாணம்), தவராசா (ஆஸ்திரேலியா), தேவராசா, தேவராணி, தேவரஞ்சினி, தவயோகராசா, தேவதாசன் (விநாயகர் ஸ்ரோர்ஸ், வவுனியா), தேவகுமார், சிவகுமார் (ஊழியர், சிவா பிறதேஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தகுமாரி, சந்திரராணி, இந்திராணி, தருமராசா, நடராசா, திருமலர், இராசமலர், புஸ்பமாலா ஆகியோரின் அன்பு மாமியாரும் துளசி, ரவிராஜா, கிருஷ்ணராஜா, விதுசா, சிந்துசா, பிருந்தா, கிரிதிகன், சிவகரன்,சரணியா, கிருசிகா, கோபிகா, கோகுலன், ராகவன், தர்சிகா, தர்மிகா, பாலரூபன், காயத்திரி, தர்சனா, ஜிவதர்சன், விதுரா, ருசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00மணியளவில் வட்டுக்கோட்டையிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பங்குரு லேன்,
வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.*

தகவல்:
சி.கந்தசாமி *(கணவர்)*
மற்றும் பிள்ளைகள்,
மருமக்கள்.

(36692)(42-18-16-26)

## நெஞ்சுவிட்டகலாத நினைவலைகள்

**4 ஆம் ஆண்டு** **8 ஆம் ஆண்டு**



அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து
இப்புவி தனில் நாம் வாழ வழிகாட்டிய தெய்வங்களே!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை எம்துயர்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
எம் நெஞ்சங்கள்!



தோற்றம்
20.06.1942 21.07.1947

மறைவு
05.10.2000 14.11.1996

திதி: 21-09-2004

**அமரர்
கந்தன் இராசு**

**திருமதி
இராசு இராசம்மா**

*சேச்லேன்,
உடுப்பிட்டி.* (36686) (32-18-19-26)

- பிள்ளைகள்.

# செவிப்புலன் இழந்தோரின் கல்வியில் சகலரும் அக்கறை செலுத்துவோம்!

கட்டுரையாளர் கைதடி நவீல்ட் செவிப் புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் கடந்த நாற்பத்தொரு வருடங்கள் ஆசிரியராகவும் உதவி அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

அதன் வெளிப்பாடாக செவிப்புலன் குறைந்தோர் கல்வியை சிறப்பாகக் கற்றுப்பயனடைய வேண்டும் என்னும் நோக்கில் அதற்கான வழி முறைகளை-முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகளைக் கல்வியியலாளர்களின் கவனத்துக்கு முன்வைத்துள்ளார்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து."
என்று வள்ளுவன் கூறியதிலிருந்து 2ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்வியின் பயன் உணரப்பட்டுள்ளது. 1948ஆம் ஆண்டின் அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தின் கூறு - 26 'பிள்ளைகள் ஒவ்வொருவரும் கல்வியைப் பெறும் உரிமையுடையவர்கள்' என்பதை வலியுறுத்துகின்றது.

பிறப்பில் அல்லது பிறப்பின்பின் பல்வேறு காரணங்களால் ஊனம் - வலுவிழப்பு ஏற்படலாம. இத்தகைய குறைபாடுடைய பிள்ளைகளும் கல்வியைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களே. சாதாரண பிள்ளைகளைப் போலன்றி குறைபாடுடைய - வலுவிழந்த - ஊனமுற்ற பிள்ளைகள் கல்வி கற்பதற்கு அதிக அளவிலான உதவிகள் தேவைப்படுகின்றது.

- இவ்வாறு அதிக அளவிலான உதவிகளை எதிர்நோக்கும் பிள்ளைகள் விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். இவர்களுக்குரிய கல்வி - விசேட கல்வியில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களினால், கற்பித்தலுக்கான விசேட துணைச் சாதனங்களின் உதவியுடன் முன்னெடுக்கப்படுகின்றது.

### நவீல்ட் தோற்றம்

நமது நாட்டில் செவிப்புலன் - விழிப்புலன் குறைந்தோருக்கான முதலாவது பாடசாலை இங்கிலாந்து திருச்சபையின் (Church of England) 'செனனா' சங்க மிஷனரி செல்வி மேரி.எவ்.சாப்மன் என்பவரால் 1912ஆம் ஆண்டில் இரத்மனாலையில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து 1935ஆம் ஆண்டளவில் கத்தோலிக்க மதத்தவரால் இறக்காமம் என்ற இடத்தில் இரண்டாவது பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் 1956ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்காக - தமிழ் மொழி மூலமான முதலாவது பாடசாலையை யாழ். மாவட்டத்தில் - கைதடிக் கிராமத்தில் "அங்கலிக்கன்" திருச்சபையினர் நிறுவினர்.

கேள்வி-பார்வைக் குறைபாடுடையோர் கல்விப் பணிக்காகத் தற்போது 30 பாடசாலைகள் வரையுள்ளன. இவைகளில் 24 பாடசாலைகள் கல்வி அமைச்சில் பதிவுசெய்யப்பட்டு - அரச உதவி நன்கொடை பெறும் தனியார் பாடசாலைகளாக இயங்குகின்றன.

புலனிழந்தவர்களுக்கான கல்வி ஆரம்பிக்கப்பட்டு நூறு ஆண்டுகளை எதிர்நோக்கியிருக்கும் இக்காலத்தில் பார்வைத்திறன் குறைந்தோர் - எமது கல்வியில் பெற்றுள்ள வளர்ச்சிக்கு நிகராக - செவித்திறன் குறைந்தோர் தமது கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டவில்லை என்ற உண்மையை உணரும்போது நாம் வேதனைப்படாமல் இருக்கமுடியாது.

காணப்படுகின்றது. செவிப்புல உணர்வு - கேள்வித் திறன் குறைவால் - பேசும் இயல்பை இழந்த குழந்தை, தனது கண்களால் உற்று நோக்கி - செயல்களை உணர்ந்து கொள்ளுகின்றது. தமது எண்ணங்களை வெளிப்படுத்த - தேவைகளைப் பெற்றுக்கொள்ள - தொடர்பாடலுக்காக, உடல் அசைவுகளை - சைகைகளை ஓர் ஊடகமாகக் கொள்ளுகின்றது.

### செவிப்புலக்குறைபாட்டை சிறுவயதில் அறியலாம்

குழந்தை பிறந்து, 3 -12 மாத இடைக் காலப் பகுதியுள் குழந்தையின் செவிப்புலக் குறைபாட்டை - கேள்வித்திறன் இழப்பை, அதன் பெற்றோர் எளிதாக இனங்காண முடியும். குழந்தையிடம் கேள்விக்குறைபாடு காணப்படின் கா.மு.தொ. (ENT) மருத்துவ நிபுணருடன் தொடர்புகொண்டு மருத்துவ சிகிச்சையின் மூலம் குணப்படுத்தமுடியாத கேள்விக் குறைபாடு எனக் காணுமிடத்து - அக்குழந்தை தனது 2 2/1-3 வயதிலிருந்தே பேசுவதற்கான பயிற்

ஒலித்தொடர்களுக்கான, உதட்டு அசைவுகளை வரிவடிவங்களாக எழுதுவதற்கு முடிகிறது.

★ வரி வடிவமாகிய - எழுத்து - சொல், வாக்கியங்களை வாசிக்கக் கற்றுக்கொள்ளுகின்றது.

★ ஒலியை வெளிப்படுத்தி வாசிப்பதால் பேச்சில் திருத்தம் ஏற்படுகின்றது.

★ வாசிப்பதன் மூலம் - எழுத்து மொழியில் உள்ள சொற்றொடர், மொழி அமைப்பு என்பவைகளை அறிந்து கொள்வதுடன், பொருளையும் உணர்ந்துகொள்ளுகின்றது.

★ பல்வேறுபட்ட விடயங்களை வாசித்துப் பொருள் உணர்ந்து கொள்வதால் - சிந்தனைத் திறன் வளர்கின்றது.

★ மொழியின் வடிவமைப்பை அறிந்து கொள்வதால் - தனது எண்ணக்கருக்களை - சிந்தனைகளை, மொழி அமைவு விதி முறைகளுக்கு ஏற்ப எழுதுவதற்கு வாய்ப்பளிக்கின்றது.

செவித் திறன் - விழித்திறன் குறைந்தோர்



செல்வி.மேரி.எவ்.சாப்மன்
இலங்கையில் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோருக்கான கல்வியை முதலில் ஆரம்பித்தவர்.
(விசேட கல்வியின் அன்னை.)



மின்னியற் சாதனமின்றி விம்ப ஆடியின் உதவியுடன் பேசுவதற்குப் பயிற்சி.

சியைப் பெறுவதற்காக அதன் பெற்றோர் கேள்வித்திறன் குறைந்தோருக்கான கல்விப் போதனையில் பயிற்சி பெற்றுள்ள - அனுபவம் - 'ஆற்றல் உள்ள ஆசிரியர்களின் ஆலோசனைகளைப் பெற்று- குழந்தைக்கு பேசும் பயிற்சியையும், கல்வியையும் அளிக்க முன்வரவேண்டும்.

கேள்வித்திறன் குறைவானவர்களின் ஒலியுணர்வை - Audio Metor என்ற கேள்வி மானி - கருவியினால் அளவீடு செய்யமுடியும். இவர்களிடம் காணப்படும் குறைந்த அளவிலான ஒலியுணர்வை - கேள்வியை, கேள் துணைக் கருவிகளின் (Hearing aid) உதவியுடன் கேட்டலில் பயிற்சிகள் (Auditory Training) அளிப்பதன் மூலம் பேசும் திறனை உருவாக்க முடியும்.

கேள்விக் குறைபாடுடையோர் தாம் வாழும் குடும்பத்தில் - சூழலில் உள்ளவர்களின் பேச்சை அறிந்துகொள்ளவேண்டிய தேவைகள் உள்ளன. இதனால் பிறரது பேச்சை உணர்ந்துகொள்ளும் - உதட்டு வாசிப்பு (Lip.Reading) - பேச்சு, வாசிப்பு (Speech Reading) பயிற்சியுடன், குழந்தை தம் எண்ணங்களைத் தெரியப்படுத்த பேசும் பயிற்சி (Speech Training) யையும் - குழந்தைப் பருவத்திலிருந்தே பெறுவது, அதற்கு அதிக

கல்விப் போதனைக்காக 1970களில் மகாரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விசேட கல்விப் பயிற்சிநெறி - சிங்கள மொழிமூலம் ஆரம்பிக்கப்பட்டதால் - சிங்கள மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் பயன் அடையக்கூடியதாகவுள்ளது.

கல்வி அமைச்சில் விசேட கல்விப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டமை, இக் கல்வியில் அரசு அக்கறை காட்டியுள்ளமையை உணர்த்துகின்றது. எனினும், கல்வி அமைச்சின் விசேட கல்விப் பிரிவு - தனது செயற்பாடுகளில் - விசேட பாடசாலைகளின் முகாமையாளர்களின ஆசிரியர்களின் நியமனத்தை அங்கீகரிப்பதும், - சம்பளங்களை வழங்குவதுமே நோக்கமாக அமைந்துள்ளது.

செவித்திறன் குறைந்த மாணவர்களின் எதிர்கால நலன் நோக்கி கல்வியில் தனது சேவையை போதியதாக விரிவுபடுத்தத் தவறிவிட்டது. மகாரகமவில் இயங்கும் தேசிய கல்வி நிறுவகம் - விசேட கல்விப் பிரிவு - குறிப்பாக கேள்வித்திறன் குறைந்த பிள்ளைகளின் கல்வி தொடர்பாக, முறையான பாடத்திட்டம் உருவாக்கி - ஒருமுகப்படுத்தப்பட்ட கற்பித்தல் மேற்கொள்ள - ஒழுங்கமைக்கப்பட்ட - முறைகளையும் - திட்டங்களையும் உருவாக்கிச் செயற்படுத்தாமையும் செவித்திறன் குறைந்தோரது கல்வி மேம்பாடடையாமைக்கான காரணிகளாகக் காணப்படுகின்றன.

### அரசு அக்கறையில்லை

நமது நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தில் கல்விக்காகப் பெரும் அளவிலான நிதி ஒதுக்கப்பட்டாலும் - விசேட கல்விக்குரிய புலனிழந்த மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காக அதிக அளவில் அக்கறை காட்டப்படாமை கவலைக்குரிய விடயமாகும்.

புலனிழந்தவர்களும் - வலுவிழந்தவர்களும் இந்நாட்டின் குழந்தைகள் - நாளைய மனிதர்கள். புலனிழந்தோரது கல்வித் தேவைகள் - அரசினால் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதொன்றாகும்.

எதிர்காலத்தில், செவித்திறன் குறைவானோர், தமது கல்வியல் வளம்பெறவேண்டுமானால் - கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் என்பனவற்றின் - விசேட கல்விப் பரிவுகள், ஐ.நா.க.வி.பண்பாட்டு மையம், (UNESCO) ஐ.நா.அ.சி.அ.நிதியம் (UNICEF) விசேட பாடசாலைகளின் மேலாளர்கள், விசேட பாடசாலைகளின் ஆசிரியர்கள், கல்விச் சிந்தனையாளர்கள், மொழி வல்லுநர்கள், கா.மு.தொ. (ENT) மருத்துவர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைவரினதும் பங்களிப்புக்கள் - கூட்டு முயற்சிகளாக ஒருங்கிணைக்கப்படவேண்டும். இதற்காகப் பின்வரும் நிலைகளில்- இதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வேண்டும்.

★ அரசு தனது வரவு - செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கும் நிதியில் - செவித்திறன் குறைந்தோர் கல்வி மேம்பாட்டுக்காக அதிக அளவில் இணை நிதியை ஒதுக்க வேண்டும்.

★ மாவட்டங்களில் உள்ள உயர்நிலை வைத்தியசாலைகளில், செவிப்புலக் குறைவைத் துல்லியமாக அளவீடு செய்யவும், மருத்துவ ஆலோசனைகள் வழங்குவதற்குமான மையங்கள் உருவாக்கப்படவேண்டும்.

★ விசேட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான துறைசார் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

★ கேள்விக்குறைபாடுடைய பிள்ளைகளின கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாக அமையவும் - இவர்களின் எதிர்காலம், சமூகத் தொடர்புகள் மொழிவளம் என்பன நன்முறையில் மிளிரவும் செவிப்புலனிழந்தோரின் பெற்றோர்/பாதுகாவலர்-குடும்ப உறுப்பினர்களுக்கு உரிய வழிகாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

★ 2 2/1 -5 வயதுகளுக்குட்பட்ட கேள்வித்

**ப.சந்திரசேகரம்**

திறன் குறைந்த பிள்ளைகளுக்கு உற்று நோக்கல், கேட்டல், பேச்சு, உதட்டுவாசிப்பு - பேச்சுவாசிப்பு ஆகிய துறைகளில் பயிற்சியளிப்பதற்கான - பள்ளி முன் கல்வி மையங்கள் (NURSERY EDUCATION) நிறுவப்படவேண்டும்.

★ விசேட பாடசாலைகளில் கல்விகற்கும் 30db - 60db கேள்வி உரப்பு அளவுகளில் - கேள் திறன் உள்ள சிறுவர்கள் இனங்காணப்பட்டு, கேள்வி - பேச்சு - வாசிப்பு ஆகிய பயிற்சிகள் நிறைவாக அளிக்கப்பட்டபின் - இவர்கள் பொதுப் பாடசாலைகளில் - சாதாரண மாணவர்களுடன் ஒன்றிணைந்து கல்வியைப் பெறவேண்டுமென்பதை உறுதிப்படுத்தும் சட்டவாக்கம் கல்வி அமைச்சினால் உருவாககப்பட வேண்டும்.

★ பொதுக்கல்வியைத் தொடர்வதில் இடர்பாடுகள் உள்ள - தொடர முடியாத நிலையில் உள்ள, கேள்வி - பேச்சுக்குறைபாடுடைய சிறுவர்களின் கல்விக்காக விசேட பாடத்திட்டம் உருவாக்கப்படுவதுடன் - இலகு மொழி மூலமான - இலகுபடுத்தப்பட்ட பாடநூல்கள் ஆக்கப்படுவதுடன், கற்பித்தலுக்கான வழிகாட்டிகளும் உருவாக்கப்படவேண்டும்.

★ விசேட கல்வித் தேவையையுடைய - வலுவிழந்த மாணவர்கள் பொதுப்பாடத் திட்டங்களுக்கும் - விசேட பாடத்திட்டங்களுக்கும் அமைய கல்வியைத் தொடர்ந்தவர்களுக்கு க.பொ.த. (சா.த./உ.த.) பரீட்சைகளில் தோற்றுவதற்கு - இவர்களுக்கான விசேட பாடங்களுடன - ஏனைய பாடங்களில் இலகுபடுத்தப்பட்ட பரீட்சைகள் - பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும்.

உரிய சான்றிதழ்களைப் பெற்றவர்கள் - பல்கலைக்கழகக் கல்வியை - தொழில்நுட்பக் கல்வியைப் பெற விசேட அனுமதியில் முன்னுரிமையில் வாய்ப்பளிக்கப்படவேண்டும்.

★ அரச பொதுப் பரீட்சைகளில், உரிய விசேட கல்விச் சான்றிதழ்களைப்/தொழில்நுட்பப் பயிற்சிச் சான்றிதழ்களைப் பெற்ற ஊனமுற்றோர் - வலுவிழந்தோர்கள் உரிய தொழில் வாய்ப்புக்களை அரச - தனியார் துறைகளில் பெற்றுக்கொள்ள முன்னுரிமையில் வாய்ப்பளிக்கப்படவேண்டும்.

★ செவிப்புலனிழந்தோருக்கான விசேட பாடசாலைகளில் விடுதி முறைகளைக் கூடியளவு தவிர்த்து - இவர்கள் தம் வீடுகளிலிருந்து - பாடசாலைகளுக்கு வந்து செல்வதற்கு வாய்ப்பளிப்பதனால், இவர்களது பேச்சு மொழிவளம் பெறவும் - சமூக ஒன்றிணைப்பு ஏற்படவும் வழியமைக்கின்றது. இதற்காக இலங்கைப் போக்குவரத்துச்சபை, புலனிழந்தோர்கள் பாடசாலைகளுக்குச் சென்றுவர இலவச பயண

(10ஆம் பக்கம் பார்க்க)



குழுக் கேளுதவிக் கருவியின் மூலம் பேச்சு முறையில் கற்றல் - கற்பித்தல்.

"செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம், அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை." என்ற வள்ளுவன் வாக்கு, கல்வி அறிவைச் சிறப்பாகப் பெறுவதற்கு செவிப்புலனுணர்வு முதன்மையானதாகவுள்ளது என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளது. கேள்வித்திறன் உள்ள ஒரு குழந்தை 4 ஆயிரம் மணித்தியாலங்கள் வரை ஒலிகளைக் கேட்டபின் அது பேசுவதற்கு ஆரம்பிக்கின்றது.

ஆனால், கேள்வித் திறனை இழந்த ஒரு குழந்தை ஒலிகளைக் கேட்க முடியாததினால் - அக்குழந்தை பேசும் ஆற்றலை இழந்ததாகக

நன்மை பயப்பதாக அமையும்.

செவித்திறன் குறைந்தோருக்கான கற்பித்தல் முறைகளில் வாய்மொழி முறையான (Oral Methered) பேச்சு முறைக் கற்பித்தலே அதிக பயனை அளிக்கக்கூடியதாகும். வாய்மொழி-பேச்சு முறை மூலக் கல்வியால் - கேள்வித் திறன் குறைந்த ஒரு பிள்ளை பின்வரும் அனுகூலங்களைப் பெறக்கூடியதாகவுள்ளது.

★ உதட்டுவாசிப்பு (Lip Reading) ஊடாக பிறர் பேசுவதை அறிந்துகொள்ளுகின்றது.

★ கேள் திறன் குறைந்த பிள்ளை பேசுவதற்குக் கற்றுக்கொள்கின்றது.

★ உதட்டு வாசிப்புத் திறன் - பேச்சின்

# மன்னார் ஊடான போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க ஆயர் கோரிக்கை

## மாவட்டத்துக்கு விஜயம் செய்த பொலீஸ்மா அதிபரிடம் நேரில் விடுத்தார்

மன்னார்,செப்.21

மன்னார் ஊடான போதைப்பொருள் (ஹெரோயின்) கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக விசேட பொலீஸ் பிரிவு ஒன்றை ஆரம்பிக்கும்படி பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவிடம் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் கோரிக்கை விடுத்துள்ளார்.

2002ஆம் ஆண்டு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து இலங்கைக்குப் போதைப்பொருள்கள் கடத்தப்படும் முக்கிய மார்க்கமாக மன்னார் மாவட்டம் மாறியுள்ளது.

கடந்த சனிக்கிழமை மன்னாருக்கு விஜயம் மேற்கொண்ட பொலீஸ்மா அதிபரிடம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

கடந்த 30 ஆண்டுகளில் இலங்கையின் மேற்கு மாவட்டமான மன்னாருக்கு விஜயம் செய்த முதலாவது பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாதான் என்பது குறிப்பிடத்தக்கது. தனது இந்த விஜயத்தின்போது அவர் ஆயரையும் சந்தித்துப் பேசினார்.

அப்போது மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலை பற்றி ஆயர் விளக்கினார். கடந்த நான்கு, ஐந்து வாரங்களுக்குள் மட்டும் பெரும் எண்ணிக்கையிலான ஹெரோயின் போதைப்பொருள்கள் மூன்று தடவைகள் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்பதை பொலீஸ்மா அதிபருக்கு ஆயர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கடத்தல் இப்படியே தொடர்ந்தால் மன்னார் மாவட்டம் பாதிக்கப்படும். எனவே, நவீன வசதிகள் மறறும் மோப்ப நாய்களைக் கொண்ட போதைப்பொருள் தடுப்புப் பொலீஸ் பிரிவு ஒன்றை இங்கு ஆரம்பிக்க வேணடும் என்று ஆயர் கோரினார்.

மன்னாரில் உள்ள பொலீஸாரில் பெரும்பாலானவர்களுக்குத் தமிழ் தெரியாது என்பதையும் ஆயர் பொலீஸ்மா அதிபருக்குச் சுட்டிக்காட்டினார். மேலதிகமாக தமிழ் தெரிந்த பொலீஸாரை நியமித்தால் பொதுமக்கள் பொலீஸாருடன் தமது பிரச்சினைகள் பற்றி இலகுவில் பேசிக்கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

சனிக்கிழமை காலையில் பொலீஸ்மா அதிபர் வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

## மருத்துவமுகாமில் 500 பேர் பயன்

யாழ்ப்பாணம்,செப்.21

தியாகி திலீபன் நினைவாகத் தென்மராட்சிக் கோட்ட எழுச்சிப் பேரவையினர் நடத்திய இலவச மருத்துவ முகாமில் சுமார் ஐநூறு பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இம்மருத்துவ முகாம் சாவகச்சேரி டிறிபேர்க கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பிற்பகல் 2மணிவரை இடம்பெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ்கழக அனுசரணையுடன் இடம்பெற்ற இம்மருத்துவ முகாமில் நீரிழிவு, பெண்நோயியல், இரத்த அழுத்தம் மற்றும் வாய் புற்றுநோய் போன்ற நோய்களுக்குப் பரிசோதனை நடத்தப்பட்டது. கண் பரிசோதனையும் இடம்பெற்றது.

தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சந்திரசேகரா தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழ்க்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் மற்றும சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் கா.நவரத்தினம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அரசியல்துறையின் தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் கலைவாணன் பரிசோதிக்கப்பட்ட சுமார் 30பேருக்கு கண்ணாடிகளை வழங்கினார். (ஐ-9)

Barbara Mulvaney
Computer Training Centre
T.P:-222 - 5971
123, Temple Road, Jaffna

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses

Diploma in Ms Office (4months)
Diploma in Desk Top Publishing (4 months)
Diploma In Photo Graphics (3 months)

SPECIAL OFFER FOR ALL DIPLOMA COURSES

Diploma பாடநெறியை தெரிவு செய்யும் மாணவர்களுக்கு Internet & E-mail இலவசமாக பயிற்றுவிக்கப்படும்

INTERNET BROWSING

100/= செலுத்தி அங்கத்தவராக இணையும் ஒருவர் மணித்தியாலத்திற்கு 25/= செலுத்துவதன் மூலம் இணையத் தொடர்பினை பெற்றுக்கொள்ள முடியும்

அனைத்துப் பாடநெறிகளுக்குமான பிரத்தியேக வகுப்புக்களும் (Personal Classes) ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

Certificate Courses


Visual Basic (3 months)
Internet & E-mail (2 months)
Web designing (2 1/2 months)
Hardware (2 - 3 months)

அனைத்துப் பாடநெறிகளுக்குமான பதிவுகளை இம்மாதம் 24ம் திகதிக்கு முன்பாக அலுவலக நேரத்தில் மேற்கொள்ளவும்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆய்வுக்கட்டுரை(Dissertation) செய்துகொடுக்கப்படும். அலுவலக நேரம்:- 8.30am - 5.30pm

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 27 - 05 - 1941



இறைவன் அடியில் 21 - 09 - 1994

### ஜோசப் பெர்னான்டோ

பத்தோடு பலநூறு ஆண்டுகள் சென்றாலும்
அப்பா உன் அழகுமுகம் எம்மை விட்டு நீங்காது
சத்தியமாய் உம் நினைவே சாந்தி தருகுதையா
நித்தியமாய் வாழ்வீர்கள் நிமலன் திருவடியில்.

159/4 ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
பாஷையூர்.

(36682)(42)

அன்னாரின் ஆன்மசாந்திக்காக
எப்போதும் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் பதவி வெற்றிடம் தொடர்பாகக் கடந்த ஜூலை மாதம் 20ஆம திகதிய 'உதயன்' பத்திரிகையில் வெளியாகிய விளம்பரத்தின் விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என கொடிகாமம், தென்.கிழக்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (10-201)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.21

சித்தமருத்துவ மாணவர்கள், பி.எஸ்.எம்.எஸ்.பட்டதாரிகள் மற்றும் விரிவுரையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணிக்கு கைதடி சித்தமருத்துவத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சித்தமருத்துவத்தின் இன்றைய நிலை பற்றி இதில் ஆராயப்படவுள்ளது. (10-201)

## விபத்தில் பெண் மரணம்

யாழ்ப்பாணம்,செப்.21

விபத்துச் சம்பவம் ஒன்றில் சிக்கிக்காயமடைந்ததாகத் தெரிவித்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவர் நேற்று முன்தினம் இரவு அங்கு மரணமானார்.

அரியாலை, புவனேஸ்வரி அம்பாள் வீதியைச் சேர்ந்த கே.கனகம்மா (வயது 65) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார். (9-13)

## மட்டக்களப்பில் துண்டுப்பிரசுரம்

கொழும்பு,செப்.21

விடுதலைப் புலிகளுக்கு எதிரான துண்டுப்பிரசுரங்கள் கடந்த வெள்ளியன்று பிற்பகலில் மட்டக்களப்பு நகரில் விநியோகிக்கப்பட்டன.

நகரில் இராணுவத்தினரின் காவல் பலமாக இருந்த சமயத்தில் ஓட்டோவில் வந்தவர்கள் 'தமிழர் தேசியப் படை' என்ற பெயரில் அமைந்த துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

அரசுடன் சேர்ந்து இயங்கும் துணைப்படை ஒன்றின் வேலை இதுவென மக்கள் பேசிக்கொண்டனர். (க)

## புதிய நிர்வாகிகள் தெரிவாகினர்

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதன்படி, த.நடராஜா தலைவராகவும் ப.கோடீஸ்வரநாதன் செயலாளராகவும் ஐ.பரமேஸ்வரன் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (10-201)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் தலைவர்
திரு.சி.குமரவேல்
அவர்களின் அன்பு இல்லத் துணைவியார்
திருமதி
### திலகவதி குமரவேல்
(பொது முகாமையாளர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

அவர்கள் திடீரென அமரத்துவம் அடைந்த செய்தியால் தாங்கொணாத் துயருற்றிருக்கும் கணவன், பிள்ளைகள், குடும்பத்தினர் நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பொன்னப்பா பகீரதன் (லண்டன்)
(ஒன்றுவிட்ட சகோதரர்)
பவானி பகீரதன் (லண்டன்)
திருமதி சொர்ணவதி மாசிலாமணி (கனடா)
திருமதி ராதா குணரத்தினம் (சுன்னாகம்)

(36684)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 03 - 06 - 1917



இறப்பு 21 - 08 - 2004

### திருமதி நாகி வைரவன்

கடந்த 21-08-2004இல் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும் எமது துயர்போக்கியவர்களுக்கும் எங்கள் இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இன்று (21-09-2004) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி.

(36567) (26-21-11-18)

தகவல்:
குடும்பத்தினர்.

COMPUTER SALES



நெல்லியடி
Warranty 3 Years Warranty
புத்தம் புதிய அதிநவீன கணனிகள்
AMD/Intel P4 Computers
39,000/= onwards
மேலும் அனைத்து கணனி உதிரிப்பாகங்கள்!
MICRO PC SYSTEMS
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 - 12 - 1928



மறைவு 23 - 08 - 2004

### அமரர் செல்லையா தியாகராஜா
(ஓய்வுபெற்ற மதுவரி உதவி ஆணையாளர்)

மண்ணில் வந்துதித்திட்ட மாந்தர் வாழ்க்கை இதுவென்று
மானிடர்க்கு உணர்த்திட்ட மாபெரும் உத்தமரே!
மாநிலமும் வையகமும் போற்றுதையா உங்கள் மகத்தான சேவைதனை
பொறுத்தார் பூமியாள்வார் எனும் புண்ணியனாய் விளங்கிய உங்கள்
போதனைகள் எல்லாம் நிலைக்குதையா எம் நெஞ்சங்களிலே!
நாளும்கோளும் நகர்ந்து சென்றாலும் எம் ஆறாத் துயரை
யார் துடைப்பார்? ஆறுமுகன் திருவடியில்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(36664)(35-11-18-21)

இல.116. கச்சேரி கிழக்கு ஒழுங்கை.
கண்டுக்குழி. யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி சண்முகராசா

திருமதி பாக்கியலட்சுமி சண்முகராசா அவர்கள் 19-09-2004 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ராமலிங்கம் - முத்தம்மா தம்பதிகளின் புதல்வியும் ஓய்வுபெற்ற விதானையார் அரியாலையூர் வி.கே.சண்முகராசாவின் அன்பு மனைவியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.கே.சண்முகராசா (கணவர்),
எஸ்.எஸ்.தங்கராஜா (மருமகன் - (யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர்).

07. பேரின்பநாயகம் ஒழுங்கை.
கண்டுக்குளி.
T.P.: 222 5626.

(36685) (26-21-11-18)

# பாடசாலை அதிபர் சேவையிலுள்ளோர் மாற்றுப் பணிகளில் ஈடுபடத்தடை

## வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,செப்.21

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த அதிபர்கள் அனைவரும் பாடசாலைப் பொறுப்பு அதிபர்களாகவே கடமையாற்றவேண்டும். எந்த ஒரு அதிபரும் பாட சாலைகளில் ஆசிரியர்களாகவோ, அல்லது வேறு கட மையிலோ இருக்க அனுமதிக்கக்கூடாது.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பல பாட சாலைகளில் அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையில், சில பாடசாலைகளில் அதிபர் தரத்தைச் சேர்ந்த பலர், அதிபர் பதவிகளுக் கான சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு ஆசிரியர்க ளாகவும், வேறு பதவிகளிலும் கடமையாற்றி வருவது தெரியவந்திருக்கின்றது.

எனவே, அதிபர் தரத்தைச் சேர்ந்த அதிபர்கள் சகலரும் பாடசாலைப் பொறுப்பு அதிபர்களாகவே கடமையாற்ற வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சில கல்வி வல யங்களிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரி யர்களை நிறைவேற்று அதிபர்களாக நியமித்து, பின் னர் இவர்களை இலங்கை அதிபர் சேவைக்கு உள்ளீர்ப் பதற்கு சில வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உடந்தை யாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய தகவல்களுக்கு அமையவே இப்புதிய பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் கருத்துக்கள் பரவலாகப் பேசப்படுகிறது. (க)

### வருட இறுதிக்குள் நிரந்தர நியமனம் வழங்கக்கோரி

# எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் முஸ்தீபு

யாழ்ப்பாணம்,செப்.21

இவ்வருட இறுதிக்குள் நிரந்தர நியமனம் வழங் கப்படவேண்டும் எனக்கோரி, வடக்கிலும், கிழக்கிலும் புதிய எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரி யர் சங்கம் திட்டமிட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் எஸ்.ஞானாகரன் தலைமையில் யாழ். ஆரியகுளத்தில் உள்ள புதிய உயர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் பங்குபற்றும் அனைவரினதும் நியமனங்கள் தொடர்பாக சங்கம் தீவிர அக்கறை செலுத்தும் என இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களுட னும் கலந்தாலோசித்து விரைவில் நல்லதொரு தீர் மானம் மேற்கொள்ள உதவுவதாக உறுதியளித்தாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவு னியா மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் எழுபதிற்கும் மேற்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் இக் கூட் டத்தில் கலந்துகொண்டனர்.

(10-201)

# வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம்,செப்.21

வட இலங்கை சங்கீத சபையின் 2005ஆம் ஆண் டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்குரிய விண்ணப்பப்படிவங்கள் நேற்றுத் திங்கட் கிழமை முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

விண்ணப்பங்களை டிசெம்பர் மாதம் முதலாம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும் என வட இலங்கை சங்கீத சபையினர் கேட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள் வட இலங்கை சங்கீதசபை, யாழ்.கல்வி வலயம், செம்மணி வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தபால் மூலம் பெறவிரும்புபவர்கள் 30 ரூபா பெறுமதியான காசுக்கட்டளையுடன் ரூபா 4.50 பெறுமதியான தபால் தலைஒட்டிய சொந்தமுகவரி எழுதப்பட்ட நீள் கடித உறையை மேற்படி முகவரிக்கு அனுப்பி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

(10-201)

# சுன்னாகத்தில் முக்கிய வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தக் கோரிக்கை

வலிகாமம் தெற்கு,செப்.21

சுன்னாகம் நகரப் பகுதிகளில் உள்ள முக்கிய மான வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்திக் கொடுக்குமாறு இலங்கை மின்சார சபையின் சுன்னா கம் பிரதிப் பொதுமுகாமையாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் நகரமத்தி ஐக்கிய அபிவிருத்தி சன சமூக நிலையத்தினரால் மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் நகரப் பகுதியின் முக்கிய வீதிகள் இரவு நேரத்தில் வெளிச்சம் இன்றி இருப்பதால் பல வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும், பல பயணிகள் இரவு நேரத்தில் இருட்டான இடங்களூடாகப் பயணித்துவரு வதாகவும் தமது வேண்டுகோளில் சுட்டிக்காட்டியுள்ள மேற்படி சனசமூக நிலையத்தினர், மக்கள் இரவு நேரத தில் பயமின்றிப் போக்குவரத்துச் செய்யக்கூடியதாக முக்கியமான இடங்களில தெருவிளக்குகளைப் பொருத தித்தருமாறு கேட்டுள்ளனர். (8-152)

# வயோதிபர்களுக்கு அ.அட்டை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

வலிகாமம் தெற்கு,செப்.21

மானிப்பாய் வடக்கு வயோதிபர் சங்கத்தில் அங்கத் தவர்களாகவுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்க ளுக்கு அடையாள அட்டைகள் பெற்றுக்கொடுப்பதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற் பகல் 4 மணிக்கு சங்கத் தலைவர் த.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் அடையாள அட்டைகள் பெற்றுக்கொடுப்பதற்கான ஆவணங்கள் பூர்த்திசெய்யும் பணிகள் நடைபெறவுள்ளன.

மானிப்பாய் வடக்கு கிராம சேவையாளர் இ.தன பாலா இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு, வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலகத்தினூடாக அடையாள அட்டைகள் பெற்றுக்கொடுக்க ஆவன செய்துள்ளார்.

(8-152)

# மட்டுவிலில் ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டது

மட்டுவில் தெற்கு, மருதங்குளத்தில் ஆரம்ப சுகா தார நிலையம் ஒன்று கடந்த சனிக்கிழமை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் ச.கிருஷ் ணன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே.ரி.சிவபாதம் முதன்மை விருந்தி னராகக் கலந்துகொண்டு நாடாவைவெட்டி நிலை யத்தை திறந்துவைத்தார்.

நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், சாவகச்சேரி மாவட்ட வைத்தியப் பொறுப் பதிகாரி சி.அம்பிகைபாகன், தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் -

சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் ந.பாலச் சந்திரன், தென்மராட்சி சுகாதார வைத்தியப் பொறுப் பதிகாரி தி.கிளின்ரஸ், கிராம அலுவலர் வே.துரை சிங்கம், மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சிரேஷ்டகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக வும் கலந்துகொண்டனர். (10-201)

## கல்விச் சாலைக்காட்சிகள்




யாழ். கந்தர்மடம் ஞானஜோதி சனசமூக நிலையப் பாலர் பாட சாலையின் விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட பாடசாலைச் சிறார்களைப் படத்தில் காணலாம். (10)



கைதடி, கள்ளிநகர் ஜான் மழலைகள் கல்விப் பூங்காவின் வரு டாந்த விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட மாணவர்களின் உடற் ப்யிற்சிக் கண்காட்சியைப் படத்தில் காணலாம்.

*(படம்: கைதடிச் செய்தியாளர்)*



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி எஸ்.வேதநாயகம், பாடசாலை அதிபர் எஸ்.யோகராசா ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10)



யாழ். பாலர் கல்விக் கழகத்தின் பேச்சுத்திறன் போட்டி நிகழ்வில் கழகச் செயலாளர் திருமதி தெ.இரத்தினகோபால் மங்களவிளக் கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம். நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களும் படத்தில் காணப்படுகின் றனர். (10)

# சேது சமுத்திரத்திட்டத்தினால் ஏற்படும் பாதிப்பை ஆராய்வதற்கு குழு நியமனம்

கொழும்பு,செப்.21

இந்தியாவின் சேது சமுத்திரத்திட்டத்தின் காரணமாக இலங்கைக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாக ஆராய்ந்து சிபாரசுகளை வழங்கு வதற்கான அமைச்சரவை மாற்றுக்குழுவொன்றை அரசு நியமித்துள்ளது.

இந்தியாவின் தென்பகுதியில் ஆதாம் பாலம் அமைந்திருப்பதன் காரணமாக கப்பல்கள் இந்தியாவைச் சுற்றிச்செல்லாமல் இலங்கை யைச் சுற்றிக் கொண்டு செல்லவேண்டியிருக்கிறது.

எனவே, இந்திய கிழக்கு மற்றும் தெற்குமுனைக் கடற்பகுதிகளை இணைக்கும் வகையில் ஆதாம் பாலத்தின் அடியிலும் பாக்கு நீரிணை யின அடிப்பகுதியிலும் கடலை ஆழப்படுத்திக் கப்பல் போக்குவரத்தை இலகுவாக்க இந்தியக் கப்பல் போக்குவரத்து அமைச்சு தீர்மானித் துள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது இலங்கை பெரிய அளவில் பாதிக்கப்படலாம் என்று இலங்கை அரசு கருதுகின்றது. தற்பொழுது கொழும்பைப் பயன்படுத்திவரும் சர்வதேச கப்பல் போக்குவரத்து பெரு மளவில் பாதிக்கப்பட்டு இலங்கைக்கு பெரும் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தலாம் என்றும் குறித்த பகுதியில் கடற் தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களின் ஜீவனோபாயமும் பாதிக்கப்படும் என்றும் இலங்கை கருதுகிறது. அத்துடன் வடகிழக்குப் பகுதி இலங்கையின் பாதுகாப்புப் பிரச்சினைக்குட்படுவதாகவும் கருதப்படுகிறது.

எனவே, வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் மேற்படி பிரச்சினை தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து சிபாரசுகளைச் செய் யும் படி மாற்றுக்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது. (ப)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 08 - 1981

மறைவு 03 - 10 - 2003



செல்வி
### அரியகுணராசா கார்த்திகா

திதி: 21.09.2004

பூவுலகில் வந்துதித்து
பாதியிலே பறந்துவிட்ட பாசமே
ஆண்டொன்று சென்றும் ஆறவில்லை
எம் நெஞ்சம் எவ்விடம் சென்றாயோ
தேனிலும் இனிய உனது மொழி
எம் காதுகளில் கேட்கிறதே
பல்கலையில் பட்டம் பெறுவாய் என்றிருந்தோம்
பாதியில் பட்ட மரம் ஆனாயோ
வளர்மதியே நீ வானத்தில் சென்றாயோ
ஒளி விளக்கே நீ எம்மைத் தவிக்கவிட்டு
மாயமாய் மறைந்த தென்ன உன் நினைவால்
துடிக்கின்றோம் ஓராண்டு அல்ல எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவு
எம் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.

ஓராங்கட்டை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (36488)-(24) - குடும்பத்தினர்.

# செவிப்புலன்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

★ விசேட பாடசாலைகளுக்கும் தேவையான, கேள்வி அளவீட்டுக் கருவிகள் கேள்வி-பேச்சுப பயிற்சி அளிப்பதற்கான நவீன கருவிகள் ஆகியவற்றைக் கல்வி அமைச்சு பிரித்தானியா - யப்பான் போன்ற நாடுகளிலிருந்து பெற்று, நாட்டிலுள்ள விசேட பாடசாலைகளுக்கு வழங்கவேண்டும். மொழியியல் பேரறிஞர்கள், துறை சார்ந்த பாட அறிஞர்கள், விசேட கல்வியில் ஆற்றல் - அனுபவம் உள்ளவர்க ளையும் உள்ளடக்கியதாக, "செவித்திறன் குறைந்தோர் கல்வி ஆய்வு மையம்" (Research Center For The Deaf Education) கல்வி அமைச்சின் அனுசரணையுடன் உருவாக்கிச் செயற்படுத்தப்படவேண்டும்.

### சகலரும் உதவுவோம்

எமக்குக் கேள்வித்திறன் உள்ளது - எமது மொழி இனிமையானது - மொழியின் இசை யினை இனிமையை, எம் கேள்வித் திறனால் உணர்ந்து இன்புறு கின்றோம். வாத்தியங் களின் இனிய நாதங் களைக் கேட்டு உளம் மகிழ்கின்றோம் கேள் வித்திறனால் கற்ற லில் மேம்பட்டு அறி வைப் பெருக்கியுள் ளோம். கற்றலின் ஒவ வோர் எல்லையிலும் - அதன் உரிமங்களாக பல பட்டச் சான்றிதழ் களையும் பெறுகின் றோம். சமூகத்தில் முதன் நிலையில் திகழ முனைகின் றோம்.

எம் அனுபவம் - ஆற்றல் - திறன் - பட்டச் சான்றிதழ் கள், இவைகள் எல் லாம் - மனித குலத் தில், கேள்வித் திறன் இழந்து - மொழியின் இனிமை - அழகு - இசையின் இனிமை - இசைக்கருவிகளின் இனிய நாதம் - ஒலி களின் வேறுபாடுகள் என்பவைகளை அறி யாது - அழகிய உல கில் மௌனத்தை உணரும் எம் மத்தி யில் வாழும் செவித்தி றன் குறைபாடுடைய குழந்தைகளைப் பற்றி நாம் சிந்தித்ததுண்டா?

எனவே, அவர்கள் - தம் கல்வியில் வளர்ச் சியும்பயனும் அடைய, எமது ஆற்றல்களை யும் - திறன்களையும் உதவ முன்வருவோ மாக!

"இதற்காகக் கல்வி யியலாளர்கள் தமது ஆக்கப்பாடுகளை விரை வாக முன்னெடுக்க வேண்டும்."

## முதலாம் வருட அஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

கடந்த 03.10.2003இல் யாழ். மடத்தடிச் சந்தியில் இராணுவ வாகன மோதலில் அகால மரணமுற்ற

### முருகையா இராசகுமார்

(ஊழியர் யாழ்., சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

*ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் இதயம்!*
*ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.*

இறைபதமடைந்த எமது அன்புக்குரியவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை 22.09.2004 புதன்கிழமை கற்கோவளத்தில் நடைபெறவுள்ளன. இதில் கலந்து பிரார்த்திக்கு மாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கற்கோவளம்,*
*பருத்தித்துறை.* (சி-37192) (24) - குடும்பத்தினர்.

19வருடகால தனித்துவமான பயிற்சி நிலையம்

## கலாலயா

பயிற்சியகம்

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்) **யாழ்ப்பாணம்.**

### மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்

- **கேக் ஐஸிங்** - சகல விதமான ஐஸிங் 22 வகையான கேக் அமைப்புகள், மாச்சீனி மலர்கள் (Sugar Crafting) என்பன வெகு சிக்கனமான முறையில் செய்தல்.
- **கூந்தல் அலங்காரம்** - 20இற்கும் மேற்பட்ட கொண்டைகள் (Hair Styles) போடுதல்.
- FABRIC PAINTING - SAREE PAINTING, கைக்குட்டை. தலையணை உறைகளில் வர்ணந்தீட்டல், EMBOSS PAINTING, POT PAINTING, மண் PAINTING.
- **உணவுகள் தயாரித்தல்** - மேலைத்தேய, கீழைத்தேய மற்றும் சீன உணவுகள் தயாரித்தல்.
- **கைவேலை** - கடதாசி அலங்காரம், கழிவுத்துணிவேலை, கிறிஸ்ரல் வேலை, முத்துமாலை கோர்த்தல், றிபன்வேலை.

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

இத்துடன் அடிப்படை FACIAL அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் விதமும் 2 நாள் வகுப்புகளாக நடைபெறும்.

### 6 மாதகால தையல் பயிற்சி, பூவேலை வகுப்புகள்


**தையல் பயிற்சி** - குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல்
**பூவேலை** - கடதாசியினாலும், துணிகளினாலும் 20 வகையான மலர்கள் மற்றும் BOUQUET செய்தல்

**சனி,ஞாயிறு புதிய வகுப்புகள் ஆரம்பம்:** 25.09.2004
**கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம்:** 27.09.2004

☞ மேலும் விவரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப.2.00 மணிவரை அறிந்துகொள்ளலாம். (C/37699)(42) - பதிவாளர்.

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

30ஆம் ஆண்டு 31ஆம் நாள் அஞ்சலி





அமரர்
**கன[illegible]ர் கணேஸ்**

திருமதி
**கணேஸ் சின்னத்தங்கச்சி**

| | | |
|---|---|---|
| 20-10-1921 | தோற்றம் | 11-04-1926 |
| 09-08-1974 | மறைவு | 22-08-2004 |

**அன்பு மொழி பேசி ஆதரவாய் அரவணைத்து - இவ்வுலகில்**
**இன்ப வாழ்வு வாழ்ந்த எம் அன்புத் தெய்வங்களே!**
**நீங்கள் மறைந்து எத்தனை ஆண்டுகளானாலும்**
**உங்கள் அன்புருவம் எம் நெஞ்சைவிட்டகலாது!**

இன்று (21.09.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப்பிரார்த்தனை நிகழ்விலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
திசைராஜா (இந்தியா) - தேவி,
தவராஜா (இந்தியா) - இராசம்மா,
தர்மராஜா (கனடா) - வனஜா,
தேவராஜா (ஜேர்மனி) - சந்திராதேவி,
பஞ்சராஜா - ரதிதேவி,
லிங்கராஜா (லண்டன்) - உஷா,
புஸ்பராணி (இந்தியா) - தேவராஜா,
புஸ்பகாந்தி - தெய்வேந்திரம்,
புஸ்பமலர் (இந்தியா)-சின்னராஜா
புஸ்பவதி - பாஸ்கரன்,
ரேவதி - பிராங்ளின்
மற்றும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்கைள்.

*83/6, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(36650)(24)




- கனம் 2.5 மி.மீ
- வேறு கூரைத்தகடுகளைவிட மலிவானது
- வெப்பம் குறைந்தது
- மழை நேரங்களில் இரைச்சலற்றது
- சுகாதார இடையூறு அற்றது
- துரு பிடிக்காதது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது
- குடியிருப்பு, விவசாய, வர்த்தக, கட்டிடங்களுக்கு உகந்தது

நீடித்த பாவனைக்கு
பொருத்தும் வழிகாட்டியின்படி
பொருத்துங்கள்
இதனை விற்பனையாளரிடம்
பெற்றுக் கொள்ள மறவாதீர்கள்

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ட் அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ. பே: 2524361-5, 2387383-5 ஃபெக்ஸ்: 2446534

விநியோகஸ்தர்
நாராயணா கட்டிடப் பொருள் வர்த்தகர், 95/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**கமமும் புலமும்**
**தயாரிப்பு : ஜெயஸ்ரீ**

# வெற்றிகரமான உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை



கமச் செய்கையானது போட்டிக்குரியதும், இலாபகரமான வியாபாரமாகவும் மாறியுள்ள இக்காலகட்டத்தில் பல பயிர்கள் எமது பிரதேசத்தில் செய்கை பண்ணப்படுகின்றன. இவற்றுள் சில உணவுப் பாதுகாப்பிற்காகவும் (Food security), சில சத்துணவுக்காகவும், சில பணப் பயிராகவும் பயிரிடப்படுகின்றன. நெல், குரக்கன் போன்ற தானியங்கள் பிரதான உணவிற்காகவும் மரக்கறிகள் உணவுப் போஷாக்கிற்காகவும் மற்றும் மிளகாய், வெங்காயம், புகையிலை, உருளைக்கிழங்கு முதலியன முக்கிய பணப்பயிர்களாகவும் எமது பிரதேசத்தில் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

அதி உயர் தொழில்நுட்பங்களின் மூலம் இப்பணப் பயிர்ச்செய்கையானது மேலும் விருத்தி அடைந்துள்ளது. இவ்வகையில் மேல்நாட்டில் ஈரவலயங்களில் பயிரிடப்பட்டு வந்த பீற்றூட், கோவா, கரட், லீக்ஸ் மற்றும் உருளைக் கிழங்கு என்பன தோட்டங்களிலும், கண்ணாடி வீடுகளிலும் (Glass House) பயிர் செய்யப்பட்டு வருகின்றன. எமது பிரதேசம் இனிவரும் பெரும்போக பயிர்ச்செய்கைக்குத் தயாராகும் இவ்வேளையில் முக்கிய பணப்பயிரான உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை பற்றிய சில அடிப்படைத் தரவுகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. கமக்காரர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் இத்தரவுகளால் பெரிதும் பயன் பெறமுடியும்.

### உருளைக்கிழங்கு

'பெரு' (Peru) எனும் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட இக்கிழங்கானது அனைத்துலக மக்களாலும் விரும்பி உண்ணப்படும் ஒரு கிழங்குப் பயிராகும். பலவகையில் பிரயோசனப்படும் இக்கிழங்கானது, அதிக வருவாயை ஈட்டித் தருவதாக உள்ளது. நிலக்கீழ்த் தண்டிலிருந்து முகிழ் மண் அணைத்தலின்போது உருவாகும் உருண்டை வடிவான கிழங்குகளில் அதிக அளவு மாச்சத்து உண்டு.

பொரியலாக, சிப்ஸ் ஆக மற்றும் உணவாக இன்னும் பல வழிகளிலும் இக்கிழங்கு பிரயோசனப்படுகிறது. இருப்பினும் தகுந்த சேமிப்பு அமைப்புகள் இல்லாதவிடத்து இக்கிழங்கானது அதிக நாள்களுக்குச் சேமித்து வைக்க முடியாத வொன்றாகவே இருக்கிறது.

### பொருத்தமான காலநிலை

ஈரவலய, மத்தியவலய மற்றும் உலர் வலயங்களிலும் வளரக்கூடிய இப்பயிருக்கு 24-32°C வெப்பநிலை சாதகமானது. யாழ்ப்பாணம், புத்தளம் போன்ற பகுதிகளில் பெரும்போகத்தில் குறிப்பாக இரவுநேர வெப்பநிலை தாழ்ந்து செல்லும் கால கட்டங்களில் இப்பயிரானது பயிர்செய்யப்படக்கூடியது. அதிகளவிலான நீர்த்தேக்கம் இப்பயிரின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிப்பதால் நன்கு நீரை வடிய விடக்கூடிய வளமுள்ள மண் இப்பயிர்ச்செய்கைக்கு அதிகம் பொருத்தமானது. இரு முறைகள் மண் அணைப்புச் செய்யவேண்டி இருப்பதால் விவசாயச் செய்கைகளுக்குப் பொருந்தும் மண்ணும் அவசியம். குமிழ் வைக்கும் காலங்களில் அதாவது நடுகைக்குப் பின்பு ஒரு மாத காலத்திலிருந்து இரவு பகல் உயர் தாழ் வெப்பநிலை வித்தியாசம் 15°C - 20°C இருக்கவேண்டும். இவ்வாறிருந்தால் நல்ல கிழங்குகள் உருவாகும். ஆனால், பிந்தியகால பயிர்ச்செய்கைகளின்போது அதிகளவு நோய் வாய்ப்பட ஏதுவாயுள்ளதால் பொருத்தமான காலத்தில் பயிரிடுதல் நல்லது. பிந்தியகால வறட்சி இக்குறித்த வெப்பநிலை வித்தியாசத்தை ஏற்படுத்தாத காரணத்தினால் பிந்திய காலப்பயிர்ச்செய்கை பொய்த்துவிடுவதுமுண்டு.

### இனங்கள்

தாராளப் பொருளாதாரக் கொள்கை காரணமாகவும் (Open Economy) வர்த்தகத்திற்கான பொது உடன்படிக்கையின் (GATT) பயனாகவும் பல்வேறுபட்ட உருளைக்கிழங்கு இனங்கள் தாராளமாக இறக்குமதி செய்யப்படுகின்றன. இவ்வகையில் அநேக இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவற்றிற்குரிய சரியான குணாம்சங்கள் இன்னும் விவசாயிகளால் தெளிவாக அறியப்படவில்லை.

விவசாயத் திணைக்களத்தால் ஆராய்ச்சிக்காகச் சில குறித்த இனங்கள் தருவிக்கப்படுவதுண்டு. இதனால் தனியார் நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்படும் அநேக உருளைக் கிழங்குகளின் குணாம்சங்கள் பற்றித் தெளிவாக அறியமுடியாதுள்ளது.

கமக்காரரின் நன்மைகருதிச் சில முக்கியமான இனங்கள் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த பெரும்போகத்தில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. எமது பிரதேசத்தில் இவ்வினங்களின் குணாம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### ராஜா (ஒல்லாந்து இனம்)

'எக்ரிகோ' நிறுவனத்தால் இவ்வினம் 1992 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. நீள்வட்ட வடிவானதும் மென்சிகப்பு நிறத்தோலையும் கொண்டது. இதன் விதைக் கிழங்குகள் சீரான பருமனுடையதாக இருப்பினும் முளைதிறன் சீரற்றது. அதாவது நடப்பட்ட எல்லாக் கிழங்குகளும் சீராக முளைத்து ஏறக்குறைய 3 மாத காலம்




எடுத்தது. அத்துடன் விதை கிழங்கின் பருமன் பெரிதாயிருப்பதால் விதைக்காக அதிக செலவும் ஏற்படும். அத்துடன் முதிர்வின்போதும் சீரான முதிர்வில்லை. நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் பிரபல்யமானதாயிருந்தாலும் யாழ்.மண்ணில் சிறப்பான பலன் தரவில்லை. முதிர்விற்கு அதிக காலம் எடுக்கும் இவ்வினம் அதிக விளைச்சல் உள்ளது.

### ஆனோவா (ARNOVA)

இளமஞ்சல் தோலினைக் கொண்ட இவ்வினக்கிழங்குகள் நீள்வட்ட வடிவமுடைய. கிழங்கின் மேற்பரப்பில் பெரிய வெளி நீட்டமுள்ள கண்கள் காணப்படும். மத்திய கால முதிர்வுடைய இவ்வினத்தின் இலைகள் பரந்தனவாயும் தண்டுகள் பெரியனவாயும் காணப்படும். 7-8 பெரிய பருமனுள்ள கிழங்குகளை விளைவிக்கும் ஒரு செடியில் இருந்து சாதாரண முகாமைத்துவத்தில் 500-600 கிராம் கிழங்குகள் பெறமுடியும். முதிர்விற்குப் பின்னும் ஓரளவு நீண்டகாலத்திற்கு நிலத்தின் கீழே விட்டாலும் புதிய இலைகள் தோன்றுவதோ பழுதடைவதோ இல்லை. அண்மைக்கால இனங்களில் மிகவும் சிறப்பானது இவ்வினமாகும்.

### லயிரா (LYRA)

இலங்கையில் கமக்காரர் மத்தியில் மிகவும் பிரசித்திபெற்றது. இது அழகான நீள்வட்டமுடைய மென்மஞ்சள் தோலினைக் கொண்டது. கவர்ச்சிகரமான நீள்வட்டக் கிழங்குகளை குறுகிய காலத்திலேயே இவ்வினம் தரக்கூடியது.

ஒரு செடியிலிருந்து 350 - 450 கிராம் வரை விளைவைப் பெறமுடியும்.

### பினெல்லா (Binella)

ஒல்லாந்து 'எக்ரிகோ' நிறுவனத்தின் இவ்வினம் 1994இல் இலங்கைக்கு அறிமுகமானது. உலர் காலநிலையைத் தாங்கி வளரக்கூடிய இவ்வினம், அரேபியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் பயிரிடப்படுகிறது. குறுகிய கால முதிர்வைக் கொண்ட இவ்வினம் இளமஞ்சல் புறத்தோலினைக் கொண்ட நீள்வட்டம் வடிவான கிழக்குகளைத் தரும் செடியொன்று 300 - 500 கிராம் வரை விளைவைக் கொடுக்கும்.

### டிசைறி (Desiree)

கடந்த 80 களிலிருந்து பயிரிப்பட்டுவரும் பழைய இனமாகும். ஒல்லாந்தில் இருந்து வெளிவரும் இவ்வினத்தின் பருமன் சிறியதாகவும் இளஞ்சிவப்புநிறத் தோலையுடையதுமாக காணப்படும் நடுகைக்குரிய இடைவெளி சரியாகப் பொருந்தி நல்ல விளைவைத் தரும் இவ்வினமானது கமக்காரர் மத்தியில் பிரசித்தி பெற்றது. குறுகிய காலத்தில் முதிர்வடைந்து 8-10 நடுத்தர அளவிலான சுமார் 300-400 கிராம் கிழங்குகளைத் தரும் இவ்வினம் வெற்றிகரமாக யாழ். பிரதேசத்தில் பயிரப்படலாம்.

### டிசைறி - G-2 (Desiree)

கடந்த ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இவ்வினம் நல்ல பலனைத் தந்தது. சாதாரண டிசைறியைவிட பருமனில் சற்றுச் சிறிய, ஆனால், எண்ணிக்கையில் கூடிய கிழங்குகளை உருவாக்கும் பொதுவாகவே குறுகிய காலப்பயிர்கள் ஒப்பீட்டளவில் குறுகிய விளைச்சலைத் தருவதுண்டு, இருப்பினும் இவ்வினம் மிகக் குறுகிய காலத்தில் முதிர்வடைவதால் சந்தையில் உருளைக்கிழங்கு நல்ல விலை போகும். இதனால் இவ்வினத்தினால் அதிக இலாபம் பெற வாய்ப்புண்டு. அத்துடன் நடுகை இடைவெளி குறைக்கப்படக்கூடிய பருமனைக் கொண்டுள்ளதால் அதிக செடிகள் குறித்த பரப்பில் பயிரிடமுடியும்.

மேற்கூறிய எல்லா இனங்களுமே பிற்கூற்று, முற்கூற்று வெளிறல்களுக்குத் தாக்குப் பிடிக்கும் தன்மை அற்றவை. உருளைக்கிழங்குச் செய்கையின் முக்கிய பிரச்சினையே இவ்வெளிறல் நோயாகும். அடுத்ததாகச் சிற்றுண்ணிகளும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

### பிற்கூற்று வெளிறல் (Late Blight)

தாவர வளர்ச்சியின் எப்பருவத்திலும் இந்நோய் தோன்றக்கூடும். இலை நுனிகளில் நீர்ப்பற்றான புள்ளிகள் சில தோன்றி, இலை சுருண்டு அழுகிவிழும். நல்ல குளிர் இரவுகளுக்குப் பின்பு தொடர்ந்து வரும் வெப்பமான நாள்கள் இந்நோயை அதிகரிக்கும்.

### முற்கூற்றுவெளிறல் (Early Blight)

இலை மேற்பரப்பில் பரவலான புள்ளி போன்று ஆரம்பிக்கும். இறுதியில் இலைகள் மஞ்சல், கபில நிறமாகி உதிர்ந்துவிடும். இவ்விரு நோய்க்கும் வெவ்வேறு பங்கசுகள் காரணமாயிருந்தாலும் ஒரேவகையான பங்கசு நாசினிகள் பாவித்துக் கட்டுப்படுத்த முடியும்.

இவ்விரண்டு நோய்களுக்குமுரிய சாதகமான சூழல் பெரும்போகப் பியிர்ச்செய்கையின் போது எந்நேரத்திலும் இருப்பதால் வருமுன் காத்தலே பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### சிற்றுண்ணித் தாக்கம்

மரக்கறிப் பயிர் வகைகளைத் தாக்கும் சிற்றுண்ணிவகையே உருளைக்கிழக்குப் பயிரையும் தாக்குகின்றது. குருத்திலைகள் சுருண்டு கருகல் போன்ற நிலையை ஏற்படுத்தும். இந்நோயைக் கட்டுப்படுத்த கந்தகம் பிரயோகிக்கலாம். சிற்றுண்ணிகளை இலகுவாகக் கந்தகத்தால் கட்டுப்படுத்தமுடியும். ஆனால், தவறுதலாகப் பொருத்தமற்ற கிருமிநாசினிகளை விசிறுமிடத்து இச்சிற்றுண்ணிகள் அழியாது. மாறாக இதன் தாக்கம் அதிகரிக்கும்.

### முக்கிய அம்சங்கள்

★ நிலத்தை நேரகாலத்துடனே துப்புரவு செய்து முழுக் களைநாசினியான 'கிளைபோசெற்' விசிறி 15 நாள்களின் பின் களைகள் எல்லாம் இறந்தபின்பு நிலத்தை நன்றாகப் பண்படுத்தவும்.

★ நடுகைக்குரிய காலமும் இனமும் முன்கூட்டியே தீர்மானிக்கப்படவேண்டும்.

★ நம்பிக்கையான முகவர்களிடத்தில் விதை உருளைக்கிழங்கைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

**சி.ஜே.அரசகேசரி**
**ஆராய்ச்சி உத்தியோகத்தர்,**
**விவசாய ஆராய்ச்சி நிலையம்**
**திருநெல்வேலி.**

★ புதிய இனங்கள் பற்றிய முழு விவரங்களையும் முகவர்களிடத்தில் பெற்றபின்பே தங்களுக்குரிய இனத்தைத் தெரிவு செய்யவேண்டும். பல்வேறுபட்ட இனங்கள் தற்போது சந்தையில் இருந்தாலும் திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையத்தில் எமது ஆய்வுக்குட்பட்ட இனங்களில் அனோவா, பினெல்லா, லயிரா எனும் இனங்கள் சிறந்த பயனுள்ள இனங்களாகும். அத்துடன், டிசைறி G-2 எனும் இனமும் அதிக இலாபம் தரும் இனமாகும்.

★ சரியான இடைவெளிகளில் விதை கிழங்குப் பருமனுக்கு ஏற்ற வகையில் நன்றாக முளைகட்டிய கிழங்குகளை நடுகை செய்தல் வேண்டும்.

★ நடுகைக்குப்பின் களை நாசினிகளின் பிரயோகம் பற்றிய அச்சம் கமக்காரர் மத்தியில் நிலவுகிறது. ஒவ்வொரு பயிருக்கும் நடுகைக்குப் பின்பும் நடுகைக்கு முன்பும் என வெவ்வேறான தனித்துவமுள்ள களை நாசினிகள் விசிற முடியும். இவ்வாறான களை நாசினிகள் பயிர்வளர்ச்சியையோ, விளைவையோ பாதிக்காது. பரிந்துரைக்கப்பட்ட களைநாசினிகளை கிழங்குகள் நட்டு 21 நாள்களுக்குள் விசிறிமுடியும்.

★ அறுவடையைப் பொருத்தமான காலத்தல் மேற்கொண்டால் அதிக இலாபம் பெறமுடியும். எனவே, சந்தை நிலைவரம் அன்றாடம் தெரிந்திருத்தல் நல்லது.

எதிர்வரும் பெரும் போகத்தில் உருளைக் கிழக்குப் பயிர்ச்செய்கைக்குத் தயாராகும் விவசாயிகளே சரியான இனத்தைத் தெரிவுசெய்து, சரியான முறையில் பயிர்செய்து அதிக இலாபமீட்டும் உருளைக்கிழக்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்வது உங்கள் கைகளிலேயே உள்ளது.



# செய்திக்கொத்து

## அனுமதியின்றி பனைமரங்கள் தறிப்பு

வட்டுக்கோட்டை,செப்.21

வலிகாமம் மேற்குப்பகுதியில் உள்ள பல இடங்களில் சட்டவிரோதமான முறையில் பெருமளவு பனைமரங்கள் கட்டடங்களின் தேவைகளுக்கெனத் தறிக்கப்பட்டு வருகின்றன.

பெருமளவு பனைமரங்கள் தறிக்கப்பட்டு வருவது கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருகின்றது. இதனால் எதிர்காலத்தில் பனைவளம் கேள்விக்குரியதாகும் நிலை ஏற்படவுள்ளது.

யாழ்குடாநாட்டின் முக்கிய சொத்தான பனைமரங்கள் அனுமதியின்றித் தறிக்கப்படுவதை உரியவர்கள் தடைசெய்யவேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (10-161)

☆ ☆ ☆

## வயல் வெளிகளில் பறக்கும் பொலித்தீன் பைகள்

வட்டுக்கோட்டை,செப்.21

வட்டுக்கோட்டை, அரசடி ஆகிய பகுதிகளில உள்ள நெல்வயல்களில் நெற்செய்கை மேற்கொள்வதற்காகக் கொட்டப்பட்ட வீட்டுக் குப்பைகளில் உள்ள பொலித்தீன்கள் வயல் வெளிகளில் உல்லாசமாகப் பறக்கின்றன.

அண்மைக் காலமாக அதிகரித்துவரும் பொலித்தீன் பாவனையால் பொலித்தீன் கழிவுகள் குப்பையுடன் சேர்த்து வயல் நிலங்களில் கொட்டப்படுவதால் காற்றுடன் பொலித்தீன்கள் பறந்து திரிகின்றன.

இவ்வாறு பறந்து திரியும் பொலித்தீன் வயலகளில் மண்ணுடன் புதையுண்டு நெற்செய்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-161)

☆ ☆ ☆

## வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை

செம்பியன்பற்று,செப்.21

மருதங்கேணி கோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான விளையாட்டு மைதானங்கள், கணனிகள், நூல்நிலையங்கள், புத்தகங்கள், தளபாடங்கள் மற்றும் தட்டச்சு இயந்திர வசதிகளைப் பெற்றுத்தருவதற்கு நடவடிககை எடுக்குமாறு மேற்படி பாடசாலைகளின் அதிபர்கள், யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரனிடம் கடிதமூலம் கோரியுள்ளனர். (10-36-201)

☆ ☆ ☆

## பாடசாலைக்கு கணனிகள்

வடமராட்சி,செப்.21

பிரான்ஸ், தென்றல் தமிழ் மாணவர் அமைப்பு, உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு பத்துக் கணனிகளை வழங்கியுள்ளது

இக் கணனிகள் கையளிப்பு வைபவமும், உடுத்துறை மகாவித்தியாலய கணனி நிலையத் திறப்புவிழாவும் வித்தியாலய அதிபர் ஏ.எஸ். அரியகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழும் உடுத்துறை மகாவித்தியாலயப் பழைய மாணவர்கள் மேற்படி கணனிகளை வழங்குவதற்கு அனுசரணை வழங்கினர். (10-182-201)

☆ ☆ ☆

## வீதிகளில் கட்டாக்காலிகள்

வட்டுக்கோட்டைப் பகுதியில் வீதிகளில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது. இதனால் விபத்துக்கள் ஏற்படும் நிலையும் காணப்படுகிறது.

காலபோக நெற்செய்கைக்காக வயல் நிலங்கள் பண்படுத்தப்படுவதால் கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடு, மாடுகள் வீதிகள் ஊடாக குடிமனைகளுக்குள்ளும், ஆலயங்கள், பொது இடங்கள் என்பவற்றுக்குள் புகுந்து பயன்தரு மரங்களையும் சேதமாக்குகின்றன. (4-161)

### ஆசிரியர் தேவை

தரம் 10,11இற்கு தமிழ் கற்பிக்க ஆசிரியர் தேவை.

**S.Eswary**
**Kumaran Institute,**
Navaly North, Manipay.

(36690)

### தவறிவிட்டது

ஹரிஹரபுத்திரன் சிவகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 711314504V), 20-08-2004 வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 12/7, கன்னாதிட்டி ஒழுங்கை, கன்னாதிட்டி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (36698)

சிறந்த முறையில்
றபர் சீல்கள்
உயர் ரக
பொலிமர் சீல்கள்
விரைவாக செய்து கொள்வதற்கு
மருதி
றபர், பொலிமர் சீல் தொழிற்சாலை.
495, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்
(36242)

### "ரூலின்ஸ்"

பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

01) வேலைத்தள மேற்பார்வையாளர்கள் (02)
02) பட வரைஞர் (02)

காலை 9.00 - 10.30 அல்லது மாலை 5.00 - 6.30 மணிக்குள் நேரடியாக வந்து சந்திக்கவும்.

இல. 6, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(36697)(30-11-18-21)

### VACANCY
### FIELD OFFICER

A vacancy exists at the Jaffna College Institute of Agriculture, Maruthanamadam for the post of a field officer

***The required qualifications are***

1. Minimum of 4 years experience in working in a farm
2. Agricultural training in one of the Agriculture Institutes or Farm schools

Apply to Principal before 30.09.2004.

Principal,
**Jaffna College Institute of Agriculture**
**Maruthanamadam.**

(36702) (42-21-11-18)

### JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
### *SHORT COURSE IN AGRICULTURE - 2004*
### குறுகியகால விவசாயப் பயிற்சிநெறி - 2004

நான்கு மாதகால - பயிர்வேளாண்மை, விலங்கு வேளாண்மை, பூங்கனியியல், விவசாய தத்துவங்கள் ஆகிய துறைகளை உள்ளடக்கிய இலவச பயிற்சி நெறிக்கு விவசாயத்தை சுயதொழிலாக மேற்கொள்ளவிரும்பும் அல்லது தொழில்வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் க.பொ.த. (சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த 17-25 வயதுக்கிடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சிக்காலத்தில் உதவுதொகையும் பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் 27.09.2004 திங்கட்கிழமை காலை 9.00மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:

அதிபர்,
**யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,**
மருதனார்மடம், சுன்னாகம்.

(36701)(42)

# மரண அறிவித்தல்கள்

## சின்னவி இரத்தினம்



புலோலி மேற்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த மனோன்மணியின் அன்புக் கணவர் சின்னவி இரத்தினம் 16-09-2004 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் யோகம்மா (கனடா), இராஜேஸ்வரி (டென்மார்க்), பரிமளா ஆகியோரின் அன்புத் தந்தையும் அல்போன்சஸ் (கனடா), தெய்வேந்திரம் (டென்மார்க்), அரியநாயகம் (கப்பல் பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டீலியா (கனடா), டினோ (கனடா), யூஜினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னராது நல்லடக்கம் புலோலி சேமக்காலையில் இன்று (21.09.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும்.

*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*

தகவல்:
வே.அரியநாயகம்
(மருமகன் - பட்டு)

(36700) (26-21-18-11)

## திருமதி நாகேசு தங்கம்மா



புங்குடுதீவு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மண்கும்பானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேசு தங்கம்மா அவர்கள் 18.09.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை காமாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்தம்பியின் அன்புச் சகோதரியும் நாகேசுவின் அருமை மனைவியும் பத்மாவதி (கனடா), பத்மநாதன் (பூநகரி), புஸ்பவதி (முழங்காவில்), புஸ்பநாதன் (கொழும்பு), கமலாவதி (மண்கும்பான்) காலஞ்சென்ற கேமாவதி ஆகியோரின் அருமைத் தாயாரும் விக்கினராஜா (கனடா), வள்ளிநாயகி, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் புஸ்பலதா, தில்லைநடேசன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2004) புதன்கிழமை காலை10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5 ஆம் வட்டாரம்,*
*மண்கும்பான் மேற்கு,*
*மண்கும்பான்.*

தகவல்:
ந.தில்லைநடேசன்
(ராசன்)

(36694)(32-21-18-11)

# பொது நிகழ்வுகள்



நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட வேலணைப் பெரியகுளம், மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். மாவட்ட நியாப் திட்டப் பணிப்பாளர் கே.பாலகிருஷ்ணன் மற்றும் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10-5)



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற திருமதி கோகிலா மகேந்திரனின் "முகங்களும் மூடிகளும்" என்ற சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் தயா.சோமசுந்தரத்திடமிருந்து ஆசிரியரும் உளவளத் துணையாளருமான திருமதி த.சத்தியதாசன் சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். நூலாசிரியர் திருமதி கோகிலா மகேந்திரனும் படத்தில் உள்ளார். (படம்: வலி.தெற்குச் செய்தியாளர்)




சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் லியோ கழக அங்குரார்ப்பண விழாவில் லயன்ஸ் கழக இளைஞர் விவகாரப்பிரிவு மாவட்டத் தலைவர் லயன் கே.துரைராசா உரையாற்றுவதையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் உட்பட லயன்ஸ் கழக, லியோகழக உறுப்பினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)



வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் அரச உத்தியோகத்தர்களுக்கு நடத்தும் ஆங்கிலப் பயிற்சிநெறி பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டபோது அதிபர் செல்வி அ.கனகரத்தினம் தலைமையுரை நிகழ்த்துவதையும், வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், ஆங்கிலப் போதனாசிரியர் எஸ்.இரத்தினம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: வடமராட்சிச் செய்தியாளர்)



யாழ்.போதனா வைத்தியசாலைப் பணியில் இருந்து நீங்கி வெளிநாடு செல்லும் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் தயாளன் அம்பலவாணருக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பிரியாவிடை நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம்

டாக்டர் தயாளன் அம்பலவாணரை சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் கோ.கோபாலசிங்கம் மாலை அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். .(10-15)

# மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2004



துடுப்பெடுத்தாடும் பாகிஸ்தான் அணித் தலைவர் இன்ஸமாம்



பந்தொன்றைத் தடுத்தாட முயலும் இந்திய வீரர் ராகுல் ட்ராவிட்



பாக். அணியின் விக்கெட் ஒன்றைக் கைப்பற்றிய மகிழ்ச்சியில் இந்திய வீரர்கள்



இந்திய வீரர் ஷேவாக்கின் விக்கெட்டை வீழ்த்திய பாக். வீரர் நவீத் உல் குசைன்

## அரையிறுதி ஆட்டங்கள் இன்றும் நாளையும்

**மினி** உலகக் கிண்ணப் போட்டியின் முதற் சுற்று ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டத்துடன் நிறைவடைந்துவிட்டன.

12 அணிகள் கலந்துகொண்ட இப்போட்டித் தொடரிலிருந்து பலம்மிக்க இந்தியா, தென்னாபிரிக்கா, இலங்கை, நியூஸிலாந்து போன்ற அணிகளும் சிம்பாப்வே, கென்யா, பங்களாதேஷ், அமெரிக்கா போன்ற அணிகளும் வெளியேறிவிட்டன.

இன்று நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பலம்மிக்க ஆஸ்திரேலிய அணியும் அண்மைக்காலத்தில் பலம்பெற்றுவரும் இங்கிலாந்து அணியும் மோதவுள்ளன. இரு அணிகளையும் பொறுத்தவரையில் துடுப்பாட்டம், பந்துவீச்சு ஆகிய இரண்டுமே மிகவும் சிறப்பாக உள்ளன. ஆனால் களத்தடுப்பில் ஆஸ்திரேலிய அணியே பலமாக உள்ளது. ஆயினும் களத்தடுப்பிலும் இங்கிலாந்து அணியைக் குறைத்து மதிப்பிடமுடியாது.

ஆஸ்திரேலிய அணியின் கிளென் மக்ராத்துடன் ஒப்பிடும் அளவிற்கு இங்கிலாந்து அணியின் ஹார்மிஷன் அண்மைக்காலமாக மிகவும் சிறப்பாகப் பந்து வீசி வருகின்றார். அதேபோன்று டெரன் கௌவ், அன்ட்ரூ பிளின்டொப், ஆஷ்லி கில்ஸ் ஆகியோரும் சிறப்பாகப் பந்து வீசி வருகின்றனர். ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் சிமென்ஸ், இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பிளின்டொப் ஆகியோர் ஆட்டத்தின் போக்கையே மாற்றக்கூடியவர்கள். நியூஸிலாந்து அணியுடனான வெற்றிக்கு சிமென்ஸ் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடியது போன்று இலங்கை அணியுடனான வெற்றிக்கு பிளின்டாப் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். இதனால் ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகள் வெற்றியீட்டி அரையிறுதிக்குள் நுழைந்துள்ளன.


இன்றைய போட்டியில் ஆஸ்திரேலிய அணியை இலகுவாக எதிர்கொள்ளத் தமது வீரர்கள் தயாராக இருப்பதாக இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார். அதேபோன்று வேகப்பந்து வீச்சாளர் டெரன் கௌவும் தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாக டெஸ்ட் போட்டிகளிலும், ஒரு நாள் போட்டிகளிலும் சிறப்பாக ஆடிவரும் இங்கிலாந்து அணி, அரையிறுதிக்குள் நுழையும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் பலமான இலங்கை அணியை அது வெற்றிகொள்ளுமா எனக் கேள்விகள் எழுந்தன.

அதற்கு ஏற்றாற்போல் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 32 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களையே பெற்றிருந்தது. மிகுதி 18 ஓவர்களையும் எதிர்கொள்ளமுடியாமல் மழை குறுக்கிட்டதால் மறுநாள் அந்தப் 18 ஓவர்களையும் எதிர்கொண்டது இங்கிலாந்து அணி. இந்தப் 18 ஓவர்களிலும் 4 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை எடுத்திருந்தது இங்கிலாந்து அணி.

50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து அணிக்கு பிளின்டொப் 104 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார் இவற்றுள் 8 பவுண்டரிகளும் மூன்று சிக்ஸர்களும் அடங்கும். ரெஸ்கோதிக் 66 ஓட்டங்களையும் கொலிவூட் 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பின்னர் களமிறங்கிய இலங்கை அணி 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 95 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாவது நாளும் மழை குறுக்கிட்டதால் 'டக்வோர்த் லூயிஸ்' முறைப்படி 49 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே இன்று நடைபெறவுள்ள போட்டி 78ஆவது போட்டியாகும். இதுவரை நடைபெற்று முடிந்த 77 போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி 44 போட்டிகளிலும் இங்கிலாந்து அணி 31 போட்டிகளிலும் வெற்றியீட்டியுள்ளன. எனவே இன்றைய ஆட்டத்தில் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறுமா இங்கிலாந்து அணி.









நாளை நடைபெறவுள்ள மற்றோர் அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தான் - மேற்கிந்திய அணிகள் மோதவுள்ளன. இரு அணிகளும் பலம்மிக்க அணிகளை வெற்றியீட்டியே அரையிறுதிக்குள் நுழைந்துள்ளன.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் பலத்த போராட்டத்தின் பின்னரே பாகிஸ்தான் அணி வெற்றியீட்டியது. இரு அணிகளுக்கும் ஆரம்பம் அதிர்ச்சியாக இருந்தபோதும் பின்னர் இரு அணிகளும் சுதாகரித்துக்கொண்டன. அதனால் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற முடிந்தது. இதனால் இந்திய அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. ராகுல் ட்ராவிட் 67 ஓட்டங்களையும், அகார்கர் 47 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் நவீத் உல் குசைன் ரானா 4 விக்கெட்டுக்களையும் சொஹைப் அக்தர் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து களமிறங்கிய பாகிஸ்தான் அணியும் பலத்த போராட்டத்தின் மத்தியில் 49.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு உரிய இலக்கை அடைந்து அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. அந்த அணியின் அதிரடி வீரர் சஹீட் அப்ரிடி எடுத்த 25 ஓட்டங்கள் பாகிஸ்தான் அணியின் வெற்றியை உறுதி செய்தது. அணியின் சார்பில் யூசுப் யுகானா ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களையும், அணித்தலைவர் இன்ஸமாம் 41 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் இர்பான் பதான் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பலத்த போட்டியின் மத்தியில் தோல்வியுற்ற இந்திய அணி அரையிறுதிக்குத் தகுதி பெறாமல் தொடரிலிருந்து வெளியேறியது. கடந்த மினி உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணியுடன் கிண்ணத்தைப் பகிர்ந்துகொண்ட இந்திய அணிக்கு டெண்டுல்கர் அணியில் இடம்பெறாதது ஒரு பின்னடைவே.

நாளை நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியுடன் மோதவுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றமையானது அந்த அணிக்கு கிடைத்த ஒரு சிறப்பு என்றே குறிப்பிட வேண்டும். இவ்வாறான ஒரு பெரிய போட்டியில் கடந்த பல காலங்களாக மேற்கிந்திய அணி பெரிதும் சோபிக்கவில்லை என்றே கூறவேண்டும். குறிப்பாக அதிர்ஷ்டமில்லை என்றே சொல்லவேண்டும்.

### ஜெயஸ்ரீ

கடந்த ஆண்டில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெறாமல் வெளியேறியமை, 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற மினி உலகக் கிண்ணப் போட்டியில் முதல் சுற்றுடன் வெளியேறியமை 1999ஆம் ஆண்டில் நடைபெற்ற மினி உலகக் கிண்ணப் போடடியில் முதல் சுற்றுடன் வெளியேறியமை, 1999ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் கால் இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா அணியிடம் தோல்வியுற்று வெளியேறியமை என்றவாறு மேற்கிந்திய அணியின் கடந்த காலம் இருண்டதுதான்.

இப்போட்டியில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றமையால் அணியின் பலம் மேலும் அதிகரிக்கக்கூடும். அத்துடன் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களில் பலர் இளம் வீரர்களாக இருப்பதும் அதற்கு ஒரு காரணமாகும். குறிப்பாக சர்வான், சந்தர்போல், கைல் ஆகியோரின் துடுப்பாட்டம் அணியின் வெற்றிக்குப் பெரிதும் உதவுகிறது. மழையின் காரணமாக இரண்டு நாள்கள் நடைபெற்ற தென்னாபிரிக்கா - மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் மேற்கிந்திய அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 246 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் சார்பில் ஹேர்சல் கிப்ஸ் 101 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஸ்மித் 45 ஓட்டங்களையும் றுடெல்ப் 46 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் மேற்கிந்திய அணியின் சார்பில் கிறிஸ் கைல் 3 விக்கெட்டுக்களையும் பிரட்ஷா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து களமிறங்கிய மேறகிந்திய அணியின் முதல் இரு விக்கெட்டுக்களும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதும் பின்னர் ஆடவந்த அணித் தலைவர் லாரா, சர்வான், சந்தர்போல் ஆகியோர் மிகவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றனர். இதனால் 48.5 ஓவர்களில் மேற்கிந்திய அணி உரிய இலக்கை அடைந்து வெற்றியீட்டியது. அணியின் சார்பில் சர்வான் 75 ஓட்டங்களையும் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும் அணித் தலைவர் லாரா 49 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஷேன்பொலக் 2 விக்கெட்டுக்களையும் நிற்ணி 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சர்வான் தெரிவானார்.

பாகிஸ்தான் அணியில சிறப்பான பந்துவீசசு, துடுப்பாட்டம் என்பன உள்ளது போன்று மேற்கிந்திய அணியில் பந்துவீச்சு சிறப்பானதாக இல்லை என்றே சொல்லவேண்டும். துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரையில் இன்சமமாம், யுகானா, சொகைப் மாலிக், யசீர் ஹமீட், அப்துல்ரசாக், மொயின்கான், சுப்ரியா ஆகியோர் பாகிஸ்தான் அணியில் உள்ளனர் என்றால் லாரா, சர்வான், சந்தபோஸ், கைல், வேவல் ஹிண்ட்ஸ், றிக்காட்டோ பவல் ஆகியோரும் மேற்கிந்திய அணியில் உள்ளனர்.


எனவே, பந்துவீச்சின் மூலம்தான் பாகிஸ்தான் அணிக்கு வெற்றி வாய்ப்புக்கிடைக்க வேண்டும். இல்லையேல் ஆட்டம் இரு அணிகளுக்கும் சவாலகவே இருக்கும். 25ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் விளையாடப்போவது ஆஸ்திரேலியா, மேற்கிந்தியா, இங்கிலர்ந்து, பாகிஸ்தான் இவற்றுள் எது? பொறுத்திருப்போம். ★

### முதலாவது அரையிறுதிப் போட்டி


**ஆஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து**




ஆட்டமிழந்து செல்லும் இங்கிலாந்து வீரர் அன்ட்ரு



இங்கிலாந்து வீரர் ட்ரெஸ்கொதிக்கை ஆட்டமிழக்கச் செய்த இலங்கை அணி வீரர் ரி.எம்.டில்ஷான்



பந்தொன்றை அடிக்கமுயலும் தென்னாபிரிக்க அணியின் தலைவர் கிரேம் சிமித்



பந்தொன்றைத் தடுக்கும் மேற்கிந்திய வீரர் ஹின்ட்ஸ்

# மாகாணமட்டத் தமிழ்த்தினப் போட்டிகளின் யாழ்., கிளிநொச்சி, முல்லை மாவட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.21

திருகோணமலையில் கடந்த 17ஆம், 18 ஆம் திகதிகளில் நடைபெற்ற மாகாண மட்டத் தமிழ் மொழித்தினப்போட்டியின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

அவற்றில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் பெற்ற பெறுபேறுகளின் விவரம் வருமாறு:-

★ வாசிப்பு: முதலாம் பிரிவு - முதலாம் இடம் த.கோகுலன் (கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்).

★ ஆக்கத்திறன் வெளிப்பாடு:முதலாம் பிரிவு - மூன்றாம் இடம் - காஜா றோகணன் சௌஜா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

★ ஆக்கம் எழுத்து: முதாலாம் பிரிவு - முதலாம் இடம் - த.அபிநயா (சாவகச்சேரி ஆரம்ப பாடசாலை).

★ கட்டுரைவரைதல், கடிதம் வரைதல்: மூன்றாம் பிரிவு - முதலாம் இடம் பா.ஜசிந்தா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

★ கட்டுரை வரைதல், கவிதை நயத்தல்: நான்காம் பிரிவு - முதலாம் இடம் வா.தர்மிஷா (யூனியன் கல்லூரி).

★ இலக்கணப் போட்டி: ஐந்தாம் பிரிவு - முதலாம் இடம் - தி.காயத்திரி (மகாஜனாக் கல்லூரி).

★ திறனாய்வுப்போட்டி: ஐந்தாம் பிரிவு - முதலாம் இடம் - வி.மயூரதாஸ் (புற்றளை மகா வித்தியாலயம்).

★ குறுநாடக ஆக்கம்: நான்காம் பிரிவு - இரண்டாம் இடம் - சௌ.கபிலா (கொழும்புத் துறை இந்து மகா வித்தியாலயம்).

★ குறுநாடக ஆக்கம்: ஐந்தாம் பிரிவு - முதலாம் இடம் - கு.அறிவழகன் (மல்லாகம் ம.வி).

★ கவிதை: நான்காம் பிரிவு -முதலாம் இடம் அ.அனுஷானி, (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி).

★ கவிதை ஆக்கம்: ஐந்தாம் பிரிவு - மூன்றாம் இடம் - சி.சிவரூபன் மட்டுவில் (சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்).

★ சிறுகதை ஆக்கம்: ஐந்தாம் பிரிவு - இரண்டாம் இடம்-யோ.ரிஷிகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

★ பேச்சு: இரண்டாம் பிரிவு - மூன்றாம் இடம் ம.ரொசீன் மெலானி (இளவாலை கன்னியர்மடம் ம.வி).

★ பேச்சு: ஐந்தாம் பிரிவு - முதலாம் இடம்- தெ.ஹர்சன் (யாழ்.மத்திய கல்லூரி).

★பாஓதல்: இரண்டாம் பிரிவு - இரண்டாம் இடம் கா.சர்மிளா (வட்டு.மத்திய கல்லூரி),

★ பாஓதல்: மூன்றாம்பிரிவு - இரண்டாம் இடம் தி.சேந்தன் (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி).

★ பாஓதல்: நான்காம் பிரிவு -இரண்டாம் இடம்- ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை).

★தனி இசை: இரண்டாம் பிரிவு - முதலாம் இடம் - இ.மாதங்கி (இணுவில் இந்துக் கல்லூரி).

★ தனி இசை: மூன்றாம் பிரிவு இரண்டாம இடம் - யோ.தனப்பிரியா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி).

★தனி இசை: நான்காம் பிரிவு - முதலாம் இடம் - கு.ஜெகதீசன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

★ தனி இசை: ஐந்தாம் பிரிவு - முதலாம் இடம் - வி.ஜீவிகா (யூனியான் கல்லூரி).

★ குழு இசை: குழு 1 முதலாம் இடம் - வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.

★குழு இசை: குழு2 இரண்டாம் இடம் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

★ தனி நடனம்: முதலாம் பிரிவு - முதலாம இடம் த.சரவண்யா (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை)

★ தனிநடனம்: நான்காம் பிரிவு - முதலாம் இடம் - பா.அனுஜன் (யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம்).

★ தனிநடனம்: ஐந்தாம் பிரிவு - இரண்டாம் இடம் - ஆ.ஜீவிதா (இராமநாதன் கல்லூரி)

★ குழு நடனம்: குழு I - இரண்டாம் இடம் - இராமநாதன் கல்லூரி.

★ நாட்டிய நாடகம்: குழு II - முதலாம் இடம் - யாழ். இந்து மகளிர் கல்லூரி.

★ நாடகம்: திறந்த போட்டி - முதலாம் இடம் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

★ வில்லுப்பாட்டு: திறந்த போட்டி - முதலாம் இடம் - வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.

★ விவாதம்: திறந்தபோட்டி - மூன்றாம் இடம் - யாழ்ப்பாணக் கல்லூரி.

★ தமிழறிவு வினாவிடை: - திறந்தபோட்டி - முதலாம் இடம் - தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

**கிளிநொச்சி மாவட்டம் பெற்ற பெறுபேறு களின் விவரம் வருமாறு:-**

★ வாசிப்பு: இரண்டாம் பிரிவு - மூன்றாம் இடம் - வி.யஸ்ரிகா (புனித திரேசா வித்தியாலயம்).

★ கட்டுரை வரைதல், கடிதம் வரைதல்: இரண்டாம் பிரிவு - இரண்டாம் இடம் - த.கோபிதா (முருகானந்தா மகாவித்தியாலயம்).

★ கட்டுரைவரைதல், கடிதம் வரைதல்: மூன்றாம் பிரிவு - இரண்டாம் இடம் - ந.பவித்திரா (புனித திரேசாமகாவித்தியாலயம்).

★ தமிழியற்கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்: ஐந்தாம் பிரிவு - மூன்றாம் இடம்- ந.நுகிர்தா (மத்திய மகாவித்தியாலயம்).

★ இலக்கணப்போட்டி: நான்காம் பிரிவு - இரண்டாம் இடம் - தி.ஸ்ரீரஜீவன் (கிளிநொச்சி இந்துக்கல்லூரி.

★ குறுநாடக ஆக்கம்: நான்காம் பிரிவு - முதலாம் இடம் - வே.சுபிதா (கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம்)

★பேச்சு: ஐந்தாம் பிரிவு - மூன்றாம் இடம் சி.பிரசாத் (முருகானந்தா மகாவித்தியாலயம்).

★ பாஓதல்: முதலாம்பிரிவு - முதலாம் இடம் - சூ.கோபிகிருஸ்ணா (தர்மபுரம் இல.1 அ.த.க.பாடசாலை).

★ தனி இசை: இரண்டாம் பிரிவு - இரண்டாம் இடம் - பா.அன்பரசி (முருகானந்தா மகா வித்தியாலயம்)

★ நாடகம்: திறந்த போட்டி - இரண்டாம் இடம் - கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

**முல்லைத்தீவு மாவட்டம் பெற்ற பெறுபேறுகளின் விவரம் வருமாறு:**

★ இலக்கணப்போட்டி -நான்காம் பிரிவு - மூன்றாம் இடம் - அ.அன்ரனற் நிரோஜனி (முல்லைத்தீவு மகாவிததியாலயம்)

★ கவிதை ஆக்கம்: ஐந்தாம் பிரிவு - இரண்டாம் இடம் -அ.ஜெ.டெசினியஸ் (வித்தியானந்தாக் கல்லூரி)

★ பேச்சு: நான்காம் பிரிவு - இரண்டாம் இடம் - வே.கிளக்ஸா (யோகபுரம் மகாவித்தியாலயம்)

★ பாஓதல்: ஐந்தாம் பிரிவு - முதலாம் இடம் - ச.ஜெயந்திரன் (யோகபுரம் மகாவித்தியாலயம்)

★ இசையும் அசைவும்: முதலாம்பிரிவு - மூன்றாம் இடம் - ப.நிவாசினி (யோகபுரம் மகாவித்தியாலயம்)

★ தனி இசை: இரண்டாம் பிரிவு - இரண்டாம் இடம் - கு.பிரியங்கா (தண்ணீர் ஊற்று இ.த.க).

★ தனி இசை: மூன்றாம் பிரிவு - மூன்றாம் இடம் - க.வர்ஜிகன் (கலைமகள் மகா வித்தியாலயம்),

★ தனிநடனம்: இரண்டாம் பிரிவு - இரண்டாம் இடம் - க.ஜனரஞ்சினி (புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்),

★ குழு நடனம்: குழு 1 மூன்றாம் இடம் - உடையார்கட்டு மகாவித்தியாலயம்,

★ நாடகம்: திறந்த போட்டி - மூன்றாம் இடம் - புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்,

★ வில்லுப்பாட்டு - திறந்த போட்டி - மூன்றாம் இடம் - முல்லைத்தீவு மகாவித்தியாலயம்.

(-201)

## உடுவில் கோட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

வலி.தெற்கு,செப்.21

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் 14,16, 18 வயதுக்குட்பட்ட பிரிவினர்களுக்கிடையே நடைபெறவுள்ளன.

14வயதுக்குட்பட்ட அணியில் மூன்று பாடசாலைகளும் 16வயதுக்குட்பட்ட அணியில் ஏழு பாடசாலைகளும் 18வயதுக்குட்பட்ட அணியில் மூன்று பாடசாலைகளும் பங்குபற்றுகின்றன.

16வயதுக்குட்பட்ட அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

14வயதுப் பிரிவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், ஏழாலை மகாவித்தியாலயம் ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன.

18 வயது பிரிவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், கந்தரோடை தமிழககந்தையா வித்தியாலயம் ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன.

16 வயது 'ஏ' பிரிவில் இணுவில் இந்துக் கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம், மயிலணி மகாவித்தியாலயம் ஆகிய அணிகளும் -

'பி' பிரிவில் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம், இணுவில் மத்திய கல்லூரி, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய அணிகளும் பங்குபற்றுகின்றன.

போட்டிகள் யாவும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறும்.

இறுதிப் போட்டியும் மூன்றாம் இடத்துக்கான போட்டியும் 29ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும்.

உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் உடுவில் கோட்ட விளையாட்டுக் குழுச் செயலாளர் மு.நடராசா மேற்கொண்டு வருகிறார்.

இன்றைய போட்டிகளில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

16 வயதின்கீழ்ப் பிரிவு அணி

இணுவில் இந்துக் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசலை.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை.

18 வயதின்கீழ்ப் பிரிவு அணி

ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை. (10-86-152)

## குருபூசை

யாழ்ப்பாணம்,செப்.21

சிவஸ்ரீ சின்னத்தம்பி சுவாமிகளின் குருபூசை நாளை மறுதினம் வியாழக்கிழமையும், சிவஸ்ரீ முருகுப்பிள்ளை (கடவுள்) சுவாமிகளின் குருபூசை எதிர்வரும் 28 ஆம் திகதியும் மறவன் புலோ சமாதி மடத்தில் (புன்குத்தாரணம் செய்யப்பட்ட மடத்தில்) நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(10-202)

## தவறவிட்ட அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

நல்லூர் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் தவறவிடப்பட்ட பின்வரும் பெயர்களையுடையவர்களின் தேசிய அடையாள அடைகள் மற்றும் விசேட அடையாள அட்டைகள் யாழ்.மாநகரசபை இந்து விடுதியில் இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உள்ளன எனவும் உரியவர்கள் வந்து அவற்றைப், பெற்றுக்கொள்ளுமாறும் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.மரியதாசன் அறிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டைகளுக்குரியவர்களின் பெயர், விவரம் வருமாறு:-

ஜீவரட்ணம் பிரேம்குமார் (மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்), மல்லிகாதேவி வரதாசா, காசிலிங்கம் சசிகலா (வி.எச்.லேன், கோப்பாய்), ஜெகதீசன் செல்வமலர் (உடுப்பிட்டி), தவராணி விஜயதாசன் (புங்குடுதீவு), ராஜரட்ணம் உதயரஞ்சினி (கோண்டாவில் வடக்கு), ஜனாகி சண்முகரட்ணம் (தெகிவளை), கு.அனீஸ் மாறன் (விபுலானந்த வீதி), கந்தசாமி கிருபா (ஏழாலை).

விசேட அடையாள அட்டைக்குரியவர்களின் பெயர் விவரம் வருமாறு:

ராஜரட்ணம் உதயரஞ்சினி (கோண்டாவில் வடக்கு), தவராணி விஜயதாசன் (புங்குடுதீவு), சுதாகரன் கலைச்செல்வி (மணல்தறை லேன்), புஸ்பராணி குணசிங்கம் (பலாலி கிழக்கு), மல்லிகாதேவி வரதராசா, தங்கம்மா விஸ்வலிங்கம் (நுணாவில்), கிருபா நடேஸ்வரன் (ஏழாலை).

(10-202)

## கல்வியைத் தொடர நடவடிக்கை

சுழிபுரம்,செப்.21

சுழிபுரம் மேற்குப் பகுதியில் பாடசாலை செல்லாத மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்து அவர்களது கல்வியைத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கை மூலம் ஐந்து மாணவர்கள் அப்பகுதி சமுர்த்தி அலுவலர் மூலம் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படடுள்ளனர்.

பதின்னான்கு வயதுக்குட்பட்ட மாணவர்கள் பலர் பாடசாலைக்கு செல்லாது வீடுகளில் உள்ளனர் எனவும் அடுத்தகட்டமாக அவர்களையும் இணைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(4-161)

## இடம்பெயர் சேவை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.பிரதேச செயலகத்தினால் இன்று செவ்வாய்க்கிழமை நடத்தப்பட இருந்த ஜே/72, ஜே/73, ஜே/74 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான இடம்பெயர் சேவை தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இந்துப் பிரிவுகளுக்கான இடம்பெயர் சேவை நடத்தப்படும் திகதி குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(10-202)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 03 1927



ஆண்டவன் அடியில் 22 08 2004

**அமரர் முருகேசு கந்தையா**

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை ஆளாக்கி வழிநடத்திய எங்கள் அன்பு அப்பாவே!
மாதம் ஒன்று சென்றாலும் அப்பா!
உங்கள் முகம் இன்னும் எம் நினைவுகளில் பசுமையாய் நிலைத்திருக்கின்றது. நீங்கள் நடமாடித் திரிந்த இடமெல்லாம் இன்று வெறுமையாய் இருக்குதப்பா!
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல திக்கரை முருகனை பிரார்த்திக்கின்றோம்

திக்கரை களபூமி, காரைநகர்.

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(36709) (32-11-16)


## கைதடியில் திலீபன் நினைவுதின நிகழ்வு

கைதடி,செப்.21

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டிய ஆரம்ப நாள் நிகழ்வுகள் கைதடிப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகின.

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுசங்க உதவிப்பொது முகாமையாளர் ம.குமாரதேவன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. இந் நிகழ்வையொட்டி கைதடிச்சந்திப் பகுதி சிவப்பு, மஞ்சல நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

இதேவேளை, திலீபன் ஞாபகார்த்தமாக கைதடிச் சந்தியில் உள்ள பொதுச்சந்தை புனரமைக்கப்பட்டு அன்றைய தினம் தென்மராட்சி தேசிய எழுச்சிப்பேரவை இணைப்பாளர் இ.கந்தசாமி தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தீ.சு.கலைவாணன் நாடா வெட்டி சந்தையைத் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். (10-75)


## மரண அறிவித்தல்

**வேலாயுதம் தியாகராஜா**



இல.17/11, கலைப்புலவர் வீதி, பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொணட காலஞ்சென்ற வேலாயுதம் நாகலெட்சுமி அவர்களின் மூத்த புதல்வன் தியாகராஜா நேற்று (20-09-2004) திங்கட்கிழமை அதிகாலை 1.45 மணிக்குக் காலமானார்.

அன்னார் வேலாயுதம் நடராஜா (பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமை புரிந்தவர்), வேலாயுதம் சண்முகராஜா (கனடா) ஆகியோரின் அண்ணனும் லோகநாயகி, யமுனா ஆகியோரின் மைத்துனரும் நளாயினி, சங்கீதா, சஞ்சன், கோபிநாத் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-09-2004) செவ்வாய்க்கிழமை காலை (பழைய நேரப்படி) 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/11, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம். (36703)(26-11-18-32)

தகவல்: வே.நடராஜா (தம்பி).

# ஈ.பி.டி.பி. கொழும்பில் சவப்பெட்டி ஆர்ப்பாட்டம்

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் முன்பாக ஈ.பி.டி.பியினர் நேற்று சவப்பெட்டியை வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சனிக்கிழமை புத்தளத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட தமது அமைப்பின் யாழ்.மாவட்ட துணை அமைப்பாளரும் புத்தளம் மாவட்ட அமைப்பாளருமான தம்பித்துரை சிவகுமாரனின் சடலத்தைத் தாங்கிய சவப் பெட்டியை வைத்துக்கொண்டே அவர்கள் இந்த ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டது. போர்நிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டோர் வடக்கு - கிழக்கில் ஏனைய கட்சிகளின் ஜனநாயகச் செயற்பாட்டிற்கு வழிவிடவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டோர் கோஷங்களை எழுப்பினர்.

நோர்வேத்தூதரகம் முன்பாக ஈ.பி.டி.பி யினர் இவ்வாறு சவப்பெட்டியுடன் ஆர்ப்பாட்டம் நடத்தியமை இது இரண்டாவது தடவையாகும். (க-3)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள சக உத்தியோகத்தர்

திரு. தூயகுமார் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கனகம்மா வேலாயுதபிள்ளை** அவர்களின்

அகால மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சி அடைவதுடன், துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.பல்கலைக்கழகம்.** பாதுகாப்பு உத்தியோகத்தர்
(36720)(38-12-17-43) நலன்புரிச் சங்கம்.


## இயற்கை (மூலிகை) வைத்தியம்

இயற்கை மூலிகை வகைகள் மற்றும் யோகாசன சிகிச்சைகள் மூலம் தீராத தோல் நோய்கள், ஆண்மைக்குறைவு, ஆஸ்துமா, உடல்பருமன், தலைமுடி உதிர்தல், நாரி உளைவு, கைகால் விறைப்பு, மூலவியாதிகள், வாதம், தலையிடி, மாதவிடாய்ப் பிரச்சினைகள், வெள்ளைபோதல், குடிவெறி போன்றவைகள் முற்றிலும் குணமாக்கலாம். எக்ஸிமா, சொரியாசிஸ் மற்றும் இதர தோல் நோய்களும் குணமாக்கலாம்

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :
Dr.R.K.நவநீதன DYNS.SMP.NC

(இயற்கை மூலிகை
மருத்துவ நிபுணர்)
54,மணிக்கூட்டு வீதி
(யாழ்.பயணியர் விடுதி)
(வெலிங்ரன் சந்தி-முனீஸ்வராகபே
அருகில்), யாழ்ப்பாணம்.

இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை யாழில் சந்திக்கலாம்.

(36714) (43-12-17)

யோகாசன CDகள் மற்றும்
யோகாசன புத்தகங்கள் கிடைக்கும்


## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா வேலாயுதபிள்ளை



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் அரியா லையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளைகனகம்மா அவர்கள் 19.09.2004 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவகுமாரன் (எழுது வினைஞர், யாழ்.பல்கலைக்கழகம்), தூயகுமாரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்), யோகமலர், மல்லிகாமலர் (லண்டன்), புனிதமலர் (லண்டன்), குசலகுமாரன் (ஹொலண்ட்), சந்திரமலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நவரத்தினம் (பாதுகாப்பு உத்தியோகத்தர்,யாழ்.மாநகரசபை), புவனேஸ்வரன் (லண்டன்), கெங்காதரன் (லண்டன்), ஞானசீலன் (லண்டன்), தியாகவதி, ஹேமநந்தினி (சங்கீத ஆசிரியர்,சென்.யோசப் வித்தியாலயம்), விமலினி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பபிஸ்ரா, பிறேமானந்த், காலஞ்சென்ற போல்கஜேந்திரன் மற்றும் பொறின் ரேணுகா, றெஜினோல்ட் டினேஸ்காந்த், பேனாட்ரிஷாநத், போல் கஜேந்திரன், சிவானுஜா, சிவானுஜன், பவானுஜன், சிவகஜேந் திரன், திர்ஷா (ஹொலண்ட்), ரேத்ஷின் (ஹொலண்ட்), பானுப்பிரியா (லண்டன்), மகிழன் (லண்டன்), அனுஜன் (லண்டன்), லக்ஷிகா (லண்டன்), நந்துஜன் (லண்டன்), பிறின்சிஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2004) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.45, புவனேஸ்வரி அம்பாள் வீதி,*
*அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.*
(36719)(38-12-17-43)

தகவல்
க.வேலாயுதபிள்ளை
(கணவர்.)






நேற்று முன்தினம் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெற்ற திருக்குமரன் கவிதைகள் நூல்வெளியீட்டு விழாவில் எடுக்கப் பட்ட படங்கள் இவை. தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நூலை வெளியிட்டு வைக்க அதன் முதற் பிரதியை யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் க.சிவராம லங்கம் பெற்றுக் கொள்வதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: அலுவலகப்படப்பிடிப்பாளர்)

## பல்கலை ஊழியர் நேற்று ஆர்ப்பாட்டம்

தென்கிழக்குப் பல்கலைகழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று ஒலுவில் களியோடைப் பாலத்தடியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற் கொண்டனர். பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக் கோரி கடந்த முதலாம் திகதி தொடக்கம் அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாக அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றும் சரியான தீர்வு ஒன்று எட்டப்படாமல் இழுபறி நிலைதொடர்வதைக் கண்டித்தே இந்த ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டது. தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் ஏ.ஆர்.எம்.மஹிர் தலைமையில் பல்கலைக் கழக நுழைவாயிலில் இருந்து ஊழியர்கள் சுலோக அட்டைகளை ஏந்திய வாறு கோஷமிட்டு ஒலுவில் களியோடைப் பாலம் வரை ஊர்வலமாகச் சென்று அங்கு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

★ அரசே!ஊழியர்களின் பிரச்சினை களைத் தீர்த்து உடனடியாகப் பல்கலைக் கழகங்களைத் திற.

★ பல்கலைக்கழக ஊழியர்களின் பணிநிறுத்த விடயத்தில் அரசு அலட்சியப் போக்கைக் கடைப்பிடிப்பது ஏன்?

★ ஊழியர்களின் பிரச்சினைகளைக் காட்டிப் பல்கலைக்கழங்களை மூடி வைப்பதை நிறுத்து. - போன்ற கோஷங்களை அவர்கள் எழுப்பினர். (த-3)

## அவசர கலந்துரையாடல்

பொருளியல்துறை 4ஆம் வருட சிறப்புக் கலை மாணவர்கள் இன்று (21.09.2004) செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு பொருளியல்துறை விரிவுரை மண்டபத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(36715) வருடப்பிரதிநிதி.


ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
அர்ஜுன், லாராதத்,
ரகுவரன், விவேக் நடிக்க
அரசாட்சி
பு.நே. 10.30 2.30 6.30 9.30
ரிக்கெத் முற்பதிவு
(36364) செய்துகொள்ளலாம்.



நீலராஜ்கனால்ஸ் சங்கானை

கமல். பிரபு. சினேகா
நடித்த
வசூல்ராஜா MBBS
வெள்ளி. சனி. ஞாயிறு.
தினசரி: 11.00, 2.45, 6.00 புதுநே
(C/36305)(12) Return to tow Moon Junction (இரவு 8.45 புநே.)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று மட்டும்
தனுஷ். சிந்துதுலானி. கருணாஸ்.
மணிவண்ணன் நடிப்பில்
சுள்ளான்
காட்சிநேரம்:11.00, 3.00, 7.00 (புதியநேரம்)
(C-36415)(12)




## மரண அறிவித்தல்கள்

### நடராஜா இரத்தினதுரை

**(முன்னாள் CTB சாரதி)**



10/2, மூத்தவிநாயகர் கோயிலடியைப் பிறப் பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா இரத்தினதுரை 15.09.2004 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் நடராஜா - பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் திரு.திருமதி கிருஷ்ணபிள்ளை - பாக்கியம் ஆகியோரின் மருமகனும் அன்னலட் சுமியின் அன்புக் கணவரும் அனிதா (பிரான்ஸ்), வனிதா, ஜெனிதா (லண்டன்), வினிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினம் (பிரான்ஸ்), தவலிங்கம் (டோகா), கேசவன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் இராஜதுரை, துரைராஜா, இராசகுணமணி, சரஸ்வதி, இராஜேஸ்வரி, சறோஜா ஆகியோரின் சகோதரரும் பாலசிங்கம், ஈஸ்வரபாதம், வைரவநாதன் ஆகியோரின் மைத்துனரும் அபிராமி, அஸ்வினி, கார்த்திகன், இனோஜா, அபிஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2004) செவ்வாய்க் கிழமை 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*குறுக்கு வீதி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (36716)(43-12-17)

தகவல்:
மனைவி, மக்கள்.

### திருமதி மனோன்மணி தில்லையம்பலம்

காரைநகர்,களபூமி காளிகோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட (ஆசாரி) தில்லையம்பலம் மனோன்மணி அவர்கள் நேற்று (20.09.2004) திங்கட்கிழமை கொக்குவிலில் காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2004) செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் கொக்குவிலில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*கல்லூரி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (36718)(43-12-17)

தகவல்:
குடும்பத்தினர்.

### ஆனந்தசுந்தரம் சண்முகராசா

**(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)**



சூறாவத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமா கவும் கொண்ட ஆனந்தசுந்தரம் சண்முகராசா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) அவர்கள் நேற்று (20.09.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்த சுந்தரம்-சௌந்தலம் தம்பதியினரின் அன்பு மகனும் ரஞ்சிததேவியின் அன்புக் கணவரும் பகிரதன் (கப்பல் பொறியியலாளர்), காலஞ் சென்ற சுதாகரன் மற்றும் உஷாயினி (பாரின்) ஆகி யோரின் அன்புத் தகப்பனாரும் சுரேஸ்குமார் (பாரின்), இந்திராதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் சஞ்சீவ், தனுஷா, சுயர்சினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சூராவத்தை,*
*சுன்னாகம்.*
(36717)(43-12-17)

தகவல்:
மனைவி.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

**அன்புடையீர்!**

கடந்த 23.08.2004 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு**

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

அவர்களின் அந்தியேஷ்டி, சபிண்டிகரணக் கிரியைகள் 22.09.2004 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இரும்பு மதவடி,
வதிரி, கரவெட்டி. (37735)(38-12-17-43) குடும்பத்தினர்.

## கோட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டிகள்

ஊர்காவற்றுறை,செப்.21

ஊர்காவற்றுறை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக் கிடையிலான உதை பந்தாட்டப் போட்டி கள் இன்றும் நாளை யும் ஊர்காவற்றுறை புனித அந்தோனி யார் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

போட்டிகள் தின மும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமா கித் தொடர்ந்து நடை பெறும். (3-16)

# கிளிநொச்சியில் நேற்று இலவச மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம்,செப்.21

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் நேற்று இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் ஒன்று நடைபெற்றது.

யாழ். மருத்தவ பீட சமுதாய மருத்துவத் துறை மாணவர்களால் கிளிநொச்சி மருத்துவ சங்க ஆதரவுடன் உதயனின் ஊடக அனுசர ணையுடன் இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

உருத்திரபுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி பற்றிமா றோ.க.பாடசாலை, கிளிநொச்சி இந்து ஆரம்பப் பாடசாலை, கிளிநொச்சி கனகாம்பிகை அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் நேற்று இம்மருத்துவ முகாம் இடம்பெற்றது.

இம்மருத்துவ முகாமில் பல், காது, தோல் மற்றும் கண் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வைத்திய சிபார்சுகளும் வழங்கப்பட்டன.

மருத்துவமுகாம் இன்று செவ்வாய் மற்றும் நாளை புதன்கிழமைகளிலும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இடம்பெறவுள்ளது. (எ-9-305)

## அரசையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளைக் கோரிய அவர், பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருவது தொடர்பாகவும் அரசியல் படுகொலைகள் தொடர்வது சம்பந்தமாகவும் கனேடிய அரசின் ஆழ்ந்த கவலையையும் புலிகளுக்குத் தெரிவித்தார்.

மனித உரிமைகளை மதித்துப் பேணும்படி தூதுவர் புலிகளை மேலும் கேட்டுக்கொண்டார்.

சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பது தொடர்பான குழப்பம் தரும் செய்திகள் குறித்து கனடா தொடர்ந்து கவலையடைந்துள்ளது.

இயன்ற விரைவில் பேச்சுக்களைத் தொடங்குவதற்காக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் ஓர் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தனது முயற்சியைத் தொடரும்படி இலங்கை அரசை கனேடிய அரசு கேட்டுக் கொள்கின்றது.

சமாதான நடவடிக்கைகளை முன்நகர்த்துவதற்காக பல தரப்பு ஆதரவையும் பெறும்படியும் இலங்கை அரசைக் கனடா கோருகிறது.

இலங்கை மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை நிறைவுசெய்யக்கூடிய வகையில் பேச்சுமூலம் தீர்வு காண்பதே நிலையான சமாதானத்துக்கு ஒரே மார்க்கம் எனக் கனடா கருதுகின்றது.

இறுதித்தீர்வை எட்டுவதற்கான திசையில் முன்நகர்வதற்கு வழிசெய்யும் விதத்தில் தற்போதைய தேக்கநிலையைத் தகர்ப்பதற்காக திடமான நடவடிக்கைகளை எடுக்கும்படி அரசையும் புலிகளையும் கனேடியத் தூதுவர் கேட்டுக்கொண்டார்.

பிணக்கால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் புனரமைப்புக்கும் கனடா தொடர்ந்து உதவுவதோடு, ஆட்சி முறையில் அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களில் உரிய நிபுணத்துவ உதவிகளை வழங்கவும் அது தயாராக இருக்கிறது - என்று அந்த அறிக்கையில் உள்ளது. (எ-க-3)

## 'பொங்கு தமிழ்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடும் செயற்பாட்டை மதிக்கும் கோட்பாட்டை உடைய ஜனநாயக நாடான கனடா அரசிடம் குழப்பும் செயற்பாடுகள் எடுபடமாட்டது என்று அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும்படி கனடாவிடம் கேட்டீர்களா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையில்:-

விடுதலைப் புலிகளின் இன்றைய நிலைப்பாட்டையும் முன்னெடுப்புப்பையும் அறிவதில் கனடாத் தூதர் பெரும் ஆர்வம் காட்டினார். விடுதலைப் புலிகள் தொடர்பாக ஆக்கபூர்வமான செயற்பாடுகளை வெளிக்காட்டுவார்கள் எனக் கருதுகிறேன் - என்றார்.

வடக்கு - கிழக்குக்கு உதவிகள் வழங்குவது குறித்துப் பேசினீர்களா எனக்கேட்டதற்கு-

கனடா அரசு மட்டும் அல்ல. சர்வதேச சமூகமும் உதவிகளை வழங்குவதில் கரிசனை காட்டுகின்றன. நிரந்தரத் தீர்வு எட்டப்பட்டு இயல்புநிலை ஏற்பட்ட பின்னர், உதவிகள் தாராளமாக வந்துசேரும்.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான எமது நிலைப்பாட்டை விளக்கிக் கூறினோம். சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் விடயத்தில் அரசின் இழுத்தடிப்பால் உருவாகியுள்ள நெருக்கடி நிலை குறித்து விளக்கினோம்.

தமிழ்மக்களின் அபிலாஷைகளின் அடிப்படையில் தீர்வு ஒன்றைக் காண்பதில் எமது தலைப்பீடம் கொண்டுள்ள உறுதிப்பாட்டையும் விளக்கினோம். எமது கருத்துக்கள் தொடர்பாக கனடா தெரிவித்த கருத்துக்கள் எமக்கு உற்சாகமூட்டுவனாக அமைந்திருந்தன - என்று தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின்னர், கனடா தூதர், கிளிநொச்சியில் உள்ள வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்துக்கும் சென்றார்.

அச்செயலகத்தின் தலைவர் வண.எம். எக்ஸ. கருணரத்தினம் அடிகள செயலகத்தின் செயற்பாடுகள் குறிதது விளக்கிக் கூறினார்.(எ-3)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off stanly Rd)
Tel:0777222422
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
QUICK BOOKS PRO + ACCPAC + MYOB
ஆரம்பம் 25-09-2004
காலம்:- 4மாதம்
(C-37730)

LONDON ENGLISH COLLEGE
No. 105 (71), Arasady Road, Jaffna.
T.P.:- 222 5889, +94 777 252180, +94 776 303539
e-mail:- ecjaffnabranch@yahoo.com
ENGLISH CLASSES FOR A NEW BATCH
Start on Thursday ..........................
23/09/2004 at 2.00p.m.
A SPECIAL TRAINING IN THE ESSENTIAL SKILLS OF LISTENING, SPEAKING, READING AND WRITING
ADMISSIONS ON........................
Call at the office between 8.30a.m and 4.30 p.m.
Principal
அனுமதிகள் ஆரம்பம்............
சிறுவர்களுக்கான ஆங்கில வளமாக்கல் நிகழ்ச்சிகள்
[English Language Enrichment Programmes]
6-7 வயது 8-9 வயது 10-12 வயது
23-09-2004 வியாழன் பிற்பகல் 3.30 மணிக்கு வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
(C/37726)(38-13-14)
அதிபர்.

# கனடா 'பொங்கு தமிழ்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்களைச் சந்தித்துக்கோரி வருகின்றார் என்று கூறப்படுகிறது.

இந்த நிகழ்வைத் தடுத்து நிறுத்துவதற்காகக் கனேடிய எம்.பிக்கள் அவ்விடயத்தில் விரைந்து தலையிடவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வருகின்றார்.

ஆனால், திட்டமிட்டபடி ரொறன்ரோ நகர மத்தியில் உள்ள குயின்ஸ் பார்க்கில் இந் நிகழ்வு நடைபெறும் என அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'கனேடியத் தமிழரின் பெரும் ஐக்கியத்தையும் தமது தாயகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகளுக்கு அவர்களது ஒன்றுபட்ட ஆதரவையும் வெளிப்படுத்துவதாக 'பொங்கு தமிழ்' அமையும் என கனேடிய தமிழ் மாணவர் சங்கத்தின் ஊடகத் தொடர்பாளர் போல் ரெஜிஸ் தெரிவித்தார்.

இடைநிறுத்தப்பட்ட சமாதனப்பேச்சுக்கள் இதற்கு மேலும் தாமதப்படுத்தப்படாமல் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும். இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையே அந்தப் பேச்சுக்களுக்கான ஆரம்ப அடிப்படையாக அமைய வேண்டும் என்பதே எமது செய்தியாகும் என்றார் - அவர்.

'கனடாவில் உள்ள வெளிநாட்டவர்களில் தமிழர்களே மிக அதிக தொகையினர். அந்தத் தமிழினத்தின் இளைஞர்கள் என்ற முறையில் நாம் கனடா அரசிடம் கோரிக்கை ஒன்றை விடுக்கின்றோம். இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதில் கனடா அரசு முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள் - என்றும் அவர் சொன்னார்.

பல்வேறு வித்தியாசமான இனங்கள் அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ்வதற்கு வாய்ப்பாக எமக்கு உள்ள முறைமைகளில் கனேடிய சமஷ்டி முறைமை சிறந்த ஒன்றாகும்.

கனடாவின் பல்லினக் கலாசார முறைமை, உலகம் பின்பற்றுவதற்கு சிறந்த முன்னுதாரணமுமாகும் என்றும் றெஜிஸ் தெரிவித்தார்.

அமைதி நடவடிக்கையை முன்நகர்த்துவதோடு, தமிழர்களின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு நடவடிக்கையே பொங்கு தமிழ் நிகழ்வாகும் என்றார் அந்நிகழ்வில் பொதுசனத்தொடர்பு அதிகாரியான கண்மணிநாதன்.

யாழ். பல்கலைகக்கழ மாணவர்களால் 2001 ஜனவரியில் முதன்முதலில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வு பின்னர் தமிழர் தாயகம் எங்கும் நடத்தப்பட்டது. தொடர்ந்து ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, டென்மார்க் உட்பட பல்வேறு நாடுகளிலும் நடத்தப்பட்டது.

இம்முறை கனடாவில் நடக்கும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு பதினேழு வாராந்த சஞ்சிகைகள், இருபத்தினான்கு மணிநேர வானொலி சேவைகள் - ஐந்து தொலைக்காட்சிச் சேவை நிறுவனங்கள் இரண்டு மற்றும் பல மல்டி மீடிய நிறுவனங்களும் ரொறன்ரோ தமிழர் சமூகமும் ஆதரவளிக்க முன்வந்துள்ளன. (எ-க)

## ரத்னசிறிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு இல்லை என ரத்னசிறி விக்கிரமநாயக்க சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்று நிராகரித்திருந்தது.

இந்த நிராகரிப்பை எதிர்த்து, ரத்னசிறி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார். அதில் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான அரசமைப்பு விடயங்களுக்கு விளக்கங்கள் வழங்கி அதனடிப்படையில் முடிவு எடுக்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு இல்லை என்றும் -

இந்த அதிகாரம் உயர் நீதிமன்றுக்கு மாத்திரமே உள்ளது என்றும்-

இந்த அதிகாரத்தை மேன்முறையீட்டு நீதிமனறு தன்னுடையதாக்கி, அரசமைப்புக்கு வியாக்கியானம் கொடுத்து, அதனடிப்டையில் தமது மனுவை நிராகரித்துள்ளது என்றும் -

உயர் நீதிமன்றத்தில் ரத்னசிறி விக்கிரம நாயக்க சார்பில் தாக்கல்செய்யப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான நீதிபதிகள் குழு முன் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

## பரப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் நகரிலிருந்து 16 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள பரப்புக்கண்டான் இராணுவ முன்னரங்கு சோதனைச் சாவடியில் வைத்தே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று இவர் மேலதிக விசாரணைக்காக முருங்கன் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (எ-க)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரணி அ.விநாயகமூர்த்தி எழுப்பியிருந்தார்.

பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினராக இருப்பதால் பேராசிரியர் குமாரவடிவேல் பல்கலைக்கழக நிர்வாகத்தின் சார்பில் வாதிட முடியாது என்று சட்டத்தரணி தெரிவித்து தமது ஆட்சேபத்தைச் சமர்ப்பித்தார்.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் சார்பில் சட்டத்தரணி எஸ்.கோடீஸ்வரன் ஆஜராகி இருந்தார்.

விசாரணைகள் தொடர்ந்து இன்றும் நாளையும் இடம்பெறவிருக்கின்றன. (எ-3-5)

## எதிரணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடப்பாடு எனக்குண்டு.

எனவே, அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன்.

ச.தொ.சவின் சகல பிரிவினரையும் அழைத்துப் பேச்சு நடத்துகின்றேன். தற்பொழுது குறிப்பிட்ட ஒரு குழுவின் கைகளில் முடக்கப்பட்டுள்ள உணவுப்பொருள்களினதும், அத்தியாவசியப் பொருள்களினதும் இறக்குமதியை ச.தொ.ச. நிறுவனத்திடம் ஒப்படைக்கத் திட்டமிட்டுள்ளேன். ச.தொ.ச. மூலம் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நியாய விலையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும். இதனால், நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமையினை ஒழிக்க முடியும் - எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.. (எ-க)

## போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்திருந்தார்.

நோர்வே அனுசரணைக் குழுவினரை கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தித்த சமயம் ஏ-9 பாதை ஊடான போக்குவரத்து நேரத்தை நீடிப்பதற்கு அரசு முடிவுசெய்துள்ளது என்று ஜனாதிபதி அவர்களிடம் கூறினார் என அச்சந்திப்பின் பின்னர் வெளியான ஜனாதிபதி செயலகச் செய்திக்குறிப்பு தெரிவித்திருந்தது. இது பற்றிக் கருத்துக் கேட்டபோது, செஞ்சிலைச் சர்தேசக் குழுவின் அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

ஏ-9 பாதையின் போக்குவரத்து நேரத்தை நீடிப்பது தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்கள் இரு தரப்பினருடன் கலந்தாலோசனை நடத்தி இணக்கம் ஏற்படவேண்டும். அதன்பின அந்த முடிவு எமக்கு அறிவிக்கும் பட்சத்தில் எமது பணியை நாம் மேற்கொள்ள முடியும். எதிர்வரும் முதலாம் திகதி முதல் நேர நடிப்புத் தொடர்பாக இது வரை எமக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றார் அவர். (எ-3)

கலையகம்
ஆவரங்கால்
Spoken English
By:- Britto
23/09/2004
(வியாழன்) புதிய பிரிவுகள் ஆரம்பம்
மாலை வகுப்பு
(ப.நே - 5.00)
(36691)(38)

இந்திய பரம்பரை ஜோதிடர்
அருள்வாக்கு
அம்பிகா அம்மா
மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.

உங்களுக்கு எந்தவகையான பிரச்சினைகள் ஆனாலும் ஜாதக ரீதியாக கிரகதோசம் நீக்கி, நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறவும் வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி? என்பதை அறிந்து கொள்ளவும் இன்றே அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில சந்திக்கவும். சந்திக்கும் இடம்:
அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / லிங்கன கூல்பார் அருகில்).
H.P.No. 077 6127444, 077 6172644
(36713)(38-13-14)

## மரண அறிவித்தல்

### சண்முகம் லோகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற உதவிப்பொறியியலாளர் - கட்டடத் திணைக்களம்)



வட்டு. வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், M/14, சொய்சாபுர தொடர்மாடி, மொறட்டுவவில் வசித்தவருமான சண்முகம் லோகேஸ்வரன் அவர்கள் நேற்று (20.09.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம மாணிககம் தம்பதிகளின் புதல்வரும் மஞ்சுளாவின் அருமைக் கணவரும் சுமதி (கனடா), அமரர் மனோகரன் ஆகியோரின் அருமைத் தந்தையும் ரங்கன் (கனடா) அவர்களின் மாமனாரும் ஸ்ரீராம், ஸ்ரீநிதி ஆகியோரின அன்புப் பேரனும் அமரர் தங்கரத்தினம், செல்வரத்தினம், அமரர் அழகரத்தினம், பாக்கியரத்தினம் ஆகியோரின் சகோதரனும் அமரர் ஆ.புண்ணியமூர்த்தி, அமரர் கி.வேலாயுதம்பிள்ளை, அமரர் பொ.தெய்வேந்திரம், வே.பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மகிந்த புளோறிஸ்ற், கல்கிசையில் நாளை (22.09.2004) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

M/14, சொய்சாபுர
தொடர்மாடி, மொறட்டுவ.
T.P.0112 622526

தகவல்:
வே.பொன்னம்பலம்
(மைத்துனர்) (பாக்கியரத்தினம் ஹெட்வெயர் ஸ்றோர்ஸ், சங்கானை) T.P.021 222 2664

(C-37736)(38-13-14)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.